111
குண்டூசி
ஜூன்
எட்டு அணா
ஜீவரத்னம் · கோவிந்தன் நடிக்கும்
ஸ்ரீ ஆண்டாள்
டைரக்ஷன்: வேல்சாமி கவி
பிலிம்ஸ் · எக்ஸ்பிடென்ஷன் · சேலம்

திரையிடத் தயார்!

கே. ஆர். ராமசாமி, ஏ. ஆர். சகுந்தலா, ஜி. சகுந்தலா, எஸ். எம். ஷயிகப்பா,
ஆர். பாலசரஸ்வதி தேவி, புளிமூட்டை, எம். ஜெயஸ்ரீ, அங்கமுத்து & களிமண்ணு

நடித்த

பில்ஹணா

அல்லது **கவியின் காதல்**

டைரேக்ஷன் :
பின். என். ராவ்

ஸ்டுடியோ :
ப்ரகதி

பிரதேச உரிமைகள்

மைசூர், குடகு & தென்கன்னடம்
கே. வி. ஆதிநாராயண செட்டி &
எஸ். ஆர். திவாகர செட்டி,
கொள்ளேகாலம்.

தென், வட ஆற்காடு, பாண்டிச்சேரி,
சித்தூர் உட்பட
விஜயஸ்ரீ பிலிம்ஸ், பிராடீஸ் ரோடு,
மைலாப்பூர், மதராஸ்-4

இதர விவரங்களுக்கு :

ஆர். எம். பாகஷா, மானேஜிங் டைரெக்டர்,

முபாரக் பிக்சர்ஸ், 47, லாங்ஸ் கார்டன் ரோடு, மதராஸ்-2

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1948
MADRAS

சென்னை கிரௌன், ஸ்டார் இரு தியேட்டர்களிலும், மற்றும் ராஜதானி பூராவும் அநேக நகரங்களிலும் இப்பொழுது நடைபெறுகிறது.

ஜெமினியின்

ஞான சௌந்தரி

பி. கண்ணாம்பா
எம். கே. ராதா
வி. எஸ். சுசீலா
டி. ஆர். ராமச்சந்திரன்
எல். நாராயண ராவ் நடித்தது

டைரக்ஷன்
முருகதாஸா

சென்னையில் தினசரி 3 காட்சிகள்: 3, 6-15, 9-30.

"FORTIS"

FOR PRESENTATION

Rolled Gold 15 Jewels Rectangular shape, Fancy Dials, Extra fine quality Lever Movement, Beautiful appearance.

NO DOUBT IT IS A GENTS ORNAMENT

Rs. 80/- ONLY. GUARANTEED 2 YEARS

JALAL & SONS

MADRAS, MOUNT ROAD & HYDERABAD (DN.)

நீல மாளிகை

மதுரையில், மனதிற்குத் திருப்தி அளிக்கும்

பட்டு, ஜரிகை, நூல் ஜவுளிகள்

கண்ணைக் கவரும் ரகங்களில் கிடைக்கும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்.

கே. எஸ். பெருமாள் முதலியார் & சன்ஸ்

3/4 தெற்கு சித்திரை வீதி, மதுரை.

குண்டூசி

பிரதி மாதம் வெளிவரும்

தமிழ் நாட்டின் அதிக விநியோகமுள்ள கலைப் பத்திரிகை

சந்தா விவரம்

உள் நாடு

வருஷ சந்தா	... ரூ.	6
ஆறுமாத சந்தா	... ரூ.	3
தனிப் பிரதி	அணா	8

இலங்கை

வருஷ சந்தா	... ரூ.	6
தனிப் பிரதி	சதம்	50

வெளி நாடு

வருஷ சந்தா	... ரூ.	9
தனிப் பிரதி	அணா	12

விளம்பர விகிதங்கள்

(ஒரு தடவைக்கு)

அட்டை

முன் பக்கம்	... ரூ,	450
கடைசி பக்கம்	ரூ.	250
2&3-ம் பக்கம்	ரூ,	150

சாதாரணப் பக்கம்

ஒரு பக்கம்	... ரூ.	75
அரைப் பக்கம்	... ரூ.	40
1/3 பக்கம்	... ரூ.	30
கால் பக்கம்	... ரூ.	25

வர்ண விளம்பரங்களுக்கு
25% அதிகம்

இந்த ஊசியில்

சினிமாவில் தேசியக் கொடி	தலையங்கம்	5
உள்ளது உள்ளபடி	"ஜடாயு"	6
ஜெமினி ஞானசௌந்தரி	படவிமர்சனம்	8
தமாஷ் வீடு	கேலிச் சித்திரம்	9
மறைந்த நக்ஷத்திரம் ...	கு. ரா.	10
ஏ. ஆர். சகுந்தலா ...	ஆர்ட் படம்	13
வி. என். ஜானகி	மூவர்ணப் படம்	14
வி. என். ஜானகி	வாழ்க்கை வர்ணனை	15
குண்டூசியைக் கேளுங்கள் ...	...	23
செய்திப் படங்கள்	... ...	... 31
பொதுஜனம் பேசுகிறார் ...	...	39
இது செய்தி	... ...	... 43
சந்திரலேகா	"மார்ஸ்"	48
நுனிப் புல்	"வெட்டுக்கிளி"	54
பி. எஸ். சரோஜா ...	ஆர்ட் படம்	55
எம். கே. ராதா	ஆர்ட் படம்	56
மறந்த சம்பாஷணை	தமாஷ் சித்திரம்	59
கடைசிச் செய்திகள்	... ...	... 65
பக்த ஜனா ...	பட விமர்சனம்	66
பிரம்மலோகம்	படச் செய்திகள்	67
குண்டூசி டைரி	... ...	... 68

கட்டுரையாளர்களுக்கு :

"குண்டூசி"க்கு கேள்விகள், நேயர்களின் அபிப்பிராயங்கள், வெளியூர் சினிமா நிகழ்ச்சிகள், சினிமா சம்பந்தமான விகடத் துணுக்குகள், சித்திரங்கள், கட்டுரைகள், கதைகள் இவையெல்லாம் வரவேறகப் படுகின்றன. எழுதி அனுப்புபவைகளை காகிதத்தின் ஒரே பக்கத்தில் மையினால் சுத்தமாக எழுதி அனுப்ப வேண்டும். அங்கீகரிக்கப்படாதவைகளை திரும்பப் பெற விரும்புகிறவர்கள் ஸ்டாம்பு வைத்தனுப்ப வேண்டும். கட்டுரையாளர்களுடன் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொள்ளுவது சாத்தியமில்லை.

"குண்டூசி", 246, கம்பு செட்டி தெரு, சென்னை 1

WATCHES · CLOCKS
TIME PIECES · FOUNTAIN PENS
ROLLED GOLD JEWELLERY
GIFT ARTICLES, ETC.

E. A. WATCH COMPANY

ESTD 1915

RATTAN BAZAR
— MADRAS —

கமர்ஷியல் பிராஸஸ்

சிறந்த பிளாக் தயாரிப்பாளர்கள்

லைன், ஆப்டோன், லைன் & ஆப் டோன், இரண்டு கலர், மூன்று கலர் முதலிய பிளாக்கு களை சுத்தமாகவும் குறித்த காலத்திலும் செய்து தருகிறோம்.

விவரங்களுக்கு :

கமர்ஷியல் பிரின்டிங் & பப்ளிஷிங் ஹவுஸ்,

46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.

Telephone : 4037 Post Box Mo : 1569
Telegrams : "PRINT HOUSE"

பட்டை 1 ஊசி 9

குண்டூசி

ஜூன் 1948

ஆசிரியர்
பி.ஆர்.எஸ்.கோபால்

சினிமாவில் தேசீயக் கொடி

இந்தியா சுதந்திரம் அடைந்தது முதல் தேசீயக் கொடி, தேச கீதம் இவை பற்றிய பிரச்னை முக்கியமானதாகி விட்டது.

அது பற்றி விவாதங்களும், ஆலோசனைகளும் நடந்து வருகின்றன. இந்திய சர்க்கார் திட்டமான ஒரு முடிவுக்கு வராதிருப்பதால், தேசப் பற்றுமிருந்த சில பட முதலாளிகளும் தியேட்டர்காரர்களும் தத்தம் உசிதப்படி தேசீயக் கொடியையோ தேசீய கீதங்களையோ உபயோகித்து வருகின்றனர்.

ஆனால் இப்பொழுதோ இந்திய சர்க்கார் இந்த விஷயங்களைப் பற்றிய தீர்மானத்திற்கு வந்துவிட்டனர். தேசீயக் கொடி சம்பந்தமாக ஒரு அறிக்கையையும் அவர்கள் விட்டிருக்கிறார்கள். படத் தயாரிப்பாளர்கள் இவ்வறிக்கையின் சாராம்சத்தைத் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும்.

இவ்வறிக்கையில், தேசீயக் கொடியானது யார் யாரால், எப்பொழுது, எந்த முறையில் உபயோகிக்கப் படலாம் என்று விவரிக்கப் பட்டிருக்கிறது. சினிமாப் படங்களின் முடிவிலோ ஆரம்பத்திலோ தேசீயக் கொடியைக் காட்டலாமா என்பது பற்றித் தனியாக ஒன்றும் கூறப்படவில்லை. ஆனால், தொழில், வர்த்தகம் முதலியவைகளுக்கு தேசீயக் கொடியை உபயோகிப்பது சட்ட விரோதம் என்பதைக் குறிப்பிட்டிருப்பதால், சினிமாப் படங்களில் தேசீயக் கொடியைக் காட்டுவது கூடாது என்றே அர்த்தமாகிறது. இந்த விஷயத்தை இந்திய சர்க்காரோ மாகாண சர்க்காரோ நன்கு வியாக்யானம் செய்து அறிக்கை விட்டால் சௌகரியமாயிருக்கும்.

இந்திய சினிமாத் தியேட்டர்கள் எல்லாவற்றிலும், படங்களின் முடிவில், ஒன்று தேசீயக் கொடியைக் காட்டுவதோ, அல்லது பொதுவாக நிர்ணயிக்கப் படும் தேச கீதத்தைப் பாடச் செய்வதோ பொருத்தமாயிருக்கும் என்று நாம் கருதுகிறோம்.

ஆதலால் இப்படிச் செய்வதற்கு சர்க்கார் அனுமதி அளிக்க வேண்டுமென் கேட்டுக் கொள்கிறோம்.

உள்ளது உள்ளபடி

தென்னிந்திய பில்ம் சேம்பர் சமீபத்தில் பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கையை அனுப்பியுள்ளது. அதில் ஸ்டுடியோ முதலாளி தொழிலாளிகள் தகராறு சம்பந்தமாக சில விஷயங்களைத் தெரிவித்திருக்கிறது.

அவ்வறிக்கையில் பில்ம் சேம்பருக்கு தமிழ் நாடு ஸ்டுடியோ சினிமாத் தொழிலாளர் சங்கத்திடமிருந்து இவ் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ந்தேதி ஒரு அறிக்கை வந்ததாகவும், அதில் கண்டிருந்த குறைகள் நிவர்த்திக்கப்படாவிடில் வேலை நிறுத்தம் செய்யப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்ததாம்.

அதன் பேரில் சர்க்கார் தொழில் அதிகாரியை ஸ்டுடியோ சொந்தக்காரர்கள் சந்தித்து இத் தொழிலில் தற்காலம் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தத்தை எடுத்துச் சொன்னார்களாம்.

இது சம்பந்தமாக சேம்பர் தலைவர் கே. சுப்ரமண்யம் செய்த முயற்சியின் விளைவாக, சேம்பர் பிரதிநிதிகள், ஸ்டுடியோ பிரதிநிதிகள், த.நா.க. கமிட்டியின் தொழில் பகுதி சார்பாக ஸ்ரீ. ஆர். வெங்கடராமன் ஆகியோர் கூடிப் பேசி ஒரு சமரஸ போர்டை ஸ்தாபிப்பதென முடிவு செய்யப்பட்டதாம்.

வேலை நிறுத்தம்

மேற்படி முயற்சிகள் நடந்து கொண்டிருந்த போது தான் ஏப்ரல் மாதம் 30-ந் தேதி ஸ்டுடியோ தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனராம். சேம்பர் தலைவரின் விடா முயற்சியின் விளைவாக மேற்படி தொழிலாளர் சங்கத் தலைவர் ஸ்ரீ. கே. ப்ரபுவும் ஸ்டுடியோ பிரதிநிதிகள், சேம்பர் பிரதிநிதிகள் ஆகியோர் கூடிப் பேசி ஒரு சமரஸ போர்டை அமைத்தனராம்.

இந்த போர்டின் மே மாதம் 11-ந் தேதியக் கூட்டத்தில், இரு சாராரும் ஒப்புக்கொண்டபடி, "நெப்டியூன் ஸ்டுடியோவில் 22 பேர்கள் நீக்கப்படலாம்" என்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டதாம்.

பின் வாங்கினர்?

ஆனால் மே 25-ந்தேதி நடந்த கூட்டத்தில், "மேற்படி தீர்மானத்தை ரத்து செய்ய வேண்டும் அல்லது அதிக மாறுதல் செய்ய வேண்டுமெ"ன்று சங்கப் பிரதிநிதிகள் கேட்டார்களாம்.

மீண்டும் சேம்பர் தலைவர் இது விஷயத்தில் தலையிட்டு முயற்சித்ததின் விளைவாக நடந்த மேற்படி போர்டு கூட்டத்தில், அந்த போர்டுக்கு பொதுவான ஐந்தாவது அங்கத்தினர் ஒருவரைத் தலைமை வகிக்கச் செய்ய வேண்டுமென சங்கப் பிரதிநிதிகள் கேட்டார்களாம். ஜனாப் ஷாபி முகமதுவின் பெயரை ஆதரிப்பதாகவும் தெரிவித்தாராம் சங்கத் தலைவர் பிரபு. ஆனால் பின்னர் சேம்பர் தலைவர் ஜ. ஷாபி முகமதின் சம்மதம் பெற்ற பின் ஸ்ரீ. ப்ரபு அதை ஏற்றுக் கொள்ள மறுத்தாராம். அதோடு அவருக்குப் பதில் என். எஸ். கிருஷ்ணனைத் தலைமை வகிக்கச் செய்யலாம் என்றாராம் அவர். மேற்படி இருவரையுமே கமிட்டியில் சேர்த்துக் கொள்ளலாமென்ற சேம்பர் தலைவரின் யோசனையை ஸ்ரீ. ப்ரபு ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டாராம். இதன் காரணமாகவே தான் ஸ்டுடியோ முதலாளிகள்–தொழிலாளிகள் தகராறு இன்னும் தீராமலே இருந்து வருகிறதாம்.

வருந்தத்தக்கது

பிலிம் சேம்பர் விடுத்திருக்கும் அறிக்கையில் கண்டுள்ளது போல் நிகழ்ந்திருக்குமானால் அது மிக வருந்தத்தக்க விஷயமே ஆகும். சினிமாவானது ஒரு நுட்பமான கலைத் தொழில். ஊழியர்களிடையே மனத் திருப்தியும் ஒத்துழைப்பும் இல்லாமற் போனால் இக்கலை சீக்கிரமே பாழாகிவிடும். நல்ல வேலையாக மற்ற முதலாளிகளைப் போலன்றி, சினிமா முதலாளிகள் ஆரம்பத்திலேயே தங்கள் தொழிலாளர்களின் குறைகளைத் தீர்த்து வைக்கச் சித்தமாயிருப்பது சந்தோஷிக்கத் தக்கது.

சினிமாத் தொழிலாளர்களுக்கு பல குறைகள் இருப்பது உண்மை. அவைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டியதும் அத்தியாவசியந்தான். ஆனால் சென்ற வருஷம் இருந்தது போல் இல்லை இந்த வருஷத்தில் சினிமாத் தொழில். பல பெரிய படங்களே படுதோல்வியுற்று வருகின்றன. படங்களுக்கு வசூல் இல்லையென்றால் இத்தொழிலில் எங்கிருந்து பண நடமாட்டம் இருக்கும்? பண நடமாட்டம் இல்லாத காரணத்தால் பல படங்கள் பாதியிலும் முக்காலிலுமாக வளர்ச்சியின்றி நின்று கொண்டிருக்கின்றன. புதுப் படங்களை ஆரம்பிப்பவர்களும் அத்திபூத்தமாதிரி ஆகி விட்டனர். ஸ்டுடியோ கிடைக்காமல் பட முதலாளிகள் தவித்த காலம் மறைந்து, பட முதலாளிகள் இல்லாமல் ஸ்டுடியோக்கள் தவிக்கும் காலம் ஏற்பட்டுவிட்டது. இதையெல்லாம் நம் ஸ்டுடியோ தொழிலாளர்கள் மறந்து விடக் கூடாது. ஸ்டுடியோ முதலாளிகளின் விஷயத்தை அவர்கள் அநுதாபத்துடன் கவனிக்க வேண்டும். அதே சமயத்தில் தொழிலாளர்கள் குறைகளை ஸ்டுடியோ முதலாளிகள் சாத்தியமான அளவு தீர்த்து, தற்போதுள்ள மன ஒற்றுமைக்கும், ஒத்துழைப்பிற்கும் பங்கம் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

பிரிட்டனின் துரோகம்

அமெரிக்காவில் சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன் "இந்தியா பேசுகிறது" என்றோர் படம் தயாரிக்கப்பட்டது. அதில் இந்தியாவைப் பற்றிய விஷயங்கள் தாறுமாறான முறையில் சித்திரித்து இந்தியாவைப் பற்றி துஷ்பிரசாரம் செய்யப்பட்டிருந்தது. இப்படத்தைக் காட்டவே கூடாது என்று இந்தியாவில் கூச்சல் கிளம்பவே இந்தியாவில் அப் படத்திற்குத் தடை விதிக்கப்பட்டது. பின்னர் இப்படத்தை பிரிட்டனில் காட்டக் கூடாதென்று பிரிட்டிஷ் சர்க்கார் தடை விதித்திருந்தது. பதினைந்து வருஷங்களாக அமுலிலிருந்த இந்த தடையை பிரிட்டன் சமீபத்தில் ரத்து செய்து விட்டதாம். இந்தியாவை விட்டு வெளியேறி விட்டதால் இந்தியாவின் கௌரவத்தைக் காக்கும் பொறுப்புத் தீர்ந்து விட்டதாக பிரிட்டனுக்குத் தோன்றியிரா விட்டால் அது இப்படிச் செய்திருக்குமா? இது பெரிய துரோகம் என்பதில் சந்தேகமில்லை. பிரிட்டனுக்கும், இந்தியாவுக்கும் இடையே உள்ள பரஸ்பர நல்லெண்ணம் நீடித்திருக்க வேண்டுமானால் இந்தியா பற்றித் துஷ்பிரசாரம் அடங்கிய படங்களுக்கு இனியும் பிரிட்டன் அனுமதி அளிக்கக்கூடாது. இது சம்பந்தமாக உடனே தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்திய சர்க்கார், "இந்தியா பேசுகிறது" போன்ற துஷ்பிரசாரப் படங்களை பிரிட்டனும் சரி, வேறு தேசங்களும் சரி, காட்டாமலிருக்கச் செய்வது அவசியமாகும்.

ஜெமினி ஞானசௌந்தரி

கண்ணாம்பாவின் சிறந்த நடிப்பு

ஜெமினி வெகு காலமாய் திட்டமிட்டுக் கொண்டிருந்த "ஞான சௌந்தரி" படம் வெகு விரைவில் தயாராகி இந்த மாதம் வெளிவந்திருக்கிறது. இந்தப் படத்திற்கு "கான சௌந்தரி" என்று பெயர் கொடுத்தால் கூடப் பொருந்தும். ஏனென்றால் ஞான சௌந்தரியாக நடிக்கும் சுசீலாவின் வாயிலிருந்து புறப்படும் இனிய கானம் படம் பூராவிலும் பரவியிருக்கிறது. இந்தக் குரல் எம். எஸ்.ஸை அடிக்கடி ஞாபக மூட்டுகிறது.

இதே போல எம். கே. ராதாவுக்கும் யாரோ ஒருவர் குரலை இரவல் கொடுத்திருக்கிறார். அது கட்டை சாரீரமாயினும் கம்பீரமும், மதுரமும் நிறைந்திருக்கிறது. இந்த இருவர் சங்கீதம்தான் படத்தின் முக்கிய அம்சமாயிருக்கிறது.

ஞானசௌந்தரி எல்லோருக்கும் தெரிந்த கதைதான். சினிமாவுக்காக சில மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. ஹாஸ்ய பாகத்தை உத்தேசித்து லேனுளுக்கு ஒரு அசட்டுத் தம்பியை சிருஷ்டித்து, அவனை மணந்து கொள்ள மறுப்பதால் ஞானசௌந்தரி மீது லேனுளுக்கு குரோதம் உண்டாவதாகக் காட்டியிருப்பது பாராட்டத் தக்க மாறுதலாகும். அதே போல காட்டில் குழந்தைகளுடன் தவிக்கும் ஞானசௌந்தரியை ஒரு பெரியார் ஆதரிப்பதாகவும், பிறகு தன்னைத் தேடி வந்த கணவனுக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடுப்பதற்கு கையில்லையே என வருந்தி ஞானம் தண்ணீரில் குதித்து விடுவதாகவும், தேவ மாதா அவளுக்கு வெட்டுண்ட கைகளை அளித்துக் காப்பதாகவும் செய்திருப்பதும் நல்ல மாறுதல்களாகும். ஆனால் லேனுள் கடிதத்தை மாற்றி எழுதும் விஷயம் மூக்கை வளைத்துத் தொடுவது போலுள்ளது. சிற்சில இடங்களில் கதைப் போக்கு அசதியை உண்டு பண்ணுகிறது.

"முருகதாஸா" சினிமா டெக்னிக் விஷயங்களில் நல்ல படிப்பாளி என்பது பிரசித்தம். ஆனால், "ஞானசௌந்தரி" டைரக்ஷனைப் பற்றி அவர் பெருமையடித்துக் கொள்வதற்கில்லை. பல இடங்களில் கவனக் குறைவும், பத்தாம் பசலிப் போக்குமே காணப்படுகிறது.

வசனங்கள் ஒரு போக்காக இல்லை. ஒரே பாத்திரத்தின் வாயிலிருந்து இலக்கிய சம்பாஷணை, கொச்சைப் பேச்சு எல்லாம் கலந்து வருகிறது.

பாட்டுகள் நல்ல மெட்டுகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன. சங்கீத டைரெக்ஷனும் சிறப்பாயுள்ளது. ஆனால் ஒன்றிரண்டு பாட்டுகள் பொருத்தமற்ற இடங்களில் அமைந்துள்ளன.

நடிப்பில் முதல் ஸ்தானத்தை கண்ணாம்பாவுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனினும், அவரது பாகத்தை இன்னும் பிரமாதமானதாய் ஆக்கியிருக்கலாம் என்று தோன்றுகிறது. ஞான சௌந்தரியாக நடிக்கும் வி. எஸ். சுசிலா சுமாராக நடித்திருக்கிறார். எம். கே. ராதாவோ மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறார். தாடி மீசையுடன் வந்து மாம்பழம் பறித்துத் தரும் போது மட்டும் நடிப்பு பரவாயில்லை. அவருக்கு வேஷமும் பொருத்தமாயில்லை.

டி. என். மீனாக்ஷி, ஆர். சரஸ்வதிபாய், எஸ். ஆர். லக்ஷ்மி, சேஷகிரி பாகவதர் ஆகியோர் சொற்ப நேரம் தோன்றினாலும் பளிச்சென்று பேசி நடித்திருக்கிறார்கள். டி. ஈ. கிருஸ்ணமாச்சாரியின் தோற்றமும், நடிப்பும் அவ்வளவாக சோபிக்கவில்லை. மற்றவர்களின் நடிப்பு சாதாரணம்.

ஹாஸ்ய பாகத்தில் எல். நாராயணராவும், டி. ஆர். ராமச்சந்திரனும் முறையே குரு சிஷ்யனாகத் தோன்றி ஹாஸ்ய விருந்தளிக்கின்றனர்.

ஒளி, ஒலிப்பதிவுகள், செட்டிங்ஸ் ஆகியவை நன்றாயிருக்கின்றன. மொத்தத்தில் இப்படம், இதில் உள்ள சங்கீதத்திற்காகவும், கண்ணாம்பாவின் நடிப்பிற்காகவும், ராவ்-ராமச்சந்திரன் ஹாஸ்யத்திற்காகவும் வெற்றிகரமாய் ஓடக் கூடும்.

—பி. ஆர். எஸ்.

மறைந்த நக்ஷத்திரம்

ஆசிரியர் என்னைக் கூப்பிடுவதாக ஆபீஸ் பையன் கூறியதும், நான் அவருடைய அறைக்குச் சென்றேன்.

"என்ன மிஸ்டர் சேது! நீங்கள் தான் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும்" என்றார்.

"எந்த காரியம், ஸார் ?" என்று நான் கேட்டேன்.

"இதுவரை அதைப் பற்றி நூறு கேள்விகளுக்கு மேல் வந்து விட்டது. 'பிரபல நக்ஷத்திரம் பிரேம குமாரி வேறு படத்தில் ஏன் நடிக்கவே யில்லை ?' என்று அநேகர் கேட்டு விட்டனர். எப்படியும் அடுத்த இதழில் நாம் அதற்கு ஒரு பதில் கொடுத்துத் தான் ஆக வேண்டும். நாம் கடிதம் எழுதிப் பார்த்து, பிரயோஜனப்பட வில்லை. நீங்கள் தான் நேரில் சென்று என்ன சமாச்சாரம் என்று தெரிந்து கொண்டு வர வேண்டும்" என்று சொல்லி முடித்தார்.

நான் ஒரு பதிலும் சொல்ல வில்லை. சுமார் ஒரு வருஷத்திற்கு முன் 'மந்திர நாத்' என்ற படம் பிரமாதப் படுத்திய தல்லவா ? அதில் கதாநாயகியாக நடித்துப் பொதுஜன அபிமானத்தைப் பெற்ற நடிகை பிரேம குமாரியைப் பற்றித்தான் ஆசிரியர் என்னிடம் கூறினர்.

'மந்திர நாத்' படத்தைப் பற்றி எல்லாப் பத்திரிகைகளிலும் பத்தி பத்தியாகப் புகழ்ந்திருந்தார்கள். 'நக்ஷத்திர நடி—முதல் படத்திலேயே!' என்றெல்லாம் தலைப்புகள் கொடுத்து பிரேம குமாரியைப் புகழ்ந்திருந்தார்கள். பொது மக்களும் வாரக் கணக்கில் திரள் திரளாகச் சென்று அப் படத்தைப் பார்த்துக் களித்தனர். ஆயினும் எங்கள் பத்திரிகையில் மட்டும் 'மந்திர நாத்' படத்தைப் பற்றி ரொம்பவும் தாக்கி எழுதியிருந்தது. "இவ்வளவு ஆபாசமான படத்தைக் கொளுத்த வேண்டும் !", "............ இவ்வளவு கீழ்த்தரமாக நடிக்க இசைந்த பிரேம குமாரி என்ற நடிகையினால் பெண் குலமே தலை குனிய வேண்டியது தான்" என்று நாங்கள் எழுதி யிருந்தோம்—அதாவது, பத்திரிகையின் சார்பில் நான் எழுதி யிருந்தேன். நான் தான் எழுதினேன் என்ற விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

இருந்தும் என்னையே பிரேம குமாரியிடம் அனுப்ப ஆசிரியர் தீர்மானித்ததைக் குறித்து நான் ஆச்சரியமும், வருத்தமும் அடைந்தேன். நான்

தாக்கி எழுதினதைக் குறித்து பிரேமகுமாரி என்னை என்ன செய்து விடுவாளோ என்று நான் பயப்படவில்லை. உண்மையில், அவள் நான் எழுதியிருந்த விமர்சனத்தைத்தான் ஆதரித்தாள் என்று எனக்குத் தெரிந்திருந்தது. அவள் மறுபடியும் சினிமாவில் நடிக்காமல் இருந்ததற்குக் காரணமும் எனக்குத் தெரிந்த விஷயம்தான். ஆனால் அந்த உண்மையை நான் எப்படி எழுத முடியும்? அவளைப் பேட்டி கண்டதாகவும், அவள் ஏதோ காரணம் கூறியதாகவும் கற்பனை செய்தல்லவா நான் எழுத வேண்டியிருக்கும்? இதைக் குறித்துத் தான் நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

என் அறையில் போய் உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்தேன்.

* *

லலிதாவின் குடும்பத்துடன் எனக்குச் சிறு வயதிலிருந்தே பழக்கம். நான் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே எதிர்வீட்டில் வசித்து வந்த அவர்கள் குடும்பத்துடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. என் வீட்டினரும் அவர்கள் வீட்டினரும் கூட சகஜமாய் பழகி வந்தார்கள்.

அப்பொழுது லலிதா என்னை விட நான்கு வகுப்புகள் குறைவாகப் படித்து வந்தாள். நான் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையை முடித்துக் கொண்டு கல்லூரிப் படிப்புக்காகச் சென்னைக்கு வந்த போது அவள் மூன்றாம் பாரத்துக்கு வந்திருந்தாள்.

நான் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த வரை, லலிதா அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து என்னிடம் பாடம் கேட்டுக் கொண்டு போவாள். அவளுக்குச் சகோதரனோ, சகோதரியோ கிடையாது. அவளுடைய அப்பா சுற்றுப் பிரயாணம் செய்யும் இன்ஸ்பெக்டராக இருந்தார். ஆகவே அநேகமாக அவர் ஊரில் இருக்கவே மாட்டார். லலிதாவும் அவளுடைய அம்மாவும் தான் இருப்பார்கள். நான் தான் அவர்கள் வீட்டுக்கு வேண்டிய சாமான்களை அவ்வப்பொழுது வாங்கிவருவேன். லலிதாவின் தாயாரும்

என்னிடம் அபிமானம் வைத்திருந்தாள்.

எங்கள் வீட்டிலும் லலிதாவுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. என் மாமியும் மாமாவும் அவளைத் தங்கள் பெண்ணைப் போலவே கருதி வந்தனர். அவள் என்னைத் தேடிக் கொண்டு வந்து விட்டால் மாமி, "டேய் சேது! உன் பெண்டாட்டி வந்திருக்கிறாளடா! என்ன வேண்டுமென்று கேளு!" என்று கேலியாகச் சொல்வாள்.

"போங்கோ மாமி!" என்று லலிதா கூறிவிட்டு என்னிடம் வருவாள். நானும் அவள் கேட்டதைச் சொல்லி அனுப்புவேன்.

லலிதாவுக்கு இனிமையான குரல் இருந்தது. பள்ளிக்கூடத்தில் நடக்கும் நாடகங்களிலும், சங்கிதப் போட்டிகளிலும் அவளுக்கு அனேக பரிசுகள் கிடைத்தன. அந்த சமயத்தில் நான்தான் நாடகங்கள் தயாரிப்பது வழக்கம். லலிதாவுக்கென்று சில நாடகங்களைத் தயார் செய்து அவளைப் பழக்குவேன்.

......இவ்வளவு தூரம் லலிதாவுக்கும், எனக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்ததை எங்கள் இரண்டு வீடுகளிலும் விகல்பமாக நினைக்கவில்லை. ஏன், நாங்களிருவருமே அதைக் குறித்துத் தனிப்பட ஒன்றும் எண்ணவில்லை. அவளுக்கு வேறு மனிதர்கள் யாருமில்லாததால் என்னிடம் ஒத்தாசை கேட்டுக் கொண்டு வந்தாள். வேறு சகோதர சகோதரியர் எனக்கு இல்லாததால் நானும் அவளுக்கு ஒத்தாசை செய்வதில் ஒரு தனி இன்பம் கண்டேன்.

இதைத் தவிர வேறு உறவு முறையைப் பற்றி நான் சிறிதும் நினைக்கவில்லை. என் மாமி அடிக்கடி 'உன் பெண்டாட்டி!' என்று சொல்லி வந்ததைக் கூட நான் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. ஆனால் லலிதா என்ன எண்ணியிருந்தாளோ, அது எனக்குத் தெரியவில்லை.

* * *

நான் சென்னைக்கு வந்து ஐந்து வருஷங்களுக்கு மேலாகி விட்டன. இந்த ஐந்து வருஷ காலத்தில் எவ்வளவோ மாறுதல்கள் நேர்ந்து விட்டன.

சு.ரா.

மாமாவுக்கு மாற்றலாகி வேறு ஊருக்குப் போய் விட்டார். நான் கல்லூரியில் சேர்ந்த பிறகு ஒரே ஒரு விடுமுறையைத்தான் பழைய வீட்டில் கழித்தேன். அப்போது லலிதாவின் குடும்பமும் எதிர் வீட்டில் இருந்தது. லலிதாவும் பல நாள் பிரிவுக்குப் பிறகு என்னைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சி கொண்டாள்.

"சேது! நீ இல்லாமல் நான் வீட்டுக் கணக்குப் போட எவ்வளவு திண்டாடிப்போனேன், தெரியுமா?" என்று கூறினாள் ஒரு சமயம்.

"உன்னைக் கேட்காமல் எப்படி நடிப்பது என்று இந்த வருஷம் பள்ளிக்கூட நாடகத்தில் நான் சேரவேயில்லை" என்று மற்றொரு சமயம் கூறினாள். இன்னும் எவ்வளவோ விஷயங்களில் அவள் என் பிரிவைச் சம்பந்தப்படுத்திப் பேசியது என்னைப் பெருமை கொள்ளச் செய்தது. அவள் மீது நான் செலுத்தி வந்த ஆதிக்கம் எப்படிப் பட்டது என்று உணர்ந்து பூரித்துப் போனேன். ஆனால் அந்த ஆதிக்கத்தை அவள் ஏன் ஒப்புக் கொண்டாள்; அதை நான் உபயோகிக்காத சமயத்தில் ஏன் சிரமப் பட்டாள் என்பதை மட்டும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அதற்குப் பிறகு நான் அவளைச் சந்திக்கவேயில்லை. மாமாவுக்கு

(தொடர்ச்சி 60-ம் பக்கத்தில்)

வி. என். ஜானகி

வாழ்க்கை வர்ணனை

தெருவில் நாகப் பழத்தையோ அல்லது இலந்தைப் பழத்தையோ ஒரு ஸ்திரீ விற்றுக் கொண்டு போகிறாள். உங்களுக்கு வாங்கிச் சாப்பிட வேண்டுமென்ற ஆசை. ஆனால் பையைத் தடவிப் பார்க்கிறீர்கள்; காசில்லை. பிறகு என்ன செய்வீர்கள்? அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடம் கடன் கேட்டுப் பார்ப்பீர்கள். கடனும் கிடைக்கவில்லை. பிறகு என்ன செய்வீர்கள்? "நாளைக்குக் காசு இருக்கும் போது பார்த்துக் கொள்ளலாம்" என்று சும்மா இருந்து விடுவீர்கள். அவ்வளவுதானே?

வி. என். ஜானகிக்கு பாலியத்தில் இலந்தைப் பழம் என்றால் உயிர். ஆனால் அதை வாங்க காசில்லையே என்று அவர் கவலைப்பட்டதேயில்லை. கடன் வாங்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டதில்லை. கடன் கிடைக்க வில்லையே என்று வருந்தியதும் கிடையாது.

ஜானகி இலந்தைப் பழம் வாங்கி வந்த விதமே வேறு. "இலந்தைப் பழம்" என்ற குரல் காதில் விழ வேண்டியது தான் தாமதம். அவர் சமையலறைக்குப் பாய்ந்தோடுவார். அரிசிப் பானைக்குள் கை விடுவார்—காசிற்காகவல்ல; அரிசிக்காக! இரு கை நிறைய அரிசியுடன் போவார்; மடி நிறைய இலந்தைப் பழத்துடன் திரும்புவார்!

இந்த மாதிரியான பண்டமாற்று வியாபாரம் இன்னமும் கூட வெளியூர்களில் நடந்து வருவது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். நாகப் பழம், இலந்தைப் பழம், வேர்க்கடலை, கொத்தமல்லி, கருவேப்பிலை இவைகளை விற்பவர்களிடம் அரிசிக்குப் பதில் காசு கொடுத்தால் கூடக் கொடுக்க மாட்டார்கள். எவ்வளவு இலந்தைப் பழத்திற்கு எவ்வளவு அரிசி கொடுக்க வேண்டும் என்பது நமக்கெல்லாம் தெரியாது. ஆனால் ஜானகியைக் கேட்டாலோ ஒரு இலந்தைப் பழத்திற்கு எவ்வளவு மணி அரிசி கொடுக்க வேண்டும் என்று கூடக் கணக்காய்ச் சொல்லி விடுவார். அவர் தான் எண்ணிறந்த தடவைகள் வாங்கி அனுபவப் பட்டிருக்கிறாரே!

இப்படி வாங்கும் இலந்தைப் பழத்தை அவர்ஒருவரே வைத்துக்கொண்டு சாப்பிடுவார் என்று நினைக்கிறீர்களோ? அதுதானில்லே. ஊர்ப் பெண்களை எல்லாம் கூட்டி வைத்துக் கொண்டு, அவர்களுடன் சேர்ந்து தான் சாப்பிடுவார்.

பொதுவாக, சிறு பையன்களும் பெண்களும் நல்ல சந்தர்ப்பங்களில் சேர்ந்து கொள்ளுவார்கள். ஆனல் விளையாடும் போது யாராவது ஒரு பையனுக்கோ, பெண்ணுக்கோ காயம் பட்டு விட்டாலோ மற்றவர்கள் பயந்து கொண்டு சிட்டாய்ப் பறந்து விடுவார்கள். ஆனல் ஜானகி இத்தகைய சந்தர்ப்பங்களில் காயம் பட்ட தன் சினேகிதிக்குக் கட்டுக் கட்டுவார். இல்லாவிட்டால் டாக்டரிடம் அழைத்துச் சென்று கட்டச் சொல்லுவார். இவ்வளவு தயாளகுணத்திற்கும் அவருக்கு என்ன பரிசு கிடைக்கும் என்று நினைக்கிறீர்கள்? "ஊர் வம்பையெல்லாம இழுத்துப் போட்டுக் கொள்கிருயே!" என்று பெற்ருேர்கள் அவரை ஏசுவார்கள். சில சமயம் உதை கூடக் கொடுப்பார்கள்!

எவ்வளவு அடி பட்டாலும் ஜானகியின் விளையாட்டுக் குணம் மட்டும் மாறி விடவில்லே. விளையாட்டாகவே பாபனசம் ராஜப்பா என்பவரிடம் பால்யத்தில் பரத நாட்டியத்தைக் கற்றுக் கொண்டார். விளையாட்டில் அதிகப் பிரியமுள்ள சிறுவர் சிறுமியர் அநேகமாக படிப்பில் பூஜ்யமாயிருப்பர். ஆனல் ஜானகி விஷயம் அப்படியல்ல; அவர் வகுப்பில் முதல் பெண்ணுக விளங்கி வந்தார். கும்பகோணம் பாணுதுரை ஹைஸ்கூலில் இரண்டாவது பாரம் வரையில் படித்திருக்கிருர்.

ஜானகியின் சொந்த ஊர் திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள வைக்கம் என்ற ஊராகும். நாயர் ஜாதியில் 1924-ம் வருஷம், செப்டம்பர் மாதம் 23ந் தேதியன்று

சித்ர பகாவலி

சித்ர பகாவலி

பிறந்தவர். அவருடைய தாயாரான நாராயணி அம்மாள் பிரபல சாகித்தியகர்த்தாவும், நடிகரும், தமிழ்ப் பண்டிதருமான பாபநாசம் ராஜகோபாலய்யரை மணந்து கொண்டதின் விளைவாக கும்பகோணத்திற்குச் சென்று வசிக்கவேண்டிய நிமித்தம் ஏற்பட்டது.

அந்தச் சமயத்தில் ராஜகோபாலய்யர் கும்பகோணத்திலுள்ள "லிட்டில் பிளவர் ஹைஸ்கூலி"ல் தமிழ்ப் பண்டிதராய் இருந்து வந்தார். தற்செயலாய் அவருக்கு மதருஸ் மெயில் படத்திற்குப் பாட்டெழுதும் சந்தர்ப்பம் கிடைத்தது. பின்னர் அவருடைய தூண்டுதலின் பேரிலும் வற்புறுத்தலின் பேரிலுமே தான் அவருடைய தம்பியான பாபநாசம் சிவன் சினிமாவுக்குப் பாட்டு எழுத ஆரம்பித்தார்.

ராஜகோபாலய்யர் மதருஸ் மெயிலுக்கு ஒப்புக் கொண்ட கொஞ்ச காலத்திற்குப் பிறகு தமிழ்ப் பண்டிதர் உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்துவிட்டார். அவரது குடும்பம் சென்னைக்கு வந்து வசிக்கலாயிற்று.

ஜானகிக்கோ பால்யத்தில் சினிமாப் பார்ப்பதில் அதிக ஆசை. பின்னர் அதிலேயே சேர்ந்து நடிக்கவேண்டும் என்ற ஆசையும் அத்துடன் சேர்ந்து கொண்டது.

நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியாரைக் கொண்டு இன்பசாகரன் தமிழ்ப் படத்தைத் தயாரிப்பதற்கு ஏற்பாடாகி வந்தது. அப் படத்தில் நடிப்பதற்காக ஐந்நாறு பெண்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அவர்களில் ஒருவர்தான் ஜானகி. அவர் சினிமாவில் சேருவதில் அவரது தாயாருக்குக் கொஞ்சங் கூட இஷ்டமேயில்லை. ஆனால் அவரது தகப்பனாரோ இதற்கு நேர்மாறான அபிப்பிராயம் கொண்

அபூர்வ சிந்தாமணி

பங்கஜவல்லி

டிருந்தார். கடைசியில் ஜானகியின் கட்சியே ஜெயித்தது. அப்பொழுது அவருக்கு வயது பதின்மூன்று தான் ஆகியிருந்தது.

இன்பசாகரன் படத்திற்கு அமர்த்தப்பட்டதும், அப் படத்தின் நடன

டைரெக்டராயிருந்த ஜெபசங்கரிடம் ஜானகி நாட்டியம் ஆடக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார். ஆனல் துரதிருஷ்டவசமாய் இப்படம் தீக்கிரையாகி விட்டது. ஜானகி, தாம் நடித்த முதல் படம் இவ்விதம் ஆகிவிட்டதே என்று அதிக வருத்தம் அடைந்தார். ஆனல் அந்த வருத்தத்தை போக்கக் கூடிய இரு சம்பவங்கள் அப்பொழுது நிகழ்ந்தன. ஒன்று அவர் கிருஷ்ணன் தூது படத்திற்காக ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டது; இன்னென்று அவரது திருமணம்.

"மனம் போல மாங்கலியம்" என்பார்கள். ஜானகி விஷயத்தில் அது சரியாகி விட்டது. ஜானகிக்கு சினிமாவில் சேர்ந்து புகழுடைய வேண்டுமென்ற தீவிர எண்ணம் ஏற்பட்டிருந்ததால். அந்த எண்ணத்திற்கு உதவியாக இருக்கக் கூடிய ஒருவரையே தாம் மணந்துகொள்ள வேண்டும் என்று எண்ணி வந்தார் அந்த எண்ணத்திற்கு ஏற்றார்ப்போல் அவருக்கு வாய்த்த கணவரானர் கனபதி பட். பட் பல படங்களில் உப பாத்திரங்களில் நடித்திருக்கிருர். அதோடு கூட பிரகதி ஸ்டுடியோவில் மேக்கப் மென்னைகவும் இருந்து வருகிருர். இந்தக் கலைத் தம்பதிகள் சுமார் எட்டு வயதுடைய சுரேந்திரா என்ற ஏக புத்திரனைப் பெற்றுள்ளனர்.

கிருஷ்ணன் தூது படத்தில் ஜானகி நாட்டியம் மட்டும்தான் ஆடியிருக்கிருர். அதன் பின்னர் மன்மத விஜயம், கச்ச தேவயானி, சூர்யபுத்ரி ஆகிய படங்களிலும் நாட்டியம் ஆட மட்டும் அமர்த்தப்பட்டார்.

மேற்படி படங்கள் முடிந்ததும் ஜானகி சந்திரஹாஸா, காளிதாஸ் ஆகிய இரண்டு தெலுங்குப் படம்

களில் வேஷம் பெற்று நடித்தார். மூந்தின படத்தில் அவர் இரண்டு பாட்டுகளைக் கூடப் பாடியிருக்கிறார்.

இவ்விரு படங்களில் நடித்த பின்னர், நாட்டியம் ஆடுவதற்கு மட்டுமன்றி வேஷம் பெறவும் அவர் முயற்சித்து வந்தார். **மும்மணிகள்** படத்தில் இந்த இரண்டு சந்தர்ப்பங்களும் ஒருங்கே வாய்த்தன. அதில் அவருக்கு ஒரு பாட்டு கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. பிறகு ஜானகி ராயல் டாக்கிஸின் சாவித்திரி படத்தில் நடனம் மட்டும் ஆடியிருக்கிறார்.

சில படங்களில் சிறு வேஷங்களை ஜானகி நன்றாய் நடித்திருப்பதைக் கண்ட டைரெக்டர் கே. சுப்ரமண்யம் அவருக்கு அனந்த சயனத்தில் ஒரு முக்கியமான வேஷத்தையே கொடுத்து நடிக்கச் செய்தார். அதில் ஜானகியின் நடிப்பு சோபிக்கவும் செய்தது.

அனந்தசயனத்திற்குப் பிறகு ஜானகி நடித்த படம் **கங்காவதார்.** இந்தப் படத்தில் அவருக்கு நல்ல பெயர் கிடைக்கவில்லை ஆனால், அவர் அதன் பின்னர் நடித்த **தேவ கன்யா** அவருக்கு மிகுந்த பெயரை சம்பாதித்துக் கொடுத்தது.

அடுத்தபடியாக, ஜானகி ராஜா பர்த்ருஹரியிலும், மானசம்ரக்ஷணத்திலும் நடித்தார். பின்சொன்ன படத்தில் அவர் தம் பாகத்தைக் கச்சிதமாய் நடித்திருக்கிறார்.

மானசம்ரக்ஷணம்

சந்திரலேகா

இந்த சமயத்தில் டைரெக்டர் கே. சுப்ரமண்யம் நடனகலா சேவா என்ற நாட்டிய கோஷ்டியைச் சேர்த்தார். இந்த கோஷ்டியினர் தமிழ்



டமாகி விட்டது என்றால் ரொம்பவும் பொருந்தும். டைரெக்டர் பத்மநாபன் **சகடயோகத்**தில் ஜானகிக்கு கதாநாயகியின் வேஷத்தையே தைரியமாய் கொடுத்து நடிக்கச் செய்தார்.

சகடயோகம் பிரமாதமான வெற்றியைப் பெறவில்லை யென்றாலும் ஜானகிக்கு பிரமாதமான கிராக்கி ஏற்பட ஆரம்பித்து விட்டது. மேற்படி படத்தைத் தொடர்ந்து **பங்கஜவல்லி**யில் நடிப்பதற்கு ஒப்பந்தம் ஆயிற்று. இப் படத்தில் அவரது பாகம் நன்கு சோபித்திருக்கிறது.

பம்பாயில் இந்த சமயத்தில் **சித்ர பகாவலி** என்ற படம் தயாராகி வந்தது. அதில் ஜானகிக்கு கதாநாயகி வேஷம் கிடைத்தது. அவர்தம் பெயரை

நாடெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்து பல ஊர்களில் நாட்டியக் கச்சேரிகளை நடத்தி விட்டு வந்திருக்கின்றனர். ஜானகி இக்கோஷ்டியில் சேர்ந்தார். அதன் நடனங்களில் அவர் கதாநாயகனாகவும், எஸ். டி. சுப்புலக்ஷ்மி கதாநாயகியாகவும் ஆடி வந்தனர்.

நடன கலா சேவாவில் சேர்ந்ததும் ஜானகி கதக், மணிபுரி ஆகிய நடனங்களையும் கற்றுக் கொண்டார். அவருக்கு சென்ற இடமெல்லாம் சிறந்த பேரும் புகழும் கிடைத்து வந்தன. இப்படியாக நான்கு வருஷ காலம் கழிந்தது அதன் பிறகு இந்த கோஷ்டியிலிருந்து ஜானகி விலகிக் கொண்டார்.

ஜானகி சுப்ரமண்யம் கம்பெனியிலிருந்து விலகியது எவ்வித மனஸ்தாபத்தின் பேரிலும் அல்ல இதர பட முதலாளிகளின் படங்களிலும் அதிகமாக நடித்து, நடிப்பின் மூலம் நிறையப் புகழ் பெற வேண்டும் என்ற ஆசை தான் இதற்குக் காரணம் ஆகும். அந்தக் கம்பெனியிலிருந்த வரையில் சுப்ரமண்யம் அவரை தம் சொந்த பெண் போலவே நடத்தி வந்தாராம்.

சுப்ரமண்யம் கம்பெனியிலிருந்து வெளியேறிய ஜானகிக்கு சகடயோகம் இடம் அளித்தது. அது முதல் அவருக்கு சகடயோகம் ஆரம்

சித்ரபகாவலி

'சித்ரலேகா' என்று மாற்றி வைத்துக் கொண்டு அதில் நடித்திருக்கிறார். பின்னர் மூர்த்தி பிக்சர்ஸார் தயாரித்த **தியாகி** சமூகப் படத்திலும் கதாநாயகி வேஷத்தைப் பெற்றார். ஜானகி பொறுப்பாளி அல்லாத வேறு பல காரணங்களால் இப் படங்கள் வெற்றி பெறவில்லை. ஆனால் ஜானகியைப் பொறுத்த வரையில் தோல்வியுறவில்லை.

சமீபத்தில் வெளிவந்துள்ள பிரபல படங்களான **சந்திரலேகா, ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி** ஆகிய இரு படங்களிலும் ஜானகியைப் பார்க்கலாம். அவர் தற்போது ஜுபிடரின் **வேலைக்காரி, மோஹினி**, எம். கே. டி. பாகவதரின் **ராஜமுக்தி** ஆகிய படங்களில் நடித்து வருகிறா்.

ஜானகி நல்ல குரலைப் பெற்றுள்ளார். சுமாராகப் பாடவும்கூடும். ஆனால் மூன்று படங்களைத் தவிர மற்றெல்லாப் படங்களிலும் அவருக்கு இரவல் குரலே வாக்கப்பட்டிருக்கிறது.

ஜானகி அடக்கமான குணமுடையவர். தமக்கு எந்த வேஷத்தைக்கொடுத்தாலும் முழு மனதுடன் அதை ஏற்றுக் கொண்டு, தம்மாலான வரை சிறப்பாக நடிப்பதையே அவர் தம் தொழில் கொள்கையாகக் கொண்டிருக்கிறார். தகுதியிருந்தாலும் இல்லாவிட்டாலும் பல வழிகளில் தடபுடல் விளம்பரம் செய்து கொண்டு, அதன் மூலம் பிரபலம் அடைவதை ஜானகி விரும்பவில்லை.

சாதாரணமாக, "சினிமாவில் நடிக்கும் பெண்களெல்லாம் நடத்தை பிசகியவர்கள்" என்று எண்ணப்பட்டு வருகிறது. "இது பூராவும் உண்மையல்ல" என்று ஆக்ஷேபிப்பதற்கு இடம் ஏற்படும்படி தூய்மையாய் நடந்து வழிகாட்டுவதே ஜானகியின் வாழ்க்கை—தொழில் லக்ஷியமாம்.

ஜானகிக்கு உடன் பிறந்த சகோதரி கிடையாது. ஆனால் நாராயணன் என்ற பெயருடைய ஒரு இளைய சகோதரன் மட்டும் இருக்கிறான். இப்பொழுது அவன் சென்னையில் 5-வது பாரத்தில் வாசித்து வருகிறான். ஜானகி

யின் தாயார் 1945-ம் வருஷம் காலமானார். அது முதல் அவருடைய தாய் மாமனான எம். நாராயணன் அவரது முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்.

ஸ்ரீ. நாராயணன் ஒரு தமாஷ் பேர் வழி. நான் அவரிடம் கேட்காமலிருந்தபோதே, "ஜானகியின் தினசரி வாழ்க்கை எப்படி?—என்று நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா?" என்று கேட்டார்.

பழம் நழுவி பாலில் விழுந்ததாக நான் பாவித்துக் கொண்டு, "என்ன அப்படிக் கேட்கிறீர்களே? கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும். சொல்லுங்கள்" என்றேன்.

அவர் ஆரம்பித்தார்: "தினசரி அதிகாலையில் எழுந்திருப்பார். உடனே பீச்சுக்குச் சென்று கரையோரமாய் ஒரு மைல் ஓடுவார். பிறகு ஒரு மணி நேரம் பாட்மின்டன் விளையாடுவார். வீட்டிற்கு வந்து சிற்றுண்டி அருந்திவிட்டு, பத்திரிகைக்காரர்களுக்கு ஒரு மணி நேரம் பேட்டி அளிப்பார். பிறகு சங்கீத சிக்ஷை. பின்னர் பதினோறு மணிக்கெல்லாம் சாப்பாடு. அப்புறம் ஸ்டுடியோவுக்குப் போவார். சாயங்காலம் மாதர் சங்கத்திற்கு போவார். டென்னிஸ் விளையாடுவார்......" இப்படியே அடுக்கிக் கொண்டு போனார்.

நான் ஆச்சரியம் அடைந்து, "டென்னிஸ்கூட ஆடுவாரா! அப்புறம்...!" என்றேன்.

"அப்புறம்என்ன? இந்த மாதிரி யெல்லாம் ஜானகி செய்வதேயில்லை" என்று கூற வந்தேன்" என்று முடித்தார் பார்க்கலாம்!

நான் விடவில்லை. "அப்படியானால் அவர் என்னதான் செய்கிறார்? அவருக்கு என்னதான் பிடிக்கும்?" என்று கேட்டேன்.

"உங்கள் வீட்டு ஸ்திரீகள் தினசரி என்ன செய்கிறார்களோ அதையேதான் ஜானகியும் செய்கிறார். வீட்டில் வேலைக்காரர்களே கிடையாது. சமையல், முதலிய எல்லா வீட்டு வேலைகளையும் ஜானகியேதான் கவனித்து வருகிறார். எளிய வாழ்க்கை வாழ்வது தான் அவரது விருப்பம்" என்றார்.

சுமார் ஐந்தடி உயரமும், மாநிறமும் உள்ள ஜானகிக்கு, ஹிந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் ஆகிய பாஷைகளை பேசத்தெரியுமாம். தமிழ், மலையாளம் இவ்விரண்டு பாஷைகளை எழுதப் படிக்கவும் தெரியுமாம்.

அவருடைய கணவரே மேக்கப் மென்னாயிருப்பதால் ஜானகியும் மேக்கப் செய்யக் கற்றுக் கொண்டிருக்கிறார். அவர் தம்முடைய மேக்கப்பை தம்முடைய கையாலேயே போட்டுக் கொண்டு நடித்து வருகிறார்.

ஒருவர் கலையில் முன்னுக்கு வரவேண்டுமானால் அவருக்கு அடக்கமும், ஆர்வமும் இருக்க வேண்டும். இந்தக் குணங்கள் ஜானகியிடமோ நிறைய உள்ளன. அதோடு பட முதலாளிகளுக்கு, படத் தயாரிப்பின் போது தம்மால் எவ்விதமான கஷ்டமும் ஏற்படக் கூடாது என்று அவர் கருதுவதால், விரைவில் முன்னணி நக்ஷத்திரமாகி விடுவார்.

குண்டூசியைக் கேளுங்கள்

எம். கே. சாமி (தூத்துக்குடி)

மதன மாலாவில் நடிக்கும் ரஜனி, ஒரு இரவு என் கனவில் தோன்றி என்னை மணந்து கொள்ளுவதாக உறுதி கூறிப் போனார். இந்தக் கனவை நான் கண்டது கடைசி ஜாமத்தில். எனின், என் கனவு பலிதமாகுமல்லவா?

பேச்சு உரிமை, எழுத்து உரிமை இவைகளுக்கு சில சமயம் தடை ஏற்படலாம். ஆனால் கனவு உரிமைக்கு யாரும் தடை உத்தரவு பிறப்பிப்பது சாத்தியமேயல்ல. ஆனால் நீர் பகல் வேளையில் காண வேண்டிய மேற்படிக் கனவை இரவு நேரங்களில் கண்டு வருவதை எடுத்துக் காட்டவேண்டியிருக்கிறது!

என். ஆர். சேஷன் (மதுரை)

கன்னிகாவில் நடிக்கும் எம். எஸ். சரோஜினி என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? விவாஹம் ஆகிவிட்டதா? எனின் கணவன் பெயர் என்ன?

கன்னியான சரோஜினி தேவதாஸி குலத்தைச் சேர்ந்தவர்.

என். நடேசன் (எடப்பாடி)

டி. ஆர். ராமச்சந்திரனின் சொந்த ஊர் எது? அவருக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

அவருக்கு விவாஹம் கிவாஹம் எல்லாம் ஆகிவிட்டது. திருச்சி ஜில்லாவிலுள்ள திருக்காம்புலியூர் அவருடைய சொந்த ஊர் ஆகும்.

எம். எஸ். ஹூஸேன் (திரிச்சிராப்பள்ளி)

நான் சினிமாவில் சேர்ந்து, சமூக சீர்திருத்தக்கதைகளை எழுதி, நடித்து, ஜனங்களுக்கு நல்வழி காட்ட விரும்புகிறேன். எனக்கு சினிமாவில் இடம் கிடைக்குமா?

ஜனங்களுக்கு நல்ல வழி காட்ட நினைக்கும் நீர், உம் வாழ்க்கைக்குத் தேர்ந்து எடுத்துள்ள வழி (சினிமா) நல்ல வழியல்ல என்பதை முதலில் தெரிந்து கொள்ளும்!

டி. அழகப்ப பிள்ளை (தாழக்குடி)

சில நாடகங்களில் பூராவாக ஆண்களே நடித்து வருகிறார்களே. அது போல பூராவாக ஆண்களே நடித்துப் படங்களை எடுத்தால் என்ன?

எடுக்கலாம். அப்புறம் ரஸிகர்கள் நடிகைகளைப் பற்றிக் கனவு காணும் வழக்கத்தை நிறுத்தி விடுவார்கள்! அநேக பட முதலாளிகள் படம் எடுக்கும் வழக்கத்தையே விட்டுவிடுவார்கள்!

எஸ். ஏ. இப்ராஹிம் (மதுரை)

டி. எஸ். கோவிந்தனின் சொந்த ஊர் எது? இதுவரை எத்தனை படங்களில் நடித்திருக்கிறார்?

உங்கள் ஊருக்கு அருகிலுள்ள பூச்சிரம்பட்டிதான் கோவிந்தனின் சொந்த ஊராகும். "லீலாவதி சுலோசனா, குபேர குசேலா, பக்த ஹநுமான், ஆரவல்லி, லக்ஷ்மி விஜயம், ஆயிரம் தலைவாங்கி அபூர்வசிந்தாமணி" ஆகிய ஆறு படங்களில் நடித்திருக்கிறார்.

பி. வி. ஆண்டியப்பா (பாரூர்)

எம். கே. டி. பாகவதர் நடித்தமுதல் படம் எது? இதுவரை எத்தனை படங்களில் நடித்திருக்கிறார்? அவருக்கு என்னென்ன பாஷைகள் தெரியும்?

பாகவதர் நடித்த முதல் படம் "பவளக்கொடி". இதுவரை அவர் ஒன்பது

படங்களில் நடித்திருக்கிருர். தமிழ் தவிர பாகவதர் ஹிந்தி பாஷையையும் கற்றுக்கொண்டிருக்கிருர் என்று கேள்வி,

கே. ஆர். எஸ். மணியன் (திருச்சி)

எங்கள் குடும்பத்தில் அநேகர் சம்பாதித்தும், குடும்பம் முன்னுக்கு வராமல் தரித்திரம் தாண்டவமாடுகிறது. எங்கள் வறுமையைப் போக்க ஏதேனும் வழி சொல்லும்.

வறுமையைப் போக்கிக் கொண்டு தனவந்தராவதற்கு சினிமாவில் சேரும்படி யோசனை சொல்லுவேன் என்று நீர் எதிர்பார்த்தால் ஏமாற வேண்டியதுயதான். ஏனென்ருல், ஆயிரத்திலொருவர்தான் சினிமா மூலம் நக்ஷத்திரமாகி, லக்ஷக் கணக்கில் சம்பாதித்து வருகிருர்கள். ஆதலால் விடா முயற்சியுடன் வேறு ஏதேனும் புதிய தொழிலை மேற்கொண்டு உழைக்கவும்.

பத்மநாபன் (ஸ்ரீரங்கம்)

டைரெக்டர் கே. சுப்ரமண்யம் தற்போது ஏதேனும் படங்களைத் தயாரிக்கிருரா? அவருடைய விலாஸம் என்ன?

தற்போது அவர் "இதோ காந்தி" என்ற படத்தைத் தயாரிக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிருர். விலாஸம்:— 7 பெல்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.

ஏ. எம். ராமமூர்த்தி நாயுடு (சென்னை)

பி. ஏ. பெரிய நாயகி தற்போது எந்தப் படத்தில் நடிக்கிருர்?

பெரிய நாயகி தற்போது கே. சுப்ரமண்யம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கும் "இதோ காந்தி" படத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

என். டி. கோவிந்தராஜுலு (கோயமுத்தூர்)

இது நிஜமா படத்தில் நடிக்கும் பால சுந்தரும் சரோஜனியும் புருஷன் மனைவியா?

அது போல அவர்கள் நடித்திருக்கிருர்கள்; அவ்வளவுதான்.

வெளியூர்களில் வெற்றி மாலை சூடி வரும் ஜுபிடரின் "அபிமன்யு" விற்கு புஷ்பமாலை சூட்ட வருகிருர் யூ. ஆர். ஜீவரத்தினம்

வி. கிருஷ்ணஸ்வாமி (திண்டிவனம்)

பிரம்மரிஷி விஸ்வாமித்ராவில் தோன்றும் டி. ஏ. மதுரம் கர்ப்பவதி போலத் தோன்றுகிருரே?

'போல' என்ன? உண்மையும் அதுதான். கலைச் செல்வி கண்ணுக்குப் புலப்படாமல் அப்படத்தில் நடித்திருக்கிருள்!

லீலா (பழநி)

ஹொன்னப்ப பாகவதரின் சொந்த ஊர் எது? அவருக்கு என்ன வயதாகிறது? குழந்தைகள் உண்டா என்பதையும் தெரிவிக்கவும்.

ஹொன்னப்பாவின் சொந்த ஊர் பங்களூருக்கு அருகாமையிலுள்ள சௌடசத்திரம் என்ற கிராமமாகும். முப்பது வயது நிரம்பப் பெற்ற அவருக்கு ஒரு பெண் குழந்தை இருக்கிறது.

டி. ஏ. ரஹீம் (வளவனூர்)

டி. ஆர். ராஜகுமாரி கட்டி வந்த

தியேட்டர் ஆரம்பமாகி விட்டதா? இல்லையேல் எப்பொழுது ஆரம்பமாகும்?

மேற்படித் தியேட்டரில் இப்பொழுது பூச்சு வேலை நடந்து வருகிறது. ஒன்றிரண்டு மாதங்களில் ஆரம்பமாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

என். வி. காஞ்சனா (தாழக்குடி)

"விதியை வெல்ல மதி உண்டு" என்று ராஜேஸ்வரி படத்தில் ராஜேஸ்வரியும், "விதி வழிதானே மதி செல்லும்" என்று சாவித்திரி படத்தில் நாரதரும் சொல்லுகிறார்கள். இதைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்னவோ?

மதியைக் குழப்பும் வகையில் இவ்விரு வசனங்களும் முரண்படுவதை நம் தலைவிதி என்றுதான் கருதவேண்டியிருக்கிறது!

எம். கே. அசனுதீன் (திரிகோணமலை)

விஜயகுமார், குமாரி கமலாவின் கூடப் பிறந்த அண்ணன் என்று என் நண்பர் கூறுகிறார்?

"குமாரி கமலாவுக்குக் கூடப் பிறந்த சகோதரர்களே கிடையாது" என்று 'குண்டூசி' கூறுவதாக உம் நண்பரிடம் சொல்லும்.

ஏ. கே. கோபு (குரும்பலூர்)

மஹாத்மா உதங்கர் படத்தில் நடிக்கும் விஜயகுமாரியைப்பற்றிய வரலாற்றைத் தெரிவிக்க முடியுமா? உதங்கருக்குப்பின் வேறு ஏதேனும் படத்தில் அவர் நடிக்கிறாரா?

ஒரு பாகவதரின் சொந்தக்காரியான விஜயகுமாரி எப்படியோ சினிமா உலகிற்குள் சறுக்கி விழுந்தார். பிறகு இங்கிருந்து வழுக்கி விழுந்து ஒரு சுந்தரமான குழந்தையின் தாயாராகப் பிழைத்தெழுந்திருக்கிறார்! அவர் அடுத்தபடியாக என்ன செய்வாரோ, ஸ்வாமி; எனக்குத் தெரியாது!

கே. எம். சுப்ரமணியம் (செங்கற்பட்டு)

பட முதலாளிகள் படங்களில் இரவல் குரல்களைப் பதிவு செய்து விட்டு அதை விளம்பரப்படுத்தாமல் ரசிகர்களை ஏமாற்றுவது சரியா? இதைக் கண்டிக்க வழி என்ன?

ஒரே வழிதான் தோன்றுகிறது. நீர் வேண்டுமானால் இரவல் காசைக் கொடுத்து அப்படங்களைப் பார்த்து அவர்களைப் பதிலுக்கு ஏமாற்றலாம்!

வீர. சபாரத்தினம் (புதுக்கோட்டை)

சர்க்கார் தொழில் கல்விக் கழகம் சென்னையில் எங்கே இருக்கிறது? அதன் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

"சர்க்கார் தொழில் கல்விக் கழகம், ஜார்ஜ் டவுன், சென்னை" என்ற விலாஸத்திற்கு எழுதும்.

ஜே. ஜெயசீலன் (மாயவரம்)

டைரெக்டர் டி. ஆர். சுந்தரம் டைரெக்ட் செய்த முதல் படம் எது? அவருக்குப் பாடத் தெரியுமா?

சுந்தரம் டைரெக்ட் செய்த முதல் படம் "சதி அகல்யா." அவருக்குப்

விரைவில் சென்னை சாகரில் வெளிவர விருக்கும் "சம்ஸார நௌகா" தமிழ்ப் படத்தில் எம். ஜே. ஆன்டான் நடனம் ஆடுகிறார்.

ஜெமினியின் புதிய படமான "ஞான சௌந்தரி"யில் சுசிலாவுக்கு வரலக்ஷ்மி இப்படி உபசாரம் செய்கிறார்.

பாடத் தெரிந்திருந்தால் அவர் நடித்துள்ள இரண்டு படங்களிலும் பாடாமல் விட்டிருப்பாரா என்ன ?

ஏ. நாகப்பன் (புவனகிரி)

மஞ்சுளா படம் என்னவாயிற்று? ஏன் அது இன்னும் வெளிவரவில்லை ?

அதில் நடித்த வி. ஏ. செல்லப்பாவை அழைத்துப்போக வந்த மரண தேவன் அந்தப் படத்தையும் ஒரு கண் பார்த்துவிட்டுப் போயிருக்கிறான் !

வி. கோதண்டபாணி (பெரம்பூர்)

ஜகதலப்ரதாபனில் நடிக்கும் வரலக்ஷ்மியும் ஆயிரம் தலைவாங்கியில் நடிக்கும் வரலக்ஷ்மியும் ஒருவரே தானா ?

ஆம் ஒருவரேதான்.

அ. முகம்மது மொய்தீன் (பாலக்காடு)

இது நிஜமா படத்தில் நடிக்கும் பால சுந்தரைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கவும்.

மைலாப்பூர் வக்கீல் சுந்தரம் ஐயரின் புத்திரர்—பாலசுந்தர். "சீதா கல்யாண"த்தில் நடித்தவரும் சித்திரத் தேர்ச்சியுடையவருமான மாஸ்டர் ராஜமும், "சிவகவி"யில் நடித்த ஜெயலக்ஷ்மியும் பாலசுந்தருடன் பிறந்தவர்களாவர். "ரிஷ்யஸ்ருங்கரி"ல் "சகி தான் பா" என்கிறாரே அவர் இதே பாலசுந்தர்தான்.

கே. என். முத்து (கொழும்பு)

என். ஸி. வஸந்த கோகிலத்தின் சொந்த ஊர் எது? அவருக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

சொந்த ஊர் இருளாலக்குடா; ஆனால் வாசம் செய்து வந்ததெல்லாம் நாகப்பட்டினத்தில். அவர் மறக்க விரும்பும் விவாஹ விஷயத்தை நாம் எதற்கு ஞாபகமூட்ட வேண்டும் ?

என். எம். மரைக்காயர் (மன்னார்)

ஜூபிடர் ராஜகுமாரியில் நடிக்கும் கே. மாலதி இதற்கு முன் ஏதேனும் படங்களில் நடித்திருக்கிறாரா ?

வாஹினியின் "சுமங்கலி" தெலுங்குப் படத்தின் மூலம் சினிமாவில் பிரவேசித்த மாலதி முதன் முதலாக "சுபத்ரா" தமிழ்ப் படத்திலும் பிறகு ஜூபிடரின் "ஸ்ரீமுருகனி"லும் நடித்திருக்கிறார்.

எம். ரத்தினம் (மதுரை)

தமிழ்ப் படங்களில் கிறிஸ்தவர் எவரேனும் நடிக்கின்றனரா ?

எனக்குத் தெரிந்த வரையில், எவருமில்லை.

டி. சி. லக்ஷ்மணன் (சென்னை)

நீங்கள் அதிகமாகப் பெண்களின் வாழ்க்கையையே வர்ணிக்கிறீர்களே, ஏன் ?

வாசகர்கள் எதை அதிகமாக விரும்புகிறார்களோ அதைத்தானே நான் எழுதவேண்டியிருக்கிறது ?

வி. ராமச்சந்திரன் (கடப்பை)

பேபி ராதா தற்போது ஏதேனும் படங்களில் நடிக்கிறாளா ?

இல்லை.

"முரளீதரன்" (சென்னை)

எம். கே. டி. பாகவதர் ராஜயோகியை முடிக்காமலே ராஜமுக்திக்குப் போய்விட்டது சரியா?

"யோகி"யாக இருப்பதெல்லாம் "முக்தி" பெறுவதற்காகத்தானே! ஆதலால் "முக்தி" கிடைக்கும் சமயத்தில் அதை மறுத்துவிட்டு "யோகி"யாகவே இருக்க யார்தான் விரும்புவார்கள்!

எம். சேது (சித்தூர்)

தவமணிதேவி படங்களில் நடிக்கும்போது மேல்ஆடைகளை ஏன் ஆபாஸமின்றி அணிந்து கொண்டு நடிக்கக் கூடாது?

உம்முடைய யோசனையை பின்பற்றுவதாயிருந்தால் அவர் சினிமாவிலிருந்தே விலகிவிட வேண்டியதாகிவிடுமே, ஸ்வாமி!

பெ. ஷண்முகம் (மூணார்)

காட்டிலே பிறந்து காட்டிலே வளர்ந்த (ஸ்ரீவள்ளி) குமாரி ருக்மணிக்கு நாட்டியம் ஆடக் கற்றுக் கொடுத்தவர் யார்?

பல்லவ நாட்டிலே பிறந்து, சொந்த வீட்டிலே வளர்ந்த நட்டுவனார் எல்லப்ப பிள்ளை.

பி. துளசிலால் (குண்டூர்)

அபூர்வ சிந்தாமணியில் நடிக்கும் வரலக்ஷ்மிக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

இன்னும் ஆகவில்லை.

"அகராதி" (திண்டுக்கல்)

ஐயா, குண்டூசியாரே! வாருமையா ஆனது ஆகட்டும். நீர் கதாநாயகனாகவும், நான் வில்லனாகவும் நடித்துப் பார்த்துவிடுவோம்!

ரொம்ப சரி; முதலை இழக்க விரும்பும் ஒரு முதலாளியை முதலில் கண்டு பிடியும்!

"சினிமா நாதன்" (காஞ்சீபுரம்)

பாகவதரின் படத்திற்கு ராஜமுக்தி என்று பெயர் வைத்ததற்குக் காரணம் என்ன?

தியாக-ராஜ-முக்தி என்றுதான் வைத்துக் கொள்ளுமே!

தி. ல. சு. மணி (தியாகராயநகர்)

சந்திரலேகாவில் டி. ஏ. ஜெயலக்ஷ்மிக்கு ஏன் ஒரு சாதாரண வேஷத்தைக் கொடுத்திருக்கிறார்கள்?

அவர் அப்பொழுது ஒரு சாதாரண நடிகையாகத்தானே இருந்தார்.

மு. பழனி (கொத்தமல்லி)

எம். கே. டி. பாகவதரின் ராஜமுக்தி படத்தைக் காட்டக் கூடாதென்று சர்க்கார் தடை விதித்திருக்கிறார்களாமே. உண்மைதானா?

இப்படத்தின் விநியோக உரிமைகள் சம்பந்தமாக எழுந்த வழக்கில் முதலில் தற்காலிக தடை உத்தரவு விதிக்கப்பட்டது உண்மைதான். ஆனால் அந்த வழக்கு பிறகு விசாரிக்கப்பட்டு, மேற்படி உத்தரவு ரத்து செய்யப்பட்டு விட்டது.

"அட, அசட்டு மாது! உன்னை இப்படி விழிக்கச் சொன்னது யார்? அதுவும் டிக்கிதானே!..." ("சம்ஸார நௌகா"வில் டி. ஆர். ராமச்சந்திரன்.

கே. வி. கே. (கும்பகோணம்)

ஸிடாடல் ஞானசௌந்தரி படத்தில் எம். வி. ராஜம்மா பாடுவது தம் சொந்தக் குரலில்தானா?

இல்லை. பி. ஏ. பெரியநாயகியின் குரல் அவருக்கு இரவல் வாங்கப்பட்டிருக்கிறது.

கே. சேஷாத்திரி (பவானி)

புது முகங்களை நடிக்கச் செய்து சமீபத்தில் தயாரிக்கப்பட்ட சில படங்கள் தோல்வி அடைந்த காரணம் என்ன?

புது முகங்களை நடிக்கச் செய்ததினால்தான் அவை தோல்வி அடைந்தன என்று கூறுவதை நான் ஒப்புக்கொள்ளவில்லை.

முபாரக் "பில்ஹணா"வில் கே. ஆர். ராமசாமியும், ஏ. ஆர். சகுந்தலாவும் தோன்றும் காதல் கட்டங்கள் பிரமாதமாயிருக்கும் போலிருக்கிறது.

எஸ். துரைசாமி (ராசிபுரம்)

குமாரி கமலா ஹிந்தி ராம்ராஜ்யாவில் நடனம் ஆடியிருக்கிறாரா?

ஆம், ஆடியிருக்கிறார்.

கே. எஸ். முஹம்மது இப்ராஹிம் (திண்டிவனம்)

உண்மைக் காதலர்கள் ஒருவரையொருவர் பிரிந்தால் என்ன நேரிடும்?

கதையில், ஸ்வாரஸ்யம் உச்ச நிலையை அடையும்.

எஸ். சூர்யகோடி (அம்பத்தூர்)

மிஸ் மாலினி படத்தில் சம்பத்தின் வேலைக்காரப் பையனாக நடிக்கும் பையன் யார்? பெயர் என்ன? என்ன செய்து கொண்டிருக்கிறான்?

அந்த வேஷத்தில் தோன்றிய கோபால கிருஷ்ணன் ஒரு கல்லூரி மாணவன். ஸிடாடல் "ஞான சௌந்தரி"யில் பால ஞான சௌந்தரியாக நடிக்கும் பேபி ராஜாமணியின் தமையன்.

ஏ. தெய்வநாயகம் (மஞ்சக்குப்பம்)

எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஏதாவது படங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறாரா?

அவர் இனி நடித்தால் சொந்தப் படத்தில்தான் நடிப்பார் என்று நினைக்கிறேன்.

ஆர். வி. ராமன் (மேட்டூர் அணை)

சினிமாவானது ஜனங்களைக் கொள்ளை அடிப்பதற்காகவே தோன்றியிருக்கிறது என்கிறேன்.

ஆம்; இரவுக் கொள்ளை போதாதென்று பகற் கொள்ளை அடிப்பதற்காக "மாட்டினி"களையும் வைத்து விடுகிறார்கள்! அது மட்டுமா? அந்த நடிகைகள் எவ்வளவு வாலிபர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விடுகின்றனர்!

எம். வி. முத்து (பம்பாய்)

மிஸ் மாலினியில் நடித்த புஷ்பவல்லி இப்பொழுது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

ஜெமினியின் "கோராகும்பர்" தமிழ்ப் படத்தில்.

எஸ். துரை (ஆரணி)

மதனமாலாவில் ரஜனி பாடுவது தம் சொந்தக் குரலிலா?

அவருக்குப் பாடவும் பேசவும் மட்டும் தெரிந்திருந்தால் இவ்வளவு நாளைக்கு ஒரு 'லக்ஷ ரூபாய்' நக்ஷத்திர மாகி யிருக்க மாட்டாரா!

கே. ஆறுமுகம் (குன்னத்தூர்)

எஸ். டி. சுப்புலக்ஷ்மி கொஞ்ச கால மாய் ஏன் சினிமாவில் தோன்றவில்லை?

அவர் கொஞ்ச காலமாக படங்களில் நடிக்காமலிருந்து, இப்பொழுது கொஞ்சும் காலத்தை அடைந்திருப்பது உமக்குத் தெரியாது போலும்!

அர்த்தநாரி (சேலம்)

பி. யு. சின்னப்பா, டி. ஆர். மஹாலிங்கம் இவ்விருவரில் சங்கீதத்தில் சிறந்தவர் யார்?

டி. ஆர். மஹாலிங்கம்.

ஆர். முத்தியால் (ராசிபுரம்)

எம். கே. தியாகராஜபாகவதருக்கு இப்பொழுது வயது என்ன ஆகிறது? சொந்த ஊர் எது? என்ன ஜாதியைச் சேர்ந்தவர்?

விஸ்வ பிராமண ஜாதியில் பிறந்த பாகவதருக்கு 38 வயது நிரம்பி விட்டது. சொந்த ஊர்-மாயவரம். ஆனல் தற்போது குடியேறியுள்ளதோ திருச்சியில்,

என். காளியப்பசெட்டி (ஜோலார்பேட்டை)

ஜி. என். பாலசுப்ரமண்யம் ஏன் தற்போது சினிமாப் படங்களில் அதிக மாய் நடிப்பதில்லை?

அதிகமாய் என்பானேன்; துளிக்கூட என்று சொல்லும்! படிப்பிலும் சங்கீதத்திலும் பட்டங்களைப் பெற்றுள்ள ஜி. என். பி. இனிப் படங்களில் நடிக்காமல் "புத்திசாலி"ப் பட்டத்தைப் பெறப் போவதாகக் கேள்வி!

எஸ். பி. சாமி (புதுவை)

பில்ஹணன் படத்தில் நடிக்கும் எம். எஸ். திரௌபதி இதற்கு முன் ஏதேனும் படத்தில் நடித்திருக்கிறாரா?

இல்லை; அதுவே அவரது முதல் படம்.

ஆட்ட அழகி சௌதாமினி "ஸ்ரீ ஆண்டாள்" படத்தில் அபாரமாய் ஆடியிருக்கிறாராம்.

பி. எல். சுந்தரம் (ஜார்ஜ் டவுன்)

டி. ஆர். ராஜகுமாரி பல படங்களில் பலருக்கு மாலை போட்டிருக்கிறாரே? அசல் வாழ்க்கையில் அந்த மாதிரி சந்தர்ப்பம் அவருக்கு ஏற்பட்டதுண்டா?

பேஷாய் உண்டு. வெள்ளிக்கிழமை தோறும் சுவாமி படத்திற்கு அவர் மாலை போடத் தவறுவதேயில்லை!

ஏ. துரைராஜ் (மணப்பாறை)

பி. எஸ். கோவிந்தனுக்கு விவாஹம் ஆகிவிட்டதா? குழந்தைகள் உண்டா?

சுமார் ஒன்பது வருஷங்களுக்கு முன்பே அவருக்கு விவாஹம் ஆகிவிட்டது. ஆனல் குழந்தைகள் இடையாது.

ஆர். ஏ. ஆறுமுகம்
(விக்ரமசிங்கபுரம்)

டி. ஆர். ராஜகுமாரிக்கு வயது 26; டி. ஆர். மஹாலிங்கத்திற்கோ 24. இவ்விருவரும் **பவளக்கொடியில்** தம்பதிகளாய் நடிப்பது பொருந்துமா?

என்னவோ சொல்ல வந்து விட்டீரே? கண்ணாம்பா சின்னப்பாவிடம் காதல் புரிவதையே நாம் சஹித்துக் கொள்ளவில்லையா, என்ன!

எம். ராமன் (கொழும்பு)

டைரெக்டர் ஸ்ரீராமுலு நாயுடுவின் விலாஸத்தை தயவு செய்து தெரிவிக்கவும்.

c/o பக்ஷிராஜா ஸ்டுடியோ. கோயமுத்தூர்-என்று எழுதும்.

எஸ். எஸ். கைலாஸ்
(யாழ்ப்பாணம்)

நேயர்கள் ராஜகுமாரியைப் பற்றியே உங்களிடம் அடிக்கடி கேட்கிறார்களே; காரணமென்ன?

மற்றவர்களைப் பற்றிக் குறைகூறும் நீர் கூட இப்பொழுது ராஜகுமாரியைப் பற்றித் தானே கேட்கிறீர்!

எம். ஆர். மணி (மதுரை)

சசாங்கன் சந்திரலேகாவை பலாத்காரம் செய்ய முற்படும் கட்டத்தில் சந்திரலேகாவாக நடிப்பவர் ராஜகுமாரி அல்லவென்று என் நண்பர் கூறுகிறார்?

தமக்குத் தெரிந்த இரகஸியத்தை பிறருக்குச் சொல்லாமல் போனால் சிலருக்கு மண்டை வெடித்துவிடும். அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர் உம் நண்பர்!

வி. ராமன் (பங்களூர்)

டி. ஆர். மஹாலிங்கம் இவ்வளவு இனிமையாய்ப் பாடுகிறாரே, சங்கீதக் கச்சேரிகள் செய்ய அழைத்தால் வருவாரா?

கொஞ்சம் பொறும்; கூடிய சீக்கிரம் அவர் வரிசையாய் கச்சேரி செய்ய ஆரம்பிக்கப் போகிறாராம்.

எங்கள் வியாபார ஸ்தலங்கள்

பெங்களூர், பனாரீஸ், காஞ்சீவரம், பெங்கால் பட்டுப் புடவைகளுக்கும் இன்னும் எல்லாவித ஜவுளி தினுசுகளுக்கும் பெயர் — போனவை —

கால நிலையை அனுசரித்தே விலை

P.R. நாராயணசாமி அய்யர்

Branch :	பட்டு நூல்
Fancy Hall	**ஜவுளி வியாபாரம்**
சைனா பஸார்,	பெரியகடை வீதி,
திருச்சினாப்பள்ளி.	**திருச்சினாப்பள்ளி.**

"ஜீவஜோதி"யில் நடித்த
கே. கே. கிருஷ்ணவேணி
"சம்ஸாரம்" ;தமிழ் சமூகப்
படத்தில் கதாநாயகியாய்
நடித்திருக்கிறார்.

ராயல் டாக்கீஸாரின்
"சுதர்சன்" தமிழ்ப் படத்தில்
பி. யு. சின்னப்பா ஒரு பெரிய
பக்திமானாக மாறி பஜனை
செய்கிறார்.

"சுதர்சன்" படத்தில் யோக மங்களம் தம் முந்தின படங்களைவிட சிறப்பாக நடித்திருப்பதைநிதர்சனமாய் காணலாமாம்.

இடது புறம்;
ஜெமினி சமீபத்தில்
வெளியிட்டிருக்கும்
"ஞானசௌந்தரி"யில்
கண்ணாம்பா நன்கு
நடித்திருக்கிறார்.

★

வலது புறம்:
ஜெமினி "ஞானசௌந்தரி"
குடும்பத்தினர்.

குண்டூசி



இடது புறம்:
அந்தப் பெரிய மனிதரிடம்
பி. எஸ். கோவிந்தன் ஏதோ
சமாதானம் கூறுகிறார்
போலிருக்கிறது.
(போஜன்)

★

வலது புறம்:
"சுதர்சன்" படத்தில்
சின்னப்[illegible]ம்,

அதிவேகத்தில் ஜெமினி தயாரித்து வெளியிட்டிருக்கும் "ஞான சௌந்தரி"யில் புது நடிகை வி. எஸ். சுசீலா ஞானசௌந்தரியாக நடிக்கிறார்.

முபாரக் பிக்சர்ஸார் தயாரித்து முடித்துக் கொண்டிருக்கும் "பில்ஹணா" தமிழ்ப் படத்தில் கதாநாயகியாக நடிக்கும் ஏ. ஆர். சகுந்தலா.

ஜே. ஆர். செல்லம் மிக உல்லாஸ
மாகக் காக்ஷி அளிக்கிறார் "வேதாள
உலகம்" தமிழ்ப் படத்தில்.

சம்பந்தமற்ற ஹாஸ்யம்

எங்கள் ஊரில் உள்ள தியேட்டரில் "விஸ்வாமித்திரா" படம் ஓடிற்று. அதில் என். எஸ். கிருஷ்ணன், டி.ஏ.மதுரத்திடமிருந்து குழந்தையை வாங்கிக் கொள்கிறார். அச்சமயம் புளிமூட்டை ராமசாமியிடம் 'குழந்தைகளைப்பற்றி உங்களுக்கு என்னப்பா தெரியும், திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார் குழந்தைகளைப் பற்றி' என்று ஒரு பாடலை சொல்லுகிறார். மேற்படி படமோ பழைய புராணப் படம். அந்த கதை நடந்தபோது திருவள்ளுவர் தோன்றி விட்டாரா? திருக்குறளும் எழுதி விட்டாரா? புராணங்கள் எல்லாம் வெறும் பொய் குப்பை கூளங்கள் என்று சொல்லும் ஒரு சாரர் அபிப்பிராயப்படி எல்லாவற்றையும் புது முறையில் புகுத்தியிருக்கிறார்களா படமுதலாளிகள்? அல்லது என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் காமிக்கிற்கும் கதைக்கும் சம்பந்தம் இல்லையென்றால் படைவீரன் வேஷத்தில் மேற்படியார் வருவானேன்? படமுதலாளிகள் தற்கால புதுமுறை கருத்துக்களைப் படத்தில் புகுத்த வேண்டுமென்றால் புராண படத்துக்கும் காமிக்கிற்கும் சம்பந்தம் இல்லாமல் செய்து காமிக்கை எவ்வளவு வேண்டுமானாலும் புகுத்தட்டும்,

சென்ற ஒரு 'குண்டூசி' இதழில் ஒரு நண்பர், படங்களில் நாட்டியம் சம்பந்தமில்லாமல் புகுத்தப் படுவதைக் கண்டித்தெழுதியிருந்தார். "விஸ்வாமித்ரா"வை அதற்கு உதாரணமாகச் சொல்லலாம், சுநச்சேபன் தன் மாமனாகிய விசுவாமித்திரரிடம் தன்னை யாகத்துக்குப் பலிகொடுக்கப்போகிறார்கள் என்று சொல்லவருகிறான். விஸ்வாமித்திரர் என்னவென்று கேட்டபோது ஆபத்தான அக் கட்டத்தில் சுநச்சேபன் அந்த விபரத்தை பாட்டு மூலியமாகவா தெரியப்படுத்த வேண்டும்? பாட்டு முடியவோ பத்து நிமிஷம் ஆகிறது. ஒரு வேளை படமுதலாளிகளுக்கு பழய நாடக வழியை விட மனமில்லையோ? நாகரிகம் பெருகும் இக்காலத்தில் இந்த உளுத்துப் போன வழிகளை சீக்கிரம் மாற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

டி. வி. கணேசன்,
கும்பகோணம்.

தமிழ் இசைத் தட்டுகள்

கோயமுத்தூரில் மொத்தம் 10 தியேட்டர்கள் உள்ளன. அவைகளில் 3 தியேட்டர்களில் ஆங்கிலப் படம், ஒரு தியேட்டரில் ஹிந்திப் படம், மற்ற 6 தியேட்டர்களில் தமிழ்ப் (தெலுங்கும் கூட) படம் ஆக காட்டப்பட்டு வருகிறது. மேற்படி ஆங்கில, ஹிந்தி தியேட்டர்களாவது போகட்டும். மற்ற 6 தமிழ்த் தியேட்டர்களிலும் படம் ஆரம்பிக்கும், முன்பும் இடைவேளை சமயத்திலும் ஹிந்தி இசைத்தட்டுகளை வைத்து காதைத் துளைத்து விடுகிறார்கள் தியேட்டர் நிர்வாகிகள்; தமிழ் இசைத் தட்டுகளை ஏன் வைக்கக் கூடாது?

பி. பாலுசாமி
கோயம்புத்தூர்.

தனித் தியேட்டர்கள் வேண்டும்

மதுரை மாநகரிலே 9 சினிமா தியேட்டர்களிருந்தும், புதிதாக வெளியாகும் எல்லா தமிழ்ப் படங்களையும் மக்கள் பார்க்கும் பாக்கியம் கிட்டவில்லை.

தமிழ் மக்கள் வாழும் மதுரை மாநகரில் தமிழ் பேசும் படங்களைக் காட்ட தனித் தியேட்டர்களை ஒதுக்கிக் கொள்ளாது, பிற மொழிகளான இங்கிலீஷ், ஹிந்திப் படங்களுக்கு 2 தியேட்டர்களை ஒதுக்கிக் கொண்டிருக்கின்றனர். மீதி 7 தியேட்டர்களை காண்கின், 3 ல் பிற மொழிப் படங்களோடு பழந் தமிழ்ப் படங்களும், 4-ல் பெரும்பான்மை புதுத் தமிழ்ப் படங்களானாலும் அடிக்கடி பிற மொழிப் படங்களும் கவ்விக் கொள்கின்றன. இந்நிலைமை காரணமாக, வெளியிடப்பட்டு மாதங்கள் பல கண்டிருக்கும்

'சிகாமணி, விசித்ர வனிதா, இது நிஜமா, காமவல்லி" முதலான படங்கள் மதுரையிலே வெளிவந்தபாடில்லை.

இனி மேலாயினும், தமிழ்ப் படங்களுக்குத் தனித் தியேட்டர்களை ஒதுக்கி, மக்களுக்கு சகல தமிழ்ப் படங்களையும் வெளியிட்டு நற்பெயர் பெற முன் வருவார்களாக!

மு. ராமசாமி,
மதுரை.

தொத்து வியாதி

இப்பொழுது வெளி வரும் படங்களில் நடனம் மிகவும் மோசமாய் இருக்கிறது. எந்த இடத்தில் நடனத்தைப் புகுத்துவது என்றே நியதியில்லை. இது ஒரு பெரிய தொத்து வியாதியாகவும் மாறிவிட்டது. இந்தநிலைமை இன்னும் நீடிக்குமானால் நடனக்கலைக்கு இருக்கும் மதிப்பு இருந்த இடம் தெரியாமல் போய்விடும். இனிமேலாவது படமுதலாளிகள் இவ்வுயர்ந்த கலையை பாழ்செய்யாமல் இருப்பார்களா?

வி. கோவிந்தராஜுலு,
திருக்கோவிலூர்

தேச வணக்கம்

சுதந்திர இந்தியாவில் மக்கள் ஒவ்வொருவரும் நமது தலைவர்களுக்கும் தேசியக் கொடிக்கும் வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

லக்ஷம் பேருக்கு மேல் ஒரு நாளில் சினிமா பார்க்கிறார்கள். சினிமாவைச் சாதனமாகக் கொண்டு, அரசாங்கத்தார் தம் வழியில் மக்கள் மனத்தைத் திருப்ப இயலும். ஆகவே ஒவ்வொரு சினிமாவிலும் தலைவர்களையும், தேசியக் கொடியையும் கொண்ட படச் சுருள் காண்பிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்தார் கட்டாயப்படுத்த வேண்டும்.

அப்போது ஜனங்கள் அவரவர்கள் இடங்களில் மௌனமாக எழுந்து நின்று அஞ்சலி செய்யவேண்டும்.

முதலில் சில நாட்கள் வரையில் 'சிலைடு' மூலம் "தேசியத் தலைவர்களையும் கொடியையும் காண்பிக்கும் பொழுது மௌனமாக எழுந்து நிற்கவும்" என்று காண்பிக்க வேண்டும். அப்படிச் செய்தால் சில மாதங்களில் அது வழக்கத்தில் வந்துவிடும். நம் சென்னை அரசாங்கத்தார் ஆவன செய்வார்களா?

நவநீதகிருஷ்ணன்,
திண்டிவனம்.

***பரிசு பெற்ற கடிதம்**

எழுதியவர்:

டி. வி. கணேசன்,

111/409, மேட்டுத் தெரு,

கும்பகோணம்.

ஒழிக பழைய படம்

எங்கள் ஊரில் ஒரு தியேட்டர் இருக்கிறது. அதில் எப்பொழுதும் பழைய படமே வருகிறது. உதாரணமாக எங்கள் ஊரில் "இன்று கடைசி" என்று போட்டு 2 நாட்கள் ஆகியிருக்கும். இப்படிக் கடைசி என்று போட்டால் பொது ஜனங்கள்வருவார்கள் என்று அவர்களது அபிப்ராயம். இன்னும் ஒன்று; ஒரு புதிய படம் எங்கள் ஊருக்கு வந்துவிட்டால் தியேட்டர் சொந்தக்காரர்கள் தரையில் இடம் இருந்தாலும் தரை டிக்கெட் கொடுப்பதை நிறுத்திவிடுகிறார்கள். முன்னால் ஒரு படம் கொண்டு வந்திருந்தால் அதைத் திரும்ப 2 தடவையாவது கொண்டு வந்து விடுவார்கள். அதனால் தியேட்டர்சொந்தக்காரர்களை நல்ல படம் கொண்டு வந்து பொதுஜன ஆதரவைப் பெறும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

சினிமாரஸிகன்,
சிவகாசி.

"எத்தனை நாள் இக் கொடுமை"

எங்கள் ஊரில் இரண்டு தியேட்டர்கள் உள்ளன. அங்கே நடக்கும் அட்டூழியங்களுக்குக் கணக்கில்லை. காரணம், இந்த இரண்டு தியேட்டர்களுக்கும் சொந்தக்காரர் ஒரே முதலாளிதான். சாதாரணமாக மக்கள் எவ்வளவு பணம் கொடுக்கிறார்களோ அதற்குண்டான சௌகரியங்கள் இத் தியேட்டர்களில் கிடையாது. சோபா 1-9-0; குஷன் கிடையாது. மூட்டைப் பூச்சிகள் நிறைந்த சாதாரண நாற்காலிகளின் ரேட் ரூ. 1-1-6. இதேபோல் மற்ற வகுப்புகளுக்கும் அநியாயமான கட்டணங்கள் விதிக்கப்பட்டுள்ளன. இத் தியேட்டர்களில் தருவித்துக் காட்டப்படும் படங்களோ படுமோசமானவை.

பொதுவாக தியேட்டர்களில் மின்சார விசிறிகளின் சௌகரியங்கள் கிடையாது. ஓடுகின்ற சில மோசமான மின்சார விசிறிகளும் படம் ஆரம்பிப்பதற்கு

சில நிமிஷங்களுக்கு முன்பே ஒட்டப்படுகின்றன. இடைவேளை நேரத்தில் (15 நிமிஷங்கள்) தியேட்டர்களில் உள்ள எல்லா மின்சார விசிறிகளையும் நிறுத்தி விடுகிறார்கள்.

இன்னும் ஆச்சரியப்படும்படியான ஒரு விஷயம் என்னவென்றால் படம் ஆரம்பிப்பதற்கு முன் வைக்கும் இசைத் தட்டுகளை, டிக்கெட் பெற்று தியேட்டர்களுக்குள் இருக்கும் ரஸிகர்கள் கேட்க இயலாது வெளியில் நிற்கும் ஜனங்கள் மட்டும் கேட்க வசதி செய்யப்பட்டு இருக்கிறது. ஆகையால் இனியாவது இத் தியேட்டர்களின் நிர்வாகிகள் மேலே கூறப்பட்ட குறைகளை நிவர்த்திப்பார்கள் என்று நம்புகிறேன்.

மிஸ். ப்ளாரன்ஸ் ராணி,
தூத்துக்குடி.

தியேட்டரா? குகையா?

இந்த ஊரில் படுமோசமான தியேட்டர் ஒன்றுதான் இருக்கிறது. அதன் பெயர் "கே" டாக்கீஸ். இந்த தியேட்டரில் கூட்டம் சேர்வதை பார்த்து படம் ஆரம்பிப்பார்கள். புதுப் யடம் போட்டுவிட்டாலோ அளவுக்கு மீறி டிக்கெட்கொடுத்துவிடுவார்கள். டிக்கெட் வாங்கிக் கொண்டு தியேட்டருக்குள் புகுந்தாலோ அது தியேட்டரா அல்லது மிருகங்கள் வாழும் குகையா? என்று தோன்றுகிறது. ஒரே புழுக்கம்; மின்சார விசிறி மருந்துக்குக் கூட கிடையாது. மூட்டைப் பூச்சியின் உபத்திரவம் ஒரு பக்கம். உட்காரவும் நிற்கவும் இடமின்றி தவிப்பார்கள். படம் ஆரம்பித்து விட்டால் திடீரென்று சப்தம் அதிகரிக்கும்; குபீரென்று பேசாத படம் ஆகிவிடும். புதிய படமானாலும் ஒரே மங்கலாகத் தான் தெரியும். இப்படிப்பட்ட தியேட்டர் இருப்பதை விட இல்லாமல் போவதே மேல் என்று ஜனங்கள் நினைக்கிறார்கள்.

தேவராஜ்,
உரிகம்.

அதிவேகமாகத் தயாராகிக் கொண்டிருக்கும் ராயல் டாக்கீஸ் "சுதர்சனு"க்கு மெதுவாகத் தண்ணீர் சுமந்து வருகிறார் யோக மங்களம்.

விளம்பர விநோதம்

விளம்பரம் சினிமாவிற்கு உயிர் போன்றது. திறமையாக விளம்பரம் செய்தால் படத்திற்கு நல்ல வசூல் கிடைக்கிறது என்பது உண்மை. "ஆனால் கவர்ச்சிகரமாக விளம்பரம் செய்கிறோம்" என்று கூறி மிக்க ஆபாசமான முறையில் நம் பட முதலாளிகள் விளம்பரம் செய்கிறார்கள். ஊரெங்கும் சுவர்களில் ஒட்டப்பெறும் வால் போஸ்டர்களிலும், தெரு மூலைகளில் ஆங்காங்கு நிறுத்தப்படும் போர்டுகளிலும் உள்ள படங்களைக் காணச் சகிக்கவில்லை.

பெண் நடிகர்கள் பல்லை இளித்துக் கொண்டு நிற்கும் "போஸ்"களையும், கை கால்களை ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டு மட்ட மல்லாக்காகப் படுத்திருக்கும் படுக்கை அறை "போஸ்"களையும் எழுதி நிறுத்திவிடுகிறார்கள். அப்படங்கள் பார்ப்பவர் மனதில் காம வெறியை மூட்டுபவையாகவும், வெறுக்கத் தக்கவையாகவும் இருக்கின்றனவே ஒழிய, சிறிதும் கவர்ச்சிகரமாக இல்லை.

முரளீதரன்,
சென்னை 1.

போட்டி வேண்டும்

'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு' என்பதாக இங்கு ஆலந்தூரில் இருப்பது ஒரே ஒரு தியேட்டர்தான். அதுவும் விக்டோரியா மஹாராணியின் பெயரைத் தாங்கும் மஹா பாடாவதியான தியேட்டர். இத் தியேட்டரில் ஸீட்டை உட்காருவதற்கு முன்னால் தட்டினால் மிலிடேரி

லாரி செல்லும் புழுதிப் பாதையின் காட்சிதான்! அது மட்டுமா? மூட்டைப் பூச்சி ரசிகர்களை நன்கு ரசித்துவிடுகிறது. இங்கு புதுப் படங்கள் வருவதே அபூர்வம். வேறு ஏதாவது 'டெண்ட்' சினிமா போட்டிக்கு வந்தால் தான் இத் தியேட்டரில் புதுப் படம் காட்சியளிக்கும். தப்பித் தவறி புதுப் படம் வந்தாலோ அது பாடாவதிப் படமாகத்தான் இருக்கும். இனியாவது இத் தியேட்டர் சொந்தக்காரர் கொட்டகையைச் சீர் செய்வதுடன் நல்ல படங்களைத் தருவிக்க ஏற்பாடு செய்வார் என்று எண்ணுகிறேன்.

டி. என். ரங்கராஜ்,
ஆலந்தூர்.

வித்தியாசம் ஏன்?

எங்கள் ஊர் ஸ்டார் டாக்கீஸில் சமீபத்தில் "அபிமன்யு" படம் பார்க்கப் போயிருந்தேன். நான் சென்றது மத்தியான வேளை—மாட்டினி காக்ஷிக்கு. ஒரே வெய்யிலாக இருந்தது, தியேட்டருக்கு முன்னால் "க்யூவாக" ஜனங்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

நானும் கொஞ்ச நேரம் 0-7-6 அணா க்யூவில் நின்று கொண்டிருந்தேன். அதற்கு மேல் நிற்க முடியாமல் உயர்ந்த வகுப்பு டிக்கெட் வாங்கிக்கொண்டு போவோம் என்று சென்றேன்.

அங்குள்ள இடவசதியைப் பார்த்தவுடன் ஆச்சரியப்பட்டேன். ஓர் அழகான "ஷெட்" கட்டியிருக்கிறார்கள். உட்கார்ந்து கொள்வதற்காக நாற்காலிகள் போடப்பட்டிருக்கின்றன. சாப்பிடுவதற்கு தண்ணீர், பக்கத்தில் ஸ்டால், இவையெல்லாம் உயர்ந்த வகுப்பு டிக்கெட் வாங்குபவர்களுக்குத் தானும்.

ஆனால், உழைத்துவிட்டு மன அமைதிக்காகச் சினிமாவிற்கு வரும் பாட்டாளிகள் வெய்யிலிலும், கொட்டும் மழையிலும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. நிர்வாகிகள் கருணை புரிந்து இக்குறைகளை நிவர்த்திக்க வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்வார்களென்று நம்புகிறேன்.

எம். ஆர். மணி,
திருச்சி.

டைரெக்டர்:—**மிஸ் நவீன குமாரி! நீங்கள் இப்பொழுது இந்தக் கிணற்றில் குதிக்கவேண்டும்,**

நவீனகுமாரி:—**என்ன, கிணற்றிலா!**

டைரெக்டர்:—**ஆம்...**

நவீனகுமாரி:—**அப்புறம்?...**

டைரெக்டர்:—**அப்புறமொன்றுமில்லை. அதோடு முடிந்துவிடும் உங்கள் வேலை!**

—பி. பாலுசாமி, கோவை.

ஸ்லைடு விளம்பரங்கள்

சினிமா ஸ்லைடு மூலம் செய்யப்படும் விளம்பரங்கள் வியாபாரிகளுடைய நலனுக்காகவும், மக்களுடைய நலனுக்காகவும்தான். எனினும் பல நகரங்களில் உள்ள பெரிய கொட்டகைகளில் கூட விளம்பரங்களை முழுவதும் வாசிக்க முடியாதவாறு 'சட், சட்' என்று மாற்றிவிடுகிறார்கள். இம்மாதிரி விறுவிறுவென்று காண்பிப்பது குறைந்த இடைவேளையில் நிறைந்த ஸ்லைடுகளை காட்டி தியேட்டர்காரர்கள் மட்டும் லாபமடைகிறார்களே தவிர வியாபாரிகளும் பொதுமக்களும் அந்த விளம்பரங்களின் கோரிய பலனை அடைய முடிவதில்லை. ஆகவே தியேட்டர்காரர்கள் மக்கள் வாசிக்கும் ரீதியில் ஸ்லைடுகளை காண்பிப்பதுடன் ஸ்லைடுகள் அதிகமாகக் காண்பிக்காமலும் இருப்பது நலமாக இருக்கும்.

எஸ். கே. டி. சௌ. பாண்டியன்,
கோவில்பட்டி.

இச செய்தி

தணிக்கை போர்டு

ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன், சென்னை தணிக்கை போர்டிலிருந்து தமது அங்கத்தினர் பதவியை ராஜீநாமாச் செய்துவிட்டார். அவருக்கு பதிலாக **ஸ்ரீ**மதி எஸ். மஞ்சுபாஷிணி நியமனம் ஆகியிருக்கிறார்.

இன்பவல்லி ஆரம்ப விழா

சென்ற மாதம் 27-ந் தேதி சியாமளா பிக்சர்ஸின், **இன்பவல்லி** ஷூட்டிங் ஆரம்ப விழா சேலம் ரத்னு ஸ்டுடியோவில் நடைபெற்றது. விழாவிற்கு, சேலம் ஜவாஹர் மில்ஸைச் சேர்ந்த, ஸ்ரீ. எம். ஏ. பழனியப்ப செட்டியார் தலைமை வகித்தார். **இன்பவல்லி** ஒரு கிராமியக் கதை. டி. ஆர். மஹாலிங்கமும், பி. எஸ். சரோஜாவும் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர். ரத்னு ஸ்டுடியோவில் தயாராகும் இந்தப்படத்தை **ஸ்ரீ**. எஸ். நோடானி டைரெக்ட் செய்கிறார். வசனங்களை "இளங்கோவன்" எழுதுகிறார். சங்கீதத்திற்குப் பொறுப்பாளி **ஸ்ரீ**. ஜி. ராமநாதன். சூப்பர் பிக்சர்ஸ் வெளியீடான இந்த **இன்பவல்லி** இன்பம் அளிக்கும் படமாகத் திகழவேண்டுமென ஆசி கூறுகிறோம்.

ஆப்தேயால் விளைந்த கலகம்

பிரபல சினிமா நக்ஷத்திரம் **ஸ்ரீ**மதி சாந்தா ஆப்தே சென்ற மாதம் 23-ம் தேதி சூரத்தில் நடைபெற்ற ஒரு கல்யாணத்தில் பாடுவதாக இருந்ததாம். அவரைக் காணவும், அவரது பாட்டைக் கேட்கவும் அழகாக அலங்கரிக்கப்பட்ட பெரிய பந்தலில் பத்தாயிரம் ஜனங்களுக்கு மேல் கூடியிருந்தனர். சாந்தா ஆப்தே திறந்த பந்தலில் பாட மறுத்துவிட்டாராம். ஆவலாகக் காத்திருந்த ஜனங்கள் ஆத்திரங்கொண்டு விளக்குகளை உடைத்து பந்தலையும் பிய்த்து அட்டஹாஸம் செய்தார்களாம். பொலீஸார் வந்து தடியடிப் பிரயோகம் செய்து கலகத்தை அடக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாம். இது சம்பந்தமாக பதினேரு பெயர்களைப் போலீஸார் கைது செய்துள்ளனர்.

கிரஹஸ்தரானர்கள்

விகடயோகி, தன அமராவதி படங்களில் நடித்தவரும், கோகுலதாஸியிலும் மற்றும் சில படங்களிலும் நடித்து வருபவருமான ஸ்ரீ. டி. எஸ். மஹாதேவன் இம்மாதம் 4-ம் தேதி செள. தங்கத்தை மணந்து கொண்டார்.

இம்மாதம் 16-ந்தேதி திருப்பாசூரில் குமாரி வனஜாவின் சகோதரன் ஸ்ரீ. வி. டி. வீரராகவன், செள. டி. எஸ். ராஜேஸ்வரியின் வாழ்க்கைத் துணைவரானர். இந்தப் புதிய கிரஹஸ்தர்களுக்கு நம் ஆசிகள்.

அலெக்ஸாண்டர் ஷா சென்னை விஜயம்

சென்ற மாதம் 11-ம் தேதி சர்வதேச விஞ்ஞான, சமூக, கல்வி சங்கத்தைச் சேர்ந்த **ஸ்ரீ**. அலெக்ஸாண்டர் ஷா சென்னைக்கு வந்தார். அவர் சென்னை மாகாண மந்திரிகளையும், தென்னிந்திய பிலிம் வர்த்தகசபை அங்கத்தினர்களையும் சந்தித்து, சென்னை மாகாண சினிமாத் தொழிலின்தேவைகளைக் குறித்துவிவாதித்தார். டைரெக்டர் **ஸ்ரீ**.கே. சுப்ரமண்யம்,நெப்டியூன் ஸ்டுடியோவில், அவருக்கு ஒரு தேநீர் விருந்தளித்தார். **ஸ்ரீ**. அலெக்ஸாண்

டர் ஷா, "சர்வதேச விஞ்ஞான சமூக கல்வி" சங்கம், தென்னாட்டு பிலிம் தொழிலுக்கு முடிந்த உதவிகளையெல்லாம் செய்யுமென உறுதிகூறிப் போனார்.

தீ விபத்து

சென்னை, கனக ஸ்ரீநகரிலுள்ள ஸ்ரீ. ஏ. கே. செட்டியார் அவர்களின் வீட்டில் மே 21ந் தேதியன்று ஒரு தீ விபத்து நேரிட்டது. வீட்டில் ஒரு அறையில் பிலிம்களும், காகிதங்களும் வைக்கப்பட்டிருந்தன. நகரில் அந்த வாரம இருந்த அதிக உஷ்ணமான நிலை காரணமாக அந்த அறையில் தீப்பிடித்துக் கொண்டதாகத் தெரிகிறது. மூன்று தீயணைக்கும் என்ஜின்கள் ஸ்தலத்துக்கு விறைந்து வந்து இரண்டு மணி நேரத்தில் தீயை அணைத்தன. ஸ்ரீ ஏ. கே. செட்டியார் தயாரித்த காந்திஜீ வாழ்க்கை சம்பந்தமான சில சுருள்கள் நாசமாகியிருக்கலாமென எண்ணப்படுகிறது.

இந்த விபத்து நேர்ந்த சமயம் ஸ்ரீ. ஏ. கே. செட்டியார் நகரில் இல்லை. அவர் தாம் தயாரித்த காந்திஜீ டாக்குமென்டரி படத்தை பண்டித ஜவாஹர்லால் நேரு, அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்கள் முதலியோருக்கு காண்பிப்பதற்காக புது டெல்லிக்குப் போயிருந்தார்.

"ரத்ன குமார்" படத்தில் இந்த மாதிரி காக்ஷி அளிக்கிறார், பி. யு. சின்னப்பா.

கல்வி மந்திரி பேசினார்

மே மாதம் 29-ம் தேதி செக்ரடேரியட்டில் பிலிம் தணிக்கை போர்டு கூட்டம், போர்டின் சேர்மன் ஸ்ரீ. ஏ. வி. பாத்ரோ தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கல்விமந்திரி கனம் டி. எஸ். அவினாசலிங்கம், "பேசும் படங்களின் தரம் உயர வேண்டு"மெனப் பேசினார்.

தற்காலத்தில் பத்திரிகைகளுக்கு அடுத்தபடி பொது மக்களின் மனதில் நல்லதையோ தீயதையோ பதிய வைக்கும் சக்தி வாய்ந்த சாதனம் சினிமா தான் என்றும், கல்வி சம்மந்தமான படங்கள் மூலம் பிரசாரம் செய்யலாமென்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும், 'பெற்றோர்களிடமிருந்து சில படங்களைப் பற்றி அவைகளின் தரம் மட்டமாக இருப்பதாகவும், குழந்தைகளின் மனதைக் கெடுக்கக் கூடிய விதமாக இருப்பதாகவும் புகார்கள் வருகின்றன. ஆகவே பட தயாரிப்பவர்கள், படம் பார்க்க வருவோர் பொழுது போக்கிற்காகவே வருகிறார்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும்'' என்றும் குறிப்பிட்டார். தவிர, "படங்களின் தரம் உயர்வதோடு, அவைகளைப்பற்றி விளம்பரம் செய்யும் முறையின் தரமும் உயரவேண்டும்; லைசென்ஸ் பெற்ற ஒவ்வொரு தியேட்டரும் கண்டிப்பாகக் கல்விப் படங்களைத் திரையிட வேண்டும்" என்றும் குறிப்பிட்டார்.

பின்னர், படங்களின் தராதரம், அவைகள் இவ்வளவு அடிகள்தான் இருக்க வேண்டும், கல்விப் படங்கள் திரையிடல், ஆபாசமான விளம்பரங்களையும், 'போஸ்டர்'களையும் தடுத்

தல் போன்ற விஷயங்களைப் பற்றி தணிக்கை போர்டு அங்கத்தினர்களிடையே விவாதம் நடைபெற்றது.

மாகாணத்தில் தயாரிக்கப்படும் படங்களின் தரத்தை உயர்த்தவும், பொதுவான யோசனைகள் கூறவும் போர்டின் ஒரு உப-கமிட்டி நியமிக்கப்பட்டது.

'கல்விப் படங்கள் தியேட்டர்களில் காட்டப்பட வேண்டும். அவைகளின் நேரம் இருபது நிமிஷமாக நிர்ணயிக்கப்படல் வேண்டும். படத்தின் நீளம் படம் பார்ப்பவர்களின் ஆரோக்கியத்தையும், பார்வையையும் கெடுக்காத ஒரு அளவுக்கு இருக்க வேண்டும்'' என்ற இந்த விஷயங்களை சிபாரிசு செய்தது. ஆபாசமான காட்சிகளைத் தணிக்கை செய்யும் விஷயத்திலும் கவனம் செலுத்துவதாக உறுதி கொடுத்தது.

சரோஜா தாயாரானார்

சினிமா நடிகையும், டைரெக்டர் டி. ஆர். ரகுநாத்தின் வாழ்க்கைத் துணைவியுமான எம். எஸ் சரோஜா சென்ற மாத. இறுதியில் ஒரு ஆண் குழந்தைக்குத் தயாரானார். தாயும் சேயும் சௌக்கியமாக இருக்கிறார்கள்.

காந்திஜீயின் வாழ்க்கைப் படம்

யுனைடெட் ஸ்டேட்ஸில் சுற்றுப் பிரயாணம் செய்துவரும் ஸ்ரீ. எஸ்ரா மீர், இந்தியாவிலும், பிரிட்டனிலும் பலர் காந்திஜீயின் வாழ்க்கையைப் படமாகத் தயாரிக்க ஆவலாக இருப்பதாகவும், தாமும் இந்தியா திரும்பியதும் அந்த விஷயத்தில் முயற்சி செய்யப் போவதாகவும் கூறினார்.

தவிர, "இந்தியாவின் சினிமாத் தொழில் அந்நியர் நாட்டைவிட்டு வெளியேறிய பிறகு புத்துயிர் பெற்றுள்ளது. யுத்த காலத்தில் படத் தொழிலில் இருந்த சுறுசுறுப்பு இப்பொழுது இல்லையென்றாலும், அது அடுத்து வரப்போகும் பிரமாத

சூர்யா பில்ம்ஸாரின் "ஸ்ரீ ஆண்டாள்" படத்தில் சிங்கனாக நடிக்கும் காளி என். ரத்தினம்.

மான நல்ல காலத்திற்கு முன் நிலவும் மந்தமே'' என்றும் குறிப்பிட்டார்.

இந்தியாவிலுள்ள சுமார் ஆயிரத்தி எழுநூறு தியேட்டர்களில் படங்கள் திரையிடப்பட்டாலும் மொத்த ஜனத் தொகையில் நூற்றுக்கு இருபது பேர்கள்தான் படம் பார்க்கிறார்கள் என்றும், ஆனால் இன்னும் ஐந்து வருஷங்களுக்குள் ஐயாயிரம் தியேட்டர்களுக்குமேல் ஏற்பட்டுவிடும் என்றும் அவர் சொன்னார்.

சினிமா, கல்வி அறிவைப் புகட்டக் கூடியது, பிரசாரத்திற்குச் சிறந்த ஆயுதம் என்ற விஷயங்களை இந்திய சர்க்கார் நன்கு உணர்ந்திருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீ. எஸ்ரா மீர், 'பிலிம் டெக்னிக்' விஷயத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும், யுனைடெட் ஸ்டேட்ஸில் படங்கள் தயாரிக்க உபயோகிக்கப் படும் உபகரணங்களையும் பார்த்து

வருகிறார். இம்மாதக் கடைசியில் அவர் 'ஹாலிவுட்'டுக்குப் போவார். யுத்த காலத்தில் இந்திய சர்க்காரின் பிலிம் இலாகா தலைவராக இருந்து வந்தவர் ஸ்ரீ. எஸ்ராமீர்.

ஜூபிடரின் செய்திப் படம்

மகாத்மாஜீயின் அஸ்தி பம்பாய், நாஸிக் ஆகிய இடங்களில் கரைக்கப்பட்ட சம்பவங்களை, தமிழ் வியாக்கியானத்துடன் செய்திப் படமாக ஜூபிடர் பிக்சர்ஸார் தயாரித்திருக்கிறார்கள். சுமார் இரண்டாயிரம் அடிகள் நீளமுள்ள இந்த செய்திப் படத்திற்கான வியாக்கியானத்தை ஸ்ரீ. ஏ. எஸ். ஏ. சாமி எழுதியுள்ளார். வியாக்கியானம் செய்திருப்பவர் நடிகர் கே. ஆர். ராம்சிங்.

ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் புதிய படம்

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிக்சர்ஸாரது அடுத்த படத்திற்கு **நவஜீவனம்** என்ற நாமகரணம் ஆகிவிட்டது. இந்தப் படத்திற்கான ஆரம்ப பூஜை இம்மாதம் 2-ம் தேதி ஜெமினி ஸ்டுடியோவில் நடந்தது. ஒரு 'கோரஸ்' பாட்டு ஒலிப்பதிவாயிற்றும். இப்படத்தில் நடிக்க—**மதனமாலாவில்** நடித்த ஸ்ரீராம் ஒப்பந்தம் ஆகியிருக்கிறாராம்.

அண்ணாத்துரை மேற்பார்வை

தற்சமயம் திருச்சியில் நாடகங்கள் நடத்திவரும் நடிகர் கே. ஆர். ராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபாவின் நிர்வாகத்தைத் தாமே ஏற்று தமது மேற்பார்வையில் நடத்தி வருவாராம் ஸ்ரீ. ஸி. என். அண்ணாத்துரை.

ஒரே நாளில் மூன்று கச்சேரி

ஒரே தினத்தில் மூன்று இடங்களில் இது வரை யாருமே பரத நாட்டியம் ஆடியதில்லை. அந்தப் பெருமை குமாரி ஆர். தங்கமணிக்குக் கிடைத்திருக்கிறது. இம்மாதம் 10-ம் தேதி சென்னையில் மூன்று இடங்களில் இந்தக் குமாரி நாட்டியம் ஆடினார்.

பக்த ஜனா

இம் மாதம் 10-ந் தேதியன்று ராகிணி பிலிம்ஸாரின் **பக்தஜனா** படத்தின் வர்த்தகக் காக்ஷி சென்னை பாரகனில் நடைபெற்றது.

ராஜமுக்தியில் பாகவதரின் மகள்

நரேந்திரா பிக்சர்ஸாரது **ராஜமுக்தியில்** ஸ்ரீ. எம். கே. தியாகராஜ பாகவதரின் மகளுக்கும் வேலையிருக்கிறதாம். அவர் படத்தில் நடிக்கப் போவதில்லை. ஆனால் அவருடைய குரலை மட்டும் நாம் கேட்கலாமாம்.

ப்ரகதியில் ராஜமுக்தி

சென்ற மாத மத்தியில் ப்ரகதி ஸ்டுடியோவில் ஸ்ரீ. எம். கே. தியாகராஜ பாகவதரின் நான்கு பாட்டுக்கள் பதிவாகின. **ராஜமுக்தி** படத்திற்காக பானுமதியின் பாட்டுகளைப் பதிவு செய்ய ப்ரகதி ஸ்டுடியோவில் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். பானுமதியின் தேக அசௌக்கியம் காரணமாக வர இயலாமற்போகவே, பாகவதரின் பாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டன. இதே ஸ்டுடியோவில் திருவாவடுதுரை ராஜரத்னம் நாதஸ்வரம் வாசிக்கும் காக்ஷி ஒன்றும் **ராஜமுக்திக்காகத்** தயாரிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

தாக சாந்தி

வைரம் அருணாசலம் செட்டியாரின் மணியான நாடகங்களில் இந்த **தாக சாந்தியும்** ஒன்று. சர்வாதிகாரியாக ஆர். ஏ. குமரப்பா அபாரமாக நடித்து வருகிறார். தாஸி சந்திரப்ரபாவாக நடிக்கும் மோஹன் ராவ், ஒரு ஆண் என்றே நம்மால் நம்ப முடிவதில்லை. அவ்வளவு தத்ரூபமாக நடிக்கிறார். ஸாயிராம், பணிநாதன், ஷண்முகம் இவர்களின் ஹாஸ்ய நடிப்பும் நன்றாக இருக்கிறது. அவசியம் பார்க்க வேண்டிய நாடகம் **தாக சாந்தி.**

சினிமா ரஸிகர்கள் சங்கம்

மேற்படி சங்கத்தின் ஆதரவில் இம்மாதம் 7-ம் தேதியன்று மவுன்ட் ரோடிலுள்ள 'யுனைடெட் ஸ்டேட்ஸ் இன்பர்மேஷன்' ஆபீஸில் ஒரு கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ. எஸ். எம். பூாஸில் இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். 'யுனைடெட் இன்பர்மேஷன் ஆபீஸர்' ஸ்ரீ. ஸ்டான்லி. ஆர். சார்டன் "இந்தியாவில் அமெரிக்கப் படங்கள்" என்பது பற்றிப் பேசினார். முடிவில், அமெரிக்கர்களால் தயாரிக்கப் பட்ட, இது வியாதி, வண்ணாத்திப் பூச்சி ஆகிய இரு செய்திப் படங்களும் பஞ்ச நாட்கள் என்ற செய்திப் படமும் காட்டப் பட்டன.

ராமதாஸ் திரையிடப் பட்டது

ஸ்ரீ ஜகதீஷ் பில்ம்ஸின் ராமதாஸ் இம்மாதம் 5-ம் தேதி முதல் மதுரை, திருச்சி, கோயமுத்தூர், மற்றும் ஐந்து நகர்களில் திரையிடப்பட்டிருக்கிறது. இப்படம் தமிழ் நாட்டில் ஸுபர் பிக்சர்ஸாரால் வெளியிடப் பட்டிருக்கிறது.

ரேடியோ மூலம் பேட்டி

இந்தியாவில் முதன் முறையாக, ஒரு ஹாலிவுட் நக்ஷத்திரத்துடன் ஒரு பேட்டியை நடத்தி ரேடியோ மூலம் ஒலி பரப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள் பம்பாய் ரேடியோக்காரர்கள். பம்பாய் ரேடியோ ஸ்டேஷனிலுள்ள ஒருவர் பிரபல ஹாலிவுட் நக்ஷத்திரமான க்ரியர் கார்ஸனுடன் டெலிபோன் மூலம் பேட்டியைநடத்துவார். அது ரேடியோ மூலம் ஒலி பரப்பப் படுமாம்.

ரத்னா ஸ்டுடியோ திறப்பு விழா

இம் மாதம் 9-ந் தேதியன்று சேலம் ரத்னா ஸ்டுடியோவை மந்திரி கனம் பி. கோபால் ரெட்டி ஆரம்பித்து வைத்தாராம். மாலையில் ஸ்ரீமதி என். ஏ. சுந்தரத்தின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றதாம்.

ரேடியோ டைரெக்டர்:- பாகவதர்வாள்! நீங்கள் காலக்ஷேபம் செய்யும்போது உங்கள் முன் சபையோர் இருப்பதாக பாவித்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் கதை சோபிக்கும்.

பாகவதர்:-உங்களுக்கு அந்தக் கவலையே வேண்டாம். இந்த மாதிரி அநுபவம் எனக்கு நிறைய உண்டு!

காலமானார்

அந்த நாளில் பிரபல வேலு நாயருடன் மேடையில் நடித்துப் புகழ் பெற்ற டி. ஏ. ராஜாமணி அம்மாள் கும்பகோணத்தில் இந்த மாதம் 2-ந் தேதியன்று காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம்.

ஜெமினி ஞானசௌந்தரி

இப்படத்தின் பத்திரிகைக் காக்ஷி சென்னை வெல்லிங்டனில் இம் மாதம் 16-ந் தேதியன்று நடைபெற்றது. பல பத்திரிகைக்காரர்களும், நடிக நடிகைகளும் வந்திருந்தனர்.

லண்டனில் துர்க்கா கோட்டே

பிரபல வட நாட்டு நடிகையான துர்க்கா கோட்டே லண்டனுக்குப் போயிருக்கிறார். அங்கு தயாரிக்கப் படும் ஆங்கிலப் படம் ஒன்றில் அவர் நடிப்பார் என்று தெரிகிறது. அவர் இம்மாத இறுதியில் லண்டனிலிருந்து ஸ்விட்ஸர்லாந்து, இதாலி முதலிய தேசங்களுக்குப் போகிறாராம்.

சந்திரலேகா

.... ஓர் ஆராய்ச்சி.

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தைந்தாம் வருஷம் செப்டம்பர் 9-ந்தேதியன்று ஸினி டெக்னிஷியன்கள் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு விழாவுக்கு ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன் தலைமை வகித்தார். அப்பொழுதிருந்த பதினோராயிரம் அடி கட்டுப் பாட்டிற்கு படமுதலாளிகள் உடன் படக்கூடாதென்றும், நீளக் கட்டுப்பாடு மட்டும் இல்லாமற் போனால் "காற்றோடு போயிற்று" போன்ற பெருமை தரும் படங்களைத் தாம்கூடத் தயாரிக்கமுடியும் என்று கூறினார். சந்திரலேகாவின் வித்து அன்றே அவர் மனதில் ஊன்றப்பட்டது என்று நினைக்கிறேன்.

சந்திரலேகா உண்மையில், ஜெமினிக்கும் ஸ்ரீ. வாஸனுக்கும் மட்டும் அல்ல-தென்னிந்தியப் படத்தொழிலுக்கே பெருமையை அளிக்கும் படம் என்பதில் சந்தேகமில்லை. சந்திரலேகா இந்தியாவில் தயாரான படங்களெல்லாவற்றிலும் சிறந்தது; மேனாட்டுப் படங்களுடன் பல அம்சங்களில் ஒப்பிடத் தக்கது என்று தைரியமாகக் கூறலாம். மற்றவர்கள் முயற்சிக்கவே அஞ்சக்கூடிய ஒரு காரியத்தில் ஸ்ரீ. வாஸன் இறங்கி வெற்றி பெற்றுத் தம் வார்த்தையைக் காப்பாற்றி விட்டார். ஆனால் சாந்தாராம்களையும் போஸ்களையுமே சதா புகழ்ந்து பழக்கப் பட்டுப் போன சில விமர்சகர்களின் கண்களுக்கு மட்டும் இப் படத்தின் மஹோன்னதத் தன்மை புலப்படாமற் போயிருக்கிறது.

"சந்திரலேகா" எந்த விதத்தில் ஒரு மஹோன்னதப் படம் என்பது ஆராய்வதற்கருகதையான விஷயமாகும். அப்படிச் செய்வது கலைவளர்ச்சிக்கும் உதவியாய் இருக்கும் என்று நினைக்கிறேன்.

1. "சந்திரலேகா" படம் 18,634 அடி நீளமுள்ளது; $3\frac{1}{2}$ மணி நேரம் ஓடுகிறது. கதை ரொப்பவும் சாதாரணக் கதை; அந்தக் கதைப் போக்கிற்கும் புறம்பான சில விஷயங்கள் படத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இருந்த போதிலும் படம் ஆரம்பம் முதல் கடைசி வரையில் சலிப்பை உண்டு பண்ணாமலிருக்கிறது. காரணம், காக்ஷிக்குப் பின் காக்ஷியும், கட்டத்திற்குப் பின் கட்டமும் அதிவிரைவில் தொடர்ந்தோடுகின்றன. ஒவ்வொரு காக்ஷிக்கும் அத்தியாவசியமான அளவே ஷாட்டுகள் எடுக்கப்பட்டுள்ளன. இதனால்தான் படத்தில் டெம்போ குறையாமலிருக்கிறது. அந்தந்தக் கட்டத்திற்கு உரித்தான ரஸபாவம் என்னவோ அதற்கேற்றபடி நம்மை சிரிக்கவோ, அழவோ, ஆச்சரியப்படவோ செய்து விடுகிறார் டைரெக்டர் வாஸன்.

2. இப்படத்தில் வாஸன் சிருஷ்டித்துள்ள காதல் காக்ஷிகள் சிறந்த முறையில் அமைந்துள்ளன. காதலர்களின் முதல் சந்திப்பில் அவர்களுடைய மனதிலுள்ள எண்ணங்களை மட்டுமே பிரதிபலிக்கச் செய்திருக்கிறார். இரண்டாவது

சந்திப்பிலோ அவர்கள் நெருங்கிப் பழகி தங்கள் மனதிலுள்ளதை வெளியிடச் செய்கிறார். மூன்றாம் முறையாக அவர்கள் நெடுநாளைக்குப் பிறகு குளக்கரையில் சந்திக்கும்போது கதாநாயகியின் ஒரேயொரு பாட்டு மூலமும், காதலர்களின் பேச்சற்ற செய்கைகளின் மூலமும் அவர்களுடைய மனோ நிலையை விவரிக்கிறார்.

3. சந்திரா பின்னர் பாட்டிலும் ஆட்டத்திலும் தேர்ச்சி பெறுவதால் அவளை ஒரு சிற்பியின் மகளாய் காட்டியிருப்பது மிகப் பொருத்தமாகும். இருவரும் முதலில் சந்திக்கும் போது, ஒரு தகப்பனின் கவலை மிகுந்த உள்ளமும், மகளின் உள்ளப் பிரதிபலிப்பும் அதிதத்ரூபமாய் செய்யப்பட்டுள்ளன.

4. "பாலன் கருணை புரிவான்" என்ற பாட்டு நாம் எதிர்பார்க்கும் இடத்தில் அமைந்திருக்கிறது. அப் பாட்டு எப்பொழுதும் காதில் ஒலித்துக் கொண்டிருக்கக் கூடியதாகும். சிவனுடைய சாகித்தியச் சிறப்பையும், மெட்டு அமைப்பின் உயர்வையும் குறிப்பிடும் போது ராஜகுமாரி அவற்றை உணர்ச்சி மிகுதியுடன் பாடியுள்ளதும் குறிப்பிடத் தக்கது. "மாதவா" என்ற வரிகளைப் பாடும் போது நாம் மெய்மறக்கிறோம்; "கோபாலன் கருணை புரிவான்" என்ற வரிகளைப்பாடும் போதோ நம்மையே மறந்து விடுகிறோம்.

5. கொள்ளையிட்டு சூறையாடும் காட்சிகள் துடிதுடிக்கச் செய்யும் முறையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. பஞ்சாபில் சமீப காலத்தில் நடந்த அட்டூழியங்கள் எவ்விதம் இருந்திருக்கும் என்பதை இவை ஞாபக மூட்டுகின்றன. இந்த அமளிதுமளியின் விளைவாக சந்திராவின் தகப்பனார் மாண்டு போவது தத்ரூபமாய் அமைந்துள்ளது.

மார்ஸ்

6. கையெழுத்து மறையும் வேளையில் வண்டித் தொடர் வளைந்து செல்லும் காட்சி தகுந்த சூழ்நிலையில் அழகாகப் படம் பிடிக்கப்பட்டுள்ளது. மேலும், கொஞ்சம் கொஞ்சமாக அந்தகாரம் தோன்றுவதைக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. முதற் காட்சியில் காணும்சூறையாடலுக்கும், அடுத்தகாட்சியில் வரும் மனம் உருக்கும் காட்சிக்கும் இடையில் மேலே சொன்ன காட்சி நல்ல மாறுதலை அறிவுறுத்துகிறது.

7. சசாங்கன் சங்கீத கோஷ்டியினரை ஒவ்வொருவராய்ப் பார்த்துக் கொண்டே வந்து, கடைசியில் சந்திராவைக் கண்ணுறுவதும், பிறகு அவளை சசாங்கன் பலவந்தத்தின் பேரில் நாட்டியம் ஆடவைப்பதும் டைரெக்டரின் திறமையைக் காட்டுகின்றன.

8. குதிரைவீரர்கள் ஒன்றுகூடி, தங்களைத் தயார் செய்து கொண்டு, அம்பு வேகத்தில் பாய்ந்து கூடாரத்தைந் தாக்குவது, வேட்டை நாய்களின் குரைப்பு, குதிரைக் குளம்புகளின் பேரிடி முழக்கம், இவைகளையெல்லாம் டைரெக்டர் முதலில் சரிவர மனோவகப்படுத்தி, படத்தில் அவற்றை உரித்தான உணர்ச்சி ஏற்படும்படி சித்திரித் திருப்பதும் பாராட்டத்தக்கது.

9. சசாங்கனின் முடிசூட்டல் வைபவம் இயல்பான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. சசாங்கனின் பிரசங்கம் தற்கால சர்வாதிகாரிகளை ஞாபகமூட்டுகிறது.

10. குகையின் வாயிலில் மூடப்பட்ட பாறையை அகற்றுவதற்காக சந்திரா சர்க்கஸ்காரர்களின் உதவியை நாடுவதும் பொருத்தமாகப் புகுத்தப் பட்டுள்ளது. சர்க்கஸ் காட்சிகள் தத்ரூபமாய் இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு சர்க்கஸையே வரவழைத்து உபயோகித்திருப்பது பாராட்டத் தக்கது. இந்தக் காட்சிகளை குறைந்த "ஷாட்"களில் தயாரித்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

11. ராஜகுமாரி பார் விளையாடும் காட்சிகள் ஸ்ரீ. வாஸனின் திறமைக்கு மற்றோர் உதாரணமாகும். இந்தக் காட்சியில், ஸ்ரீ. வாசன் படம் பார்ப்பவர்களை கண் கொட்டாமல் பார்க்கும்படி செய்து, அவர்களின் ஆவலை உச்சநிலைக்கு உயர்த்தி, பிறகு உச்சக் கட்டத்தை சிருஷ்டிக்கிறார். சசாங்கனின் ஆள் சந்திராவை கவனித்து வருவதையும், சந்திரா இதை அறிந்து கொள்வதையும் காட்டி அவர்களின் ஆவலை மேலும் அதிகரிக்கச் செய்கிறார். பார் விளையாடும் சந்திரா கீழே விழுகிறாள். இக்கட்டத்தில் விறுவிறுப்பை உண்டு பண்ணுவதற்காக காட்டு மிருகங்கள் கூட்டிற்குள் உறுமுவது, கர்ஜிப்பது, சண்டை போடுவது முதலியவற்றைக் காட்டியிருக்கிறார்.

இதற்குப் பதிலாக சந்திரா சசாங்கனின் ஆளை முதலில் கவனிக்காதது

போலும், ஆட ஆரம்பிப்பதற்கு ஒரு க்ஷணம் முன்பே கவனிப்பது போலும், பிறகு விழுவதாகவும் காட்டியிருக்கலாம். சந்திரா பாரில் நிற்கும் இடத்தில் கேமிராவை வைத்து அவள் விழுவதைப் படம் பிடித்திருந்தால் மேலும் நன்றாயிருந்திருக்கும்.

12. ஹிந்தி பேசும் சிப்பாயின் குணாதிசயம் படத்தில் நன்கு காட்டப்பட்டுள்ளது. பொடி டப்பி சம்பவம் பொருத்தமாய் இருக்கிறது.

13. ஸ்ரீ. வாஸன் ஒரு நாடோடிக் கும்பலை தத்ரூபமாய் நம் கண்முன் கொண்டு வந்து விடுகிறார். யாரிடமும் தங்கு தடையற்ற உபசாரம், எதற்கெடுத்தாலும் கடகடவென்ற சிரிப்பு, அவர்களுடைய நூதனமான பாஷை, நடனம், இவை அவர்களின் குண விசேஷங்களை நன்கு விளக்குகின்றன.

14. சிப்பாய்கள் நாடோடிக் கூட்டத்தில் சந்திராவைக் கண்டு பிடிப்பதும் நன்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. முதலில் சிப்பாய்கள் நாடோடிக் கூட்டத்தில் சந்திரா இல்லையென்று போய்விடுகிறார்கள். ஆனால் அவர்களது தலைவன் திருப்தி அடையாமல் மீண்டும் மிக பத்திரமாக ஒவ்வொருவராய் சோதனை செய்கிறான். அப்பொழுதுகூட சந்திரா கண்களைப் படபடவென்று சிமிட்டி விட்டுத் தப்பிப் போய் விடுகிறாள். படம் பார்ப்பவர்கள் பெருமூச்சு விடுகிறார்கள். அந்த சமயத்தில் கூடாரத்திற்குள்ளிருந்து சந்திரா கட்டியிருந்த புடவையை ஒரு சிப்பாய் கொண்டு வருகிறான். பிறகு அவள் தலையிலிருந்த புஷ்பங்கள் மூலம் அகப்பட்டுக் கொள்கிறாள். இது டைரெக்டரின் கற்பனைக்கு நல்ல உதாரணமாகும்.

15. சசாங்கனின் பலாத்காரத்திலிருந்து தப்புவதற்காக சந்திரா மயக்கமடைவதாகப் பாசாங்கு செய்வதும், சசாங்கன் அதன் பேரில் ஒன்றும் செய்யத் தோன்றாது போய் விடுவதும், டைரெக்டரின் சிறந்த மனோதத்வ ஞானத்தை விளக்குகின்றன.

16. சொகுஸுவின் யோசனைப்படி சந்திரா சசாங்கனின் இஷ்டத்திற்கு உட்படும் காக்ஷியில், சந்திரா மாடியிலிருந்து "வருவாரோ" என்ற பாட்டைப் பாடிக் கொண்டே வருவது முதல், சசாங்கன் முரசு நடனத்தை ஆரம்பிப்பதற்கு மணியை அடிப்பது வரையில் கதாபாத்திரங்களின் ஒவ்வொரு செய்கையும் நன்கு கவனித்துப் படம் பிடிக்கப் பட்டிருக்கிறது.

17. அரசன் அடைக்கப் பட்டிருக்கும் அறைக்கு வெளியில் சிப்பாய்களின் அணி வகுப்பு, சசாங்கன் திட்டிக் கொண்டே வரும்போது சிப்பாய் மெதுவாக மண்டியிடுதல், இரு அதிகாரிகள் சொகுஸு ஒளிந்து கொண்டுள்ள இடத்தை (பேசிக்கொண்டே) தாண்டிச் செல்லுதல், தூக்குப் பாலம், கோட்டைக்குள் யுத்தம் ஆரம்பமானதும் நடன கோஷ்டியினர் பாலத்தை இறக்கிவிட ஓடுதல்—இவைகளெல்லாம் சில்லரை விஷயங்களாயினும் கவனித்துச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

18. முரசு நடனம் பிரமாதமான முறையில் உருவாக்கப் பட்டுள்ளது. ஆரம்பக் காக்ஷியே நம்மை திகைக்க வைத்துவிடுகிறது. எண்ணிறந்தவர்கள் நடனம் ஆடுவதற்குத் தயாராய் படிகள் மீது நின்றுகொண்டிருப்பதையும், பிறகு அவர்கள் அழகாக அடியெடுத்து நடனம் ஆடத் தொடங்குவதையும் கலை இலக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும். நூறு ஆண் பெண்கள் நூறு முரசுகள் மீது நடனம் ஆடுவது மஹோன்னதமாய் இருக்கிறது. இக்காக்ஷியில் இயக்கம் துரிதமாய் இருப்பதாலும், "ஷாட்"களை திறமையுடன் ஒன்று சேர்த்திருப்பதாலும், சுமார் நூறு "ஷாட்"டுகளில் தயாரிக்கப்பட்டுள்ள இக்காக்ஷியின் முடிவில், (யுத்தம் ஆரம்பமானதும்) இந்த நடனம் எங்கு ஆரம்பமாயிற்று, எப்படி வளர்ச்சி பெற்றது என்பதெல்லாம் மறந்தே போகிறது. உள்ளப் பரவசத்தின் பூகம்பக் கொந்தளிப்பு தாளத்திற்குட்பட்ட நடனமாக அமைக்கப்பட்டிருக்கிறது என்று இதை வர்ணித்தால் மிகையாகாது.

19. எல்லாம் முடிந்து விட்டதென்று நாம் நினைக்கும்போது ரஞ்சன்-ராதா கத்திச் சண்டை நம்மைத் துடித்தெழச் செய்கிறது. சுமார் 75 "ஷாட்"டுகளுக்குள் ஸ்ரீ. வாஸன், ஒரு அற்புதமான—அபாரமான—இந்தியாவில் இதுவரைத் தயாரிக்கப்படாத முறையில் ஒரு கத்திச் சண்டைக் காக்ஷியைத் தயாரித்திருக்கிறார். கத்திகள் "ஊங்"காரமும் "ஈங்"காரமும் இட்டுக் கொண்டு மோதும்போது நமக்கு மயிர்க்கூச்செறிகிறது.

20. படப் பிடிப்பு உன்னதமாயுள்ளது. குளக்கரையில் காதலர்கள், காலைக் காக்ஷிகள், வண்டலூர் காடுகள் முதலிய இயற்கைக் காக்ஷிகளும், ஸ்டுடியோக் காக்ஷிகளும் அதி அழகாய் படம் பிடிக்கப்பட்டுள்ளன.

21. படத்தில் த்வனியும் சரிவரப் பயன்படுத்தப் பட்டுள்ளது. சங்கீதக் கருவிகளை சசாங்கன் பரீக்ஷிக்கும்போது ஏற்படும் த்வனிகளும், கத்திகளின் சீறலும் உராய்தலும், குதிரைக் குளம்பு

களின் பேரிடி முழக்கமும் நன்கு பதிவாகி ஒளிப்பதிவுடன் சரிவரப் பொருத்தப்பட்டுள்ளன. பாட்டுகளெல்லாம் தெளிவாகப் பதிவாகியுள்ளன. "அயிலோ பக்ரியாமா" என்ற பாட்டில் கீழ் ஸ்தாயி—உச்ச ஸ்தாயி த்வனிகள் பக்குவமாக பதிவாக்கப் பட்டுள்ளன.

22. செட்டிங்ஸ் விஷயத்தில் சேகர் தம் திறமை பூராவையும் இப்படத்தில் காட்டியிருக்கிறார். செயற்கை என்ற எண்ணம் ஏற்படாத வகையில், உன்னதத் தன்மை கெடாத வகையில்—குறைந்த அலங்காரங்களுடன் மாபெரும் ஸெட்டிங்ஸகளை அமைக்கும் திறன் பெற்றவர் சேகர். இப்படத்தில் காணும் வீடு, அரண்மனை முதலியவைகளெல்லாம் படத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டவை என்ற எண்ணம் துளிக்கூட ஏற்படவேயில்லை.

23. சிவனும், ராஜேஸ்வர ராவும் சங்கீத அம்சத்தை சிறப்பித்துள்ளனர். பொருத்தமான கர்னாடக ராகங்களில் பாட்டுகளை அமைத்து, தக்க பக்கவாத்தியங்களுடன் பதிவு செய்திருக்கிறார்கள். மேனாட்டு சங்கீத மெட்டுகள் சிலவும் ஆங்காங்கே புகுத்தப்பட்டிருப்பதிலிருந்து நம் சங்கீதக்காரர்களுக்கு வராத சங்கீதமே உலகத்தில் இல்லை என்று சொல்லலாம்.

24. நடனங்கள் எல்லாவற்றிலுமே மனதை மிகக் கவர்வது தர்பாரில் ஆடப்படுவதுதான். நாடோடிக் கூட்டத்தினருக்கு "மிராண்டா" நடனம் பொருத்தமாயுள்ளது.

25. ராஜகுமாரியின் திறமைகள் அனைத்தையும் பிழிந்து எடுத்து "சந்திரலேகா"வில் சேர்த்திருக்கிறார் டைரெக்டர் எஸ். எஸ். வாஸன். ராஜகுமாரி வெகு இயற்கையாக நடித்திருக்கிறார். ரஞ்சன் ஆச்சரியப்படும் வகையில் அற்புதமாய் நடித்திருக்கிறார். ஆனால் அங்கும் இங்கும் கொஞ்சம் திருத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. ரஞ்சனுக்கு வில்லன் வேஷத்தைக் கொடுத்து அவரை ஒரு வீரனாக்கியிருப்பது ஸ்ரீ. வாஸனின் திறமையையும் தைரியத்தையும் காட்டுகிறது. சுந்தரி பாயோ தம் பாத்திரத்தை நன்கு புரிந்து கொண்டு அநாயாசமாய் நடித்திருக்கிறார். மற்ற நடிகர்களும் கூடிய வரையில் நன்கு நடித்திருக்கிறார்கள்.

மேலே சொன்ன பல உயர்ந்த அம்சங்களும் மற்றும் பலவும் "சந்திரலேகா"வை ஒரு உன்னதப் படமாகச் செய்துள்ளன. பண வசூலிலும், பொதுஜன ஆதரவிலும்கூட அது சிகரந்து விளங்குகிறது. உயரிய அம்சங்களைக் குறிப்பிட்டது போலவே இப்படத்திலுள்ள சில

குறைகளையும் வெளியிடுவதுதான் கலை விமர்சனத்தின் லக்ஷணமாகும். ஆதலால் அவைகளையும் இங்கு ஆராய்வோம்.

"சந்திரலேகா" படத்தை விமர்சனம் செய்யும்போது மூன்று விஷயங்களை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்:

(1) "சந்திரலேகா" — துணிகரச் செயல் நிறைந்த படம்—என்று விளம்பரப்படுத்தப்பட்டது.

(2) மேனாடுகளுக்கு அனுப்பும் நோக்கத்துடன் இப்படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

(3) சாதாரண பட ரஸிகர்க்ளுக்கு— அவன் கொடுக்கும் காசுக்குத் தகுந்த பொழுது போக்கை அளிக்கிறதா என்பது.

"சந்திரலேகா" இது வரையில் அடைந்துள்ள பண வசூல் வெற்றியைக் கவனிக்கும்போது அதில் பொழுது போக்கு அம்சங்கள் நிறைய இருக்கின்றன என்று சொல்லிவிடலாம். "வாஸன் ஒரே படத்தில் அளவுக்கு அதிகமான பொழுது போக்கு விஷயங்களைத் திணித்து பட மார்க்கெட்டைக் கெடுக்கிருர்" என்ற எண்ணமே இப்படத்தைப் பார்க்கும் வெளிநாட்டானுக்கு ஏற்படும்.

"துணிகரச் செயல்கள் நிரம்பிய படம்" என்று விளம்பரப்படுத்தினார்களல்லவா? அதன்படி பார்த்தால் துணிகரச் செயல்களுக்கு "சந்திரலேகா"வில் குறைவேயில்லை. ஒரு அரசகுமாரன் ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணைக் காதலிக்கிருன். இதற்கிடையில் பல இடையூறுகளும், மயிர்க்கூச்செறியும் சம்பவங்களும் நிகழ்வதாகக் காண்பிக்கப்படுகிறது. இந்த துணிகரச் செயல்களையெல்லாம் ஒன்று சேர்ப்பதற்கே கதை ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. உணர்ச்சி மிகுந்த கதையாயிருப்பின் அதில் இந்த துணிகரச் செயல்களையெல்லாம் காட்ட முடியாது. இத்தகைய மேனாட்டுப் படங்களில் கூட கதை சாதாரணமானதாய்த்தான் இருப்பது கவனிக்கத் தக்கது. மேலும், "இந்தக் கதை எந்த ஒரு நபரையோ, அல்லது காலத்தையோ குறித்ததல்ல" என்று பட முதலாளிகள் சொல்லி விடுவதால் ஒரு சரித்திரப் படத்தையோ, வாழ்க்கைப் படத்தையோ ஆராயும் ரீதியில் இப்படத்தையும் ஆராயக் கூடாது என்பது என் அபிப்பிராயம்.

கதை மட்டுமன்றி சம்பாஷணைகளும் பலமற்றதாய் இருப்பது உண்மைதான். பல பாஷைகளில் இப்படத்திற்கு சம்பாஷணைகள் ஒட்டப்பட வேண்டுமென்ற எண்ணத்துடனே தான் சிறு சிறு சம்பாஷணைகளை உபயோகித்திருப்பதாகத் தெரிகிறது. ஆதலால் சம்பாஷணைகளில் விறுவிறுப்பு குறைந்திருப்பது ஆச்சரியப்படத் தக்கதல்ல.

காட்டிலிருந்த வீரசிம்மனுக்கு திடீரென்று எப்படி ஒரு கோச்சு வண்டி கிடைத்தது என்று படம் பார்ப்பவர்கள் கேட்கிருர்கள். முதல் நாடோடிக் கூட்டத்தில் சில ஆண் பிள்ளைகளும் இருக்கின்றனர். ஆனல் சோதனை நடக்கும் போதோ பெண்கள் மட்டுமே காண்பிக்கப்படுகிருர்கள்.

மதுரம் கடையாணியை எடுத்துக் கொண்டு ஓடியபின் கிருஷ்ணன் வேறு கடையாணியை போடாமலே வண்டியை ஓட்டிக்கொண்டு போவது சரியா என்றும் நீங்கள் கேட்கலாம்.

படத்தின் முதல் காக்ஷியில், வீரசிம்மனும் வீரர்களும் குதிரை மீது வரும் காக்ஷி சப்பென்றிருக்கிறது. காரணம், குதிரைகள் வரும் வேகமும் திரை மறைவு சங்கீதத்தின் வேகமும் ஒத்தநாயில்லை.

சந்திரா பாடிக்கொண்டே வீட்டிற்கு வருகிருள். தோழியைக் கண்டதும் "செந்தாமரை மலர்களைக் கண்டனுண்டோடி?" என்று கேட்கிருள். ஆனல் அந்தத் தோழியோ சிலை போல நிற்பதால் அக்கட்டம் ஜீவனற்றுப் போகிறது. ராஜா வேஷம் போட்டவரிடம் அவ்வேஷத்திற்குரிய முடுக்கும், கம்பீரமும் இல்லாததால் அவர் வரும் கட்டங்களும் சப்பென்றுள்ளன. ஆனல் வீரசிம்மனிடம் வேலை செய்யும் பையன் நன்ருக நடித்திருக்கிருன்.

கிராமம் சூறையாடப்பட்ட பின் மற்ற கிராம ஜனங்களைப் போலவே சந்திராவும் வீட்டைக் காலி செய்து விட்டுப் போயிருக்கலாம். அதற்குப் பதில் சந்திரா சோகத்தில் ஒரு பாட்டைப் பாடுவதும், அந்தப் பாட்டு முடியும் வரையில் கிராமத்தவர்கள் காத்திருந்து, பின்னர் அவளைத் தங்களுடன் அழைத்துச் செல்லுவதும் பொருத்தமாயில்லை. வண்டிக்காரனின் பாட்டு கொஞ்சம் நீளமாயிருக்கிறது. "விளக்கு வைக்க நேரமாச்சு வேகமாக ஓட்டு" என்ற அடிகளுடன் வெட்டி விடலாம். இதைத் தொடர்ந்து முரசொலியைக் காட்டியிருக்கலாம், வண்டியைத் திருடர்கள் வளைத்துக் கொள்ளுவதை முடிவேநேர்க் காக்ஷியாகத் தயாரித்திருக்கலாம்.

சசாங்கனும், அவனது ஆள்களும் குதிரைகள் மீது பாய்ந்து செல்லும்

போது ஒரு ஆட்டுக் கூட்டம் பயந்து சின்னாபின்னமாய் ஓடுவதையும் காட்டியிருந்தால் நன்றாயிருக்கும்.

சந்திரா தப்பித்துக் கொள்ளுவதற்காக மேலாடையை கலைந்துவிட்டுப் போவதை தம்மவர்கள் கண்டிக்கக் கூடும். ஆனால் மேனாட்டு மார்க்கெட்டிற்கு இதுபோன்ற காக்ஷிகள் அவசியம் என்றுபட முதலாளி கூறக்கூடும்.

சர்க்கஸ் காக்ஷிகள் சுமார் 25 நிமிஷ நேரம் காண்பிக்கப்படுகின்றன. பண வசூலுக்கு இக்காக்ஷிகள் அவசியமாயிருக்கலாம். அப்படி இருந்தாலும் அதன் நீளத்தைக் குறைத்து விடலாம். காலை தேகப் பயிற்சியைக் கத்தரித்து விடலாம்.

பாட்டில்லாத இரண்டாவது நாடோடி நடனம் நன்றாயில்லை; அதை நீக்கி விடலாம்.

காட்டில், இரவு வேளையில் நிகழும் சம்பவங்களை மங்கலாகப் படம் பிடித்திருக்க வேண்டும்.

சந்திராவின் அறையிலிருந்து அவளுடைய தாதியை விரட்ட சொகுஸை கையாளும் தந்திரம் "மங்கம்மா"வை ஞாபகமூட்டுகிறது. இன்னும் இது போல சில அற்ப சொற்பமான குறைகள் படத்திலுள்ளன. இவைகளில் சிலவற்றை இப்பொழுதுகூட நீக்கி விடலாம்.

* * *

சில குறைகள் இருந்தபோதிலும் "சந்திரலேகா" ஒரு மஹோன்னதக் படம் என்பதில் சந்தேகமேயில்லை. அதன் வெற்றி தோல்விகள் ஒருபுறமிருக்கட்டும். "ஸ்ரீ. வாஸனைப் போல இவ்வளவு ஏராளமான முதலைப்போட்டு, இரசப் பகலாய் சிரமப்பட்டு பரீக்ஷார்த்தமாக ஒரு படத்தைத் தயாரிப்பதற்கு வேறு யாருக்குமே துணிபு ஏற்படாது" என்பது படத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும், பொது ஜனங்களும் கொண்டுள்ள ஏகோபித்த அபிப்பிராயமாகும். இத்தகைய மாபெரும் முயற்சியில் ஸ்ரீ. வாஸன் மட்டும் தோல்வியுற்றிருப்பாரானால், இன்று அவர் அடைந்துள்ள வெற்றியைப்போல பன்மடங்கு கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதாகியிருக்கும்.

ஸ்ரீ. வாஸன் இப்படத்தின் முதலாளி-டைரெக்டர் முதலிய எல்லாம். அவர் தம் தீர்மானத்தில் திட நம்பிக்கை உடையவர். போட்ட திட்டத்தை நிறைவேற்றியே தீரும் குணமும் கொண்டவர். இவையெல்லாமே "சந்திரலேகா"வை வெற்றி பெறச் செய்திருக்கின்றன. அதே படத்தை வேறொருவர் டைரெக்ட் செய்திருந்தால் ஸ்ரீ. வாஸன் முப்பது லக்ஷ ரூபாய்களைச் செலவழிக்க மனந் துணிந்திருப்பாரா என்பது சந்தேகந் தான்.

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். "சந்திரலேகா" ஒரு விஷயத்தை ஸ்தாபித்து விட்டது. இப்படத்தை ஒரு வங்காளி தயாரித்திருந்தால் வங்காளம் பூராவும் வானளாவப் புகழ்ந்திருக்கும், சென்னை மாகாணத்தவர்களும் சேர்ந்து பின்பாட்டுப் பாடியிருப்பார்கள். இதையே ஒரு பம்பாய்க்காரர் தயாரித்திருந்தாலோ வட இந்தியா பூராவும் அல்லோலகல்லோலப் பட்டுப் போயிருக்கும். சென்னையும் அந்த அமளியில் கலந்து கொண்டிருக்கும். ஆனால் துரதிருஷ்டவசமாக "சந்திரலேகா" சென்னையில்—ஒரு மதராஸியால் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மதராஸிகள் இன்னொரு மதராஸியைப் பாராட்டுவதில்லை என்ற சாபக்கேடுதான் தெரிந்ததாயிற்றே. இந்தக் கெட்ட குணத்திற்காக நான் நிச்சயம் தலைகுனியவே வேண்டியிருக்கிறது.



சினிமாத் தொழிலைப் பொறுத்த மட்டில் நடப்பு வருஷம் அவ்வளவு சுகமில்லை என்பது உண்மைதான். தொழிலிலே ஒரு விருத்தியில்லை; சுறுசுறுப்பு இல்லை—என்பது நன்ருகத் தெரிகிறது. தொழில் எப்படியிருந்தாலும் தொழிலாளிகளுக்கு—நான் இங்கே குறிப்பிடுவது நக்ஷத்திர நடிகைகள் விஷயம்—இது ஆதாய வருஷமாகவே இருக்கிறது.

* * *

நம் நக்ஷத்திர நடிகைகளில் சிலருக்கு அவர்கள் நடித்த பல படங்களின் கணக்குக்கூட இன்னும் தீர்ந்தபாடில்லை. ஆனலும் என்ன? அவர்களுக்கு தன விருத்தி யில்லா விட்டாலும் சந்தான விருத்தி ஏற்பட்டு வருகிறது. ஆகவே இது அவர்களுக்கு விருத்தி வருஷம் என்று கூறுவது நியாயந்தானே?

* * *

ஜெமினியின் வியாபாரச் சின்னம் "இரட்டைக் குழந்தைகள்" என்பது பிரசித்தமான விஷயம். அவர்களுடைய மங்கம்மாவில் நடித்த ராசிதானே, என்னவோ; ஸ்ரீமதி வசுந்தரா தேவிக்கு இரட்டைக் குழந்தைகளின் தாயாகும் பாக்கியம் கிட்டிற்று!

* * *

ஸ்ரீமதி வசுந்தரா தேவி தாயாரான நேரம் நல்ல முகூர்த்தமாகத் தான் இருக்க வேண்டும். அவரைத் தொடர்ந்து ஹாஸ்ய நடிகை டி. ஏ. மதுரம் 'கலைச் செல்வி'க்குத் தாயாரானர்.

ஒரு நக்ஷத்திரம் ஒரு காரியத்தை செய்தால் மற்ற நக்ஷத்திரங்கள் சும்மா யிருக்கும் வழக்கம்தான் கிடையாதே. ஒரு நக்ஷத்திரம் 'மெர்க்குரி' கார் வாங்கினல், இனனொரு நக்ஷத்திரம் 'நாஷ்' கார் வாங்குவார். கார் விஷயத்தில் மட்டுமென்ன! குழந்தைகள் விஷயத்திலும் அவர்களிடையே இது போல போட்டி ஏற்பட்டிருக்கிறது. மதுரத்தைப் பின்பற்றி மாஜி நக்ஷத்திரம் ஸ்ரீமதி எஸ். டி. சுப்புலக்ஷ்மியும் ஒரு ஆண் குழந்தைக்குத் தயாராகி விட்டார்.

* * *

"படத் தொழிலிலிருந்து விலகி இருந்தாலும் வாழ்க்கைத் துறையில் நான் சும்மா இருந்துவிடவில்லை" என்று சொல்லுவது போல எம். எஸ். சரோஜாவும் ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாராகியிருக்கிருராம்.

* * *

ஸ்ரீமதி பானுமதி நடிக்கும் படங்கள் தயாராகி முடிய ஏன் தாமதமாகிறது என்பது ரஸிகர்களின் ஏகோபித்த சந்தேகமாக இருக்கிறது. ஏற்கனவேயே தாயாராகும் பாக்கியத்தைப் பெற்றுவிட்ட ஸ்ரீமதி பானுமதி சீக்கிரமே மற்றொரு குழந்தைக்கும் தாயாராகப் போகிருர். விஷயம் இப்படி இருக்கும்போது அவர் நடிக்கும் படங்கள் வளர்ச்சி பெருதது ஆச்சரியமில்லையே!

* * *

ஒரே படத்தில் (கிருஷ்ண துலாபாரத்தில்) கதா நாயகி வேஷத்தில்

நடித்திருக்கும் ஸ்ரீமதி ஜி. ராஜமும் இந்த 'லிஸ்டில்' சேர்ந்திருக்கிறார். வைரம் அருணசலம் செட்டியாரின் குடும்ப வாழ்க்கையில் நடித்துவரும் முத்துலக்ஷ்மி கூட இந்த ஜாபிதாவில் சேர்க்கப்பட வேண்டியவர்தான்.

* * *

• ஜெமினி ·கோராக் கும்பர் அதி விரைவில் தயாராகி வருகிறது. முக்கியமாக புஷ்பவல்லி தோன்றும் காக்ஷிகள் தாம் அதிவிரைவில் தயாராகி வருகின்றன. நியாயந்தானே! சீக்கிரமே தாய்மையை அடையப் போகும் புஷ்பவல்லியின் பாகங்களுக்காக படத் தயாரிப்பு நின்று விடக் கூடாதல்லவா?

* * *

கண்ணு பிலிம்ஸ் **திருமழிசை ஆழ்வாரில்** நடிப்பதாக இருந்த நாட்டிய நடிகை குமாரி கல்யாணியும், பாக்யா பிக்சர்ஸ் **மங்கையர்க்கரசி**யில் நடிப்பதாக இருந்த ஜெயம்மாவும் பிறகு அவற்றில் நடிக்காததற்குக் காரணம் அவர்களுக்குக் கிடைத்த சந்தான பாக்கியந்தான்.

* * *

மேற்கண்ட ஜாப்தாவைக் கண்ட பிறகு பல நடிகைகள் என்மீது சீறி விழலாம். "நாங்கள் தாயாரான விஷயம் உமக்குத்தெரியாதோ?" "நாங்கள் தாயாராகப் போகும் நற்செய்தி உங்களுக்குத் தெரியாதோ?" என்றெல்லாம் கோபம் கொள்ளலாம் பலர். ஆகவே அவர்களை யெல்லாம் நான் இப்போதே மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடுகிறேன்.

* * *

நடிகைகளைப்பற்றி சொல்லும் போது சமீபத்தில் ப்ரகதி ஸ்டுடியோவில் நடந்த ஒரு ரஸமான சம்பவம் நினைவுக்கு வருகிறது. மேற்படி ஸ்டுடியோவில் ஒரு சமூகப் படம் தயாராகிக் கொண்டிருந்தது. ஒருவன் ஒரு பெண்ணிடம் தன் காதலை வெளியிடுகிறான். டைரெக்டர் அந்த நடிகர் எப்படி நடிக்க வேண்டும் என்பதைப் பல முறை சொல்லிக் கொடுத்தும் நடிகருக்கு அவ்வளவு தத்ரூபமாக நடிக்கி வரவில்லையாம். 'மேக்கப்'புடன் செட்டில் வெகு நேரம் நின்று கொண்டிருந்த நடிகைக்குக் கோபம் வந்து விட்டதாம் உடனே டைரெக்டரிடம், "இந்த நடிகருக்குக் காதல் நடிப்பே வராது போல இருக்கிறது" என்று இளக்காரமாகக் கூறினாராம்.

இந்த அவமானத்தைப் பொறுப் பாரா அந்த நடிகர்? "இந்த நடிகை எனக்கு எதிரே இருந்தாலே காதல் நடிப்பு வரமாட்டேன் என்கிறது, ஸார்!" என்று பதில் அளித்தாராம்!

முக லக்ஷணமில்லாத அந் நடிகையின் முகம் சிறுத்ததாம்!

* * *

பாகற்காய் பலருக்குப் பிடிக்காத ஒரு காயாக இருக்கலாம். ஆனால் அதே பாகற்காயைப் பலர் பச்சையா

"பில்ஹண"வில் நம்மை சிரிக்க வைப்பதற்காக புளிமூட்டை இப்படி அந்தப் பெண்களிடம் அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறார்.

கக்கூடத் தின்றுவிடுவார்கள். ஒவ்வொருவர் ருசி ஒவ்வொரு மாதிரி. எல்லா விஷயங்களிலுமே அப்படித் தான். ஏராளமான பொருட்செலவில் தயாரான ஒரு படம் பலருக்கு பிரமாதமாகப் படலாம். வேறு சிலருக்கு மட்டமானதாகத் தோன்றலாம். இதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் அதற்காக துஷ்பிரசாரத்தில் இறங்குவது எவ்வளவு பெரிய தவறு?

* * *

உதாரணமாக சந்திரலேகா படத்தைத்தான் எடுத்துக் கொள்ளுங்கள். பல லக்ஷக்கணக்கானரூபாய்செலவில் பலவருஷங்கள் கஷ்டப்பட்டு எடுக்கப் பட்ட படம் அது என்பது உண்மை. படத்தின் தராதரத்தைப் பற்றி நான் இங்கு விவாதிக்க வரவில்லை. படம் சாதாரண ரகத்தைச் சேர்ந்தது என்று விமர்சனம் செய்தவர்கள்கூட படத்தின் காக்ஷி ஜோடனைகள் 'அபாரம்' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

● ● *

ஆனால் ஒரு சினிமா மாதப் பத்திரிகையின் ஆசிரியர் தமது நேயர்களின் சந்தேகங்களைத் தீர்த்துவைக்கும்பகுதியில்கொடுத்திருக்கும் குயுக்தியானபதிலைப் பாருங்கள். வாசகர் ஒருவர் 'சந்திரலேகாவைத் தயாரித்து முடிக்க முப்பத்தி எட்டு லக்ஷம் ரூபாய்கள் செலவாகியிருக்குமா?' என்று கேட்ட ஒரு கேள்விக்கு அந்த ஆசிரியரின் விடையைப் பாருங்கள்: 'இந்தியாவிலேயே அதிகப் பணச் செலவில் தயாரான சிக்கந்தருக்கே ஒன்பது லக்ஷம்தான் செலவாயிற்று. ஆகவே நீர் கேட்கும் விஷயம் எப்படி உண்மையாக இருக்க முடியும்?''

* * *

சினிமா ஒரு கலையா? தொழிலா என்ற பிரச்னை ஒருபுறமிருக்கட்டும். சினிமா ஒரு தொழில் என்றே வைத்துக் கொள்வோம்? நியாயமாக உழைத்துப் பிழைக்க ஏற்பட்ட தொழிலா? அல்லது மோசக்காரர்களின் பிழைப்புக்காக ஏற்பட்ட சந்தையா என்பதுதான் இப்பொழுது யோசிக்க வேண்டிய விஷயம்?

* * *

ஏற்கனவே சினிமாத் தொழிலுக்கு பல களங்கங்கள் இருந்துவருகின்றன. இப்பொழுது பல மோசடிக்காரர்களால் மேலும் களங்கம் ஏற்பட்டு வருவதுதான் வருந்தத்தக்க விஷயம். போலிக் கம்பெனி ஆரம்பித்து ஜனங்களை மோசம் செய்து வருகிறார்கள் பலர். அதைப் பற்றி எழுதினால் ஒரு குண்டூசி பூரா எழுதலாம். இப்பொழுதோ புதுமாதிரியான மோசக்காரர்கள் தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்.

* * *

எனக்குத் தெரிந்த ஒரு நாட்டிய நடிகையின் வீட்டிற்குப் போயிருந்தேன். வி. எஸ். குமார் என்ற ஒருவர் அவர்களிடம் வந்து, தான் ஒரு பெரிய ஸ்டண்ட் நடிகர் என்றும், மைசூர் ஸ்டுடியோவில் தயாராகும் ஜீவன் மாயா என்ற படத்தில் நடிக்க நடிகைகளைத் தேர்ந்தெடுக்கவேதான் சென்னை வந்திருப்பதாகவும் கூறினாராம். அந்த நாட்டிய நடிகையைப் பிரதம பாகத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்வதாக உறுதி கூறினாராம். தொடர்ந்து இரண்டு மூன்று தினங்கள் வந்து போனாராம். ஒரு நாள் பேச்சுவாக்கில் தமக்குத் தெரிந்த பல ராணுவ உத்தியோகஸ்தர்கள் இருப்பதாகவும், அவர்கள் மூலம் அரிசி, பருப்பு, ஓவல்டின் இவைகள் மலிவாக வாங்கித் தருவதாகவும் கூறினாராம் அவர்கள் ஏமாந்து எல்லாவற்றிற்கும் அவரிடம் பணத்தைக்கொடுத்தார்களாம். அன்று முதல் இன்று வரை அவர் தலை காட்டவே இல்லையாம்.

* * *

இந்த மாதிரி ஏமாற்றும் வழக்கம் சென்னையில் சர்வ சாதாரணம். ஆனால் 'சினிமாக்காரன்' என்று சொல்லிக் கொண்டு இந்தத் தொழிலுக்கு அகௌரவத்தைத்தேடிவைக்க சில புண்ணியவான்கள் இப்பொழுதான் கிளம்பியிருக்கிறார்கள்.

மறந்த சம்பாஷணை


அமெச்சூர் நாடக சபா
மந்திரீ நமது பிரஜைகள் எல்லோரும் க்ஷேமமா?
மாதம் மும்மாரி மழை பெய்கின்றதா?
ஆம். அரசே மக்கள் க்ஷேமம்!
இது போலவே என்னும்
..இது...ங்...ங்....ங்..
இது போலவே.... இது போலவே....
இது--ங்-- ங்--ங்--
இது போலவே இது போலவே
மந்திரீ.....இது... ...இது.....
அதுவா.... மீசை.... டே போய்யா. உள்ளே!
முகில்

★ மறைந்த நக்ஷத்திரம் ★

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

மாற்றலாகி விட்ட பிறகு நான் அந்த ஊருக்குப் போகவில்லை.

ஆயினும் என்னுடைய கல்லூரி வாழ்க்கையில் மாறுதல் ஏதும் ஏற்பட வில்லை. நான் ஹாஸ்டலில் சேர்ந்து படித்து வந்தேன். இரண்டாம் வருஷம் நடந்து கொண்டிருந்த போது லலிதா ஒரு சின்னக் கடிதம் போட்டிருந்தாள். அவள் தந்தை திடீரென்று இறந்து விட்டதாகவும், அவளும் அவள் தாயாரும் அவர்களுடைய ஊருக்குச் செல்லுவதாகவும் எழுதியிருந்தாள். நான் ஒரு அனுதாபக் கடிதம் மட்டும் எழுதினேன். ஆனால் அது 'விலாஸதார் இல்லை' என்று எனக்கே திரும்பி வந்து விட்டது.

அவள் என் நினைவிலிருந்து சிறிது சிறிதாக மறைந்து விட்டாள். நான் ஊக்கமாகப் படித்து உயர் வகுப்புகளுக்குச் சென்று பட்டம் பெற்றேன்.

கல்லூரியை விட்டதும் ஒரு பத்திரிகையில் சேர்ந்தேன். கொஞ்சம் கொஞ்சமாக அனுபவம் அதிகரித்தது. அந்தத் தினசரியின் சினிமாப் பகுதிக்கு என்னையே பிரதான ஆசிரியராகச் செய்தார்கள். வாரா வாரம் அந்தத் தினசரியில் வெளி வந்த சினிமாப் பகுதியைப் பத்திரிகை வாசகர்கள் ரஸித்துப் படித்தார்கள்.

தனியாகவே ஒரு சினிமா வாரப் பத்திரிகை நடத்தும் யோசனை கூட எங்களுக்கு இருந்தது.

என் மாமாவும் மாமியும் அவர்களுடைய இரண்டு வயதுக் குழந்தையுடன் சென்னைக்கே வந்து விட்டார்கள். நாங்கள் மறுபடியும் ஒன்று சேர்ந்து குடித்தனம் நடத்தத் தொடங்கினோம்.

மாமி எப்பொழுதாவது எதிர்வீட்டு லலிதாவைப் பற்றி விசாரிப்பாள். அவளைப் பற்றி எனக்குத் தெரிந்திருந்ததை நானும் கூறுவேன்.

"ஐயோ, பாவம்! நல்ல பெண்" என்று அனுதாபப் படுவாள் என் மாமி. அதற்குமேல் நாங்கள் அவளை மறந்து விடுவோம்.

* * *

திடீரென்று ஒரு நாள் பஸ்ஸில் லலிதாவை நான் சந்தித்தேன்.

"நீங்களா?" என்று லலிதா என்னைப் பார்த்து ஆச்சரியத்தோடு கேட்டாள். பஸ்ஸிலிருந்த அத்தனை பேரும் எங்களிருவரையும் விழித்துப் பார்த்தார்கள். இந்த ஐந்து வருஷ காலத்தில் தான் லலிதா எவ்வளவு மாறிப் போயிருந்தாள்! ஐந்தாறு வருஷங்களுக்குமுன் இவ்வளவு அழகையும் எங்கே ஒளித்து வைத்திருந்தாள் என்று நான் ஆச்சரியமடைந்தேன்.

உண்மையாக, அச்சமயம் அவள் என்னோடு பேசியதைக் குறித்து நான் கர்வம் கொண்டேன்.

"லலிதா! சௌக்கியமா? அம்மா சௌக்கியமா? நீங்கள் எங்கே யிருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"இங்கேதான் மயிலாப்பூரில் இருக்கிறோம். இப்பொழுது என்னோடு வர வேண்டும். அம்மா உங்களைப் பார்த்து ரொம்ப சந்தோஷப் படுவாள்" என்று அடுக்கிக் கொண்டே போனாள் லலிதா.

எனக்கு அவசர வேலை யொன்றும் இல்லாததால் அவளுடன் அவர்கள் வீட்டுக்குப் போனேன்.

அவர்கள் இருந்த பாகம் சின்ன இடமா யிருந்தாலும் மிக ஒழுங்காக வைத்துக் கொண்டிருந்தார்கள்.

லலிதா எவ்வளவுக் கெவ்வளவு அதிக அழகோடும், மாறுதலுடனும் தோன்றினாளோ, அதற்கு மாறாக அவளுடைய தாயார் காட்சியளித்தாள். துன்பத்தின் ரேகைகள் அவள் முகத்தில் படர்ந்திருந்தன.

என்னைக் கண்டதும், "வாப்பா, சேது!" என்று வரவேற்ருள். அவளுடைய கண்கள் வறண்டு, வற்றிப் போனது போல் தோன்றிற்று. லலிதா முக மலர்ச்சியுடன் ஒரு சின்ன 'ஸ்டூலை'ப் போட்டு உட்காரச் சொன்னுள். பிறகு தாயாரும், பெண்ணுமாகச் சேர்ந்து தங்கள் கதையை விவரமாகச் சொன்னுர்கள்.

எஸ். எஸ். எல். ஸி வரை எப்படியோ அவளைப் படிக்க வைத்து விட்டதாகவும், அதற்குமேல் அவளுக்கு விவாகம் செய்து விட எவ்வளவோ முயற்சி செய்ததாகவும், லலிதா தான் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை யென்றும், சம்பாதிக்கப் போவதாகப் பிடிவாதம் செய்து வந்ததாகவும் அவளுடைய தாயார் குறை கூறினுள்.

"லலிதாவுக்கு நீதான் புத்திசொல்லணும். கல்யாணம் பண்ணிக் கொண்டு, என் குறை தீரும் வழியைப் பார்க்கச் சொல்லு. இவள் சம்பாதித்து என்ன ஆக வேண்டும்?" என்று அவள் கூறினுள்.

லலிதா குறுக்கிட்டு, "என்ன அம்மா! விஷயம் தெரியாமல் பேசுகிருயே. கல்யாணம் செய்வ தென்ருல் சுலபமாக முடிந்து விடுமா? பணம் வேண்டாமா? 'பணம் வேண்டாம். பெண் போதும்' என்று சொல்லிக் கொண்டு யாராவது வந்தால் பரவாயில்லை" என்ருள்.

அவள் சும்மா பேச வில்லை. பணமின்மையை அவளுடைய வருத்தம் தோய்ந்த முகம் காட்டிற்று.

"கொஞ்சம் இரு. காப்பி கொண்டு வருகிறேன்" என்று கூறி, தோட்டத்துப் பக்கம் இருந்த சமையலறைக்குச் சென்ருள் அவள் தாயார். நானும் லலிதாவும் தான் இருந்தோம்.

லலிதாவின் கண்ணிமை ஓரங்களில் நீர்த் துளிகள் துளிர்த்து நின்றன.

"லலிதா! ஏன் இப்படி?" என்று திடுக்கிட்டுக் கேட்டேன்.

"எனக்கு நீங்கள்தான் ஒரு வழி செய்ய வேண்டும். முன்னே சின்ன வயசில் உங்களைக் கேட்டுக் கொண்டு தான் எல்லாம் செய்தேன். இப்பொழுதும் நீங்களே ஏதாவது சொல்லுங்கள். அதன்படி செய்கிறேன்" என்ருள். அவள் குரலில் தடுமாற்றம் இருந்தது. மேலும் என்னிடமிருந்து எதையோ எதிர் பார்க்கிருள் என்றும் தோன்றியது.

ஆயினும் அதைப் புரிந்து கொள்ளாமல் நான், "லலிதா! நீ கல்யாணம் செய்து கொண்டால் உன் அம்மாவுக்குச் சந்தோஷமா யிருக்கும். உன் அம்மாவின் மகிழ்ச்சி உன் மகிழ்ச்சி யில்லையா?" என்றேன்.

"நான் என்ன செய்வது? நீங்களும் விஷயம் தெரியாமல் பேசுகிறீர்கள். பணத்தைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

எனக்கும் அதுதான் தெரியவில்லை.

நான் பதில் சொல்வதற்குள் அவளே சொல்லி விட்டாள். "நான் சினிமாவில் நடிப்பதென்று தீர்மானித்து விட்டேன். அது ஒன்றுதான் பணமும் தரும். என் அம்மாவின் விருப்பமும் ஈடேறும். அதற்கு நீங்கள் ஏதாவது ஒத்தாசை செய்தால் சரி" என்ருள்.

அந்தச் சமயத்தில் அவள் சொன்ன வழிதான் சரி யென்று எனக்கும் தோன்றியது. "லலிதா! நான் அதற்கான ஏற்பாடு செய்கிறேன்" என்று பதில் கூறினேன்.

அதற்குள் அவள் அம்மாவும் காப்பியைக் கொண்டு வந்தாள். அதைக் குடித்து விட்டு, என் மாமா, மாமியைப் பற்றி யெல்லாம் பேசினேம். அவர்களை எங்கள் வீட்டுக்கு வரச் சொல்லி அழைத்து விட்டு, நான் வீட்டுக்குத் திரும்பினேன்.

* * *

காலம் வேகமாகச் சென்றது. என்னுடைய சிறிய முயற்சியால் லலிதாவுக்கு ஒரு சின்ன சான்ஸ் கிடைத்தது. அதிர்ஷ்டம் கைகூடி வரவே,

15-6-48 அன்று கலைகளுக்கு இருப்பிடமான ராஜா சர். அண்ணாமலை செட்டியார் காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம்.

தாம் உயிர் வாழ்ந்திருந்தவரை தமிழுக்காகவும், கலைக்காகவும் எவ்வளவோ தன்கொடைகளை அளித்ததுடன், வேறு பல விதங்களிலும் சிறந்த தொண்டாற்றி வந்தார்.

கன்னடர்களுக்கும், தெலுங்கர்களுக்கும், மலையாளிகளுக்கும் தனித்தனி பல்கலைக் கழகங்கள் இருந்தும், தமிழர்கென்று ஒன்று இல்லாமலிருந்ததைக் கண்டு அண்ணாமலை பல்கலைக் கழகத்தை நிறுவினார். இன்று அண்ணாமலை 'யூனிவர்ஸிடி' பிரசித்தி பெற்று விளங்குகிறது.

அதே போல தமிழ் நாட்டில் தமிழ்ப் பாடல்களுக்கு இழைக்கப்பட்டு வந்த அநீதியைக்கண்டு வெகுண்டெழுந்தார். தமிழிசை இயக்கத்தைத் தொடங்கினார். இன்று 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம்' கேட்கிறதென்றால், அதற்கு ராஜா சர். அவர்களின் தொண்டு முக்கிய காரணமாகும். தமிழ்ப் பாடல்களைப் பரப்புவதில் எத்தனையோ எதிர்ப்புகளைச் சமாளித்துக் கொண்டார். அதே சமயத்தில் பல வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களை 'தமிழிசை' மூலம் ஒன்று படுத்தினார்.

இன்னும் எத்தனை எத்தனையோ அரிய தொண்டுகளாற்றிய ராஜா சர். அவர்களின் பிரிவினால் வருந்தும் அவர் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதே படத்தின் கதா நாயகியாக நடித்துக் கொண்டிருந்த நடி விலகிக் கொண்டாள். ஆகவே லலிதாவே—பிரேம குமாரி என்ற புதுப் பெயருடன்—கதா நாயகியானாள்.

படமும் வெளி வந்தது. எல்லோரும் பிரேம குமாரியைப். புகழ்ந்தார்கள். ஆபாசக் காட்சிகளில் அவள் துணிச்சலுடன் நடித்ததை ஒரு விமர்சகர் ரொம்பவும் பாராட்டி யிருந்தார். ஆயினும் என் பேனா முனையில் பிரேம குமாரியைத் தாக்கினேன். அதே சமயத்தில் லலிதாவிடம் என் மனம் இரக்கம் கொண்டது. அவளை விமர்சனத்துடன் சென்று பார்த்தேன்.

அந்த மாலைக் காட்சி என் நினைவை விட்டு அகலவே அகலாது. அன்று தான் நான் லலிதாவின் மனதை அறிந்து கொள்ள முடிந்தது. 'விஷயம் தெரியாமல்' அவள் அன்னையும், நானும் செய்து வந்த தவறை அன்றே உணர்ந்தோம்.

என்னைக் கண்டதும் பிரேம குமாரி என்ற ஹோதாவில் கை கூப்பி வணக்கம் செய்தாள்.

"மிஸ். பிரேம குமாரி! உங்களைப் பேட்டி காண வந்திருக்கிறேன்" என்று சிரித்தவாறு கூறினேன்.

அவளும் சிரித்துக் கொண்டே, "பிரேம குமாரி செத்துப் போய் விட்டாள். ஆகவே, அவள் உங்சளுக்குப் பேட்டி கொடுக்க முடியாததைப் பற்றி வருந்துகிறேன்" என்றாள்.

"இது என்ன விபரீதம்!" என்றேன், திடுக்கிட்டு.

"விபரீதமென்ன? லலிதா எதற்காகப் பிரேம குமாரியாக மாறினாள் என்பது உங்களுக்குத் தெரிந்தது தானே? அந்தக் காரியம் முடிந்து விட்டது. பிரேம குமாரி மறுபடியும் உங்கள் லலிதாவாகி விட்டாள்" என்றாள்.

"அது சரி, லலிதா, என் விமரிசனத்தைப் படித்தாயா?" என்று அவளைக் கேட்டேன்.

"இல்லையே!" என்று கூறி, என்னிடமிருந்த பத்திரிகையை வாங்கிப் படித்தாள். படித்து முடித்ததும் திருப்பிக் கொடுத்து விட்டு, சிறிது நேரம் பேசாமலிருந்தாள்.

"என்ன லலிதா! என் மீது வருத்தமா?" என்று கேட்டேன்.

அவள் தலை நிமிர்ந்து என்னை நோக்கினாள். "நான் ஏன் வருத்தப்பட வேண்டும்? பிரேம குமாரியல்லவா வருத்தமோ, கோபமோ அடைய வேண்டும்? அதுவும் அல்லாமல் என்னைப் பிரேம குமாரியாக்கின நீங்கள் வருத்தப்பட வேண்டும்" என்றாள்.

"நான் என்ன செய்வது லலிதா? உன் இஷ்டப்படி தானே நடந்து கொண்டேன்" என்றேன்.

"என் இஷ்டப்படியா நடந்து கொண்டீர்கள்?" என்று கேட்டு விட்டு என்னை உற்று நோக்கினாள். அவள் கண்கள் பிரகாசித்தன.

"என் இஷ்டப்படி நடந்திருந்தால் நான் பிரேம குமாரியாகி, உங்கள் வெறுப்புக்கு ஆளாகியிருக்க மாட்டேன். பெண்கள் கண்டு தலை குனியும்படியான நிலைமைக்கு என்னை உட்படுத்திக் கொண்டிருக்க மாட்டேன்......சிறு வயதில் எனக்கு நீங்கள் எல்லா விஷயங்களிலும் சரியான வழியைக் காட்டினீர்கள். அதைப் போலவே அந்தச் சமயமும் சரியான வழியைக் காட்டுவீர்கள் என்று நம்பினேன். நீங்கள் தான் என்னை ஏமாற்றி விட்டீர்கள்" என்று பொரிந்து தள்ளினாள்.

எனக்கு ஒரு கணம் அவள் சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் விளங்கவில்லை. அவள் மேலும் தொடர்ந்து பேசினாள்:

"...என் வாழ்க்கை முழுவதும் நீங்கள் என் வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று விரும்பினேன். அதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைத்தேன். அந்த விஷயத்தில் தான் நான் பெரிய ஏமாற்றத்துக்கு ஆளாக நேரிட்டது. உங்களிடம் நேரிடையாகச் சொல்லவும் அப்பொழுது வெட்கப்பட்டேன். பயமாகவும் இருந்தது...என் தாயாரோ என்னைவிடக் கோழையாக இருந்தாள். ஆயினும் அவளுடைய விருப்பம் ஈடேற—நான் மணந்து கொண்டு வாழ்வதை அவள் பார்க்க வேண்டுமானால்—இந்த வழிதான் எனக்குச் சரியெனத் தோன்றியது. அதில் ஈடுபட்ட பிறகல்லவா அதிலிருந்த ஆபத்து விளங்கிற்று?" என்று கூறி நிறுத்தினாள்.

நான் குறுக்கிட்டேன். "லலிதா, ஏன் பதட்டமடைகிறாய்? இப்போது என்ன குடி முழுகி விட்டது? நீ சொன்னதுபோல் பிரேம குமாரி—நான் தாக்கி எழுதியிருக்கும்—பொது மக்கள் கண்டு பல்லை யிளிக்கும்—பிரேம குமாரி இறந்துபோனது உண்மையே...உன்னை லலிதாவாக நான் இப்பொழுதே ஏற்றுக் கொள்ளத் தயார்!" என்றேன்.

அவள் திடுக்கிட்டு என்னைப் பார்த்தாள். "என்ன? உண்மையாகச் சொல்கிறீர்களா?" என்றாள்.

"ஆம், லலிதா! உண்மையாகவே உன்னைக் கல்யாணம் செய்து கொள்கிறேன். நமது விவாகம் ஆடம்பரமின்றி நடக்கும்" என்றேன்.

"ஏன் ஒரு மாதிரியாகச் சொல்கிறீர்கள்? எனக்காகவா இந்த முடிவைச் செய்தீர்கள்?" என்று கேட்டாள்.

"இல்லை, லலிதா முன்பே நான் செய்திருக்க வேண்டிய முடிவுதான். அந்தக் காலத்தில் நான் செலுத்திய ஆதிக்கத்தை நீ வணக்கத்துடன் ஏற்றுக் கொண்டதை நான் புரிந்து கொள்ளவில்லை. அதை இன்றும் வரவேற்கிறாய் என்று தெரிந்த பிறகு அதன் அர்த்தத்தை அறிந்து கொண்டு விட்டேன். லலிதா! இவ்வளவு நாள் நான் உன்னை அறிந்து கொள்ளாமலிருந்து விட்டதற்காக என்னை மன்னிக்க வேண்டும்" என்றேன்.

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். அந்தக் காலத்திலேயே ஏதோ ஒரு சக்தியினல் தூண்டப்பட்டு, உங்கள் கட்டளைப்படி நடப்பது என்று தீர்மானித்து, அதன்படியே நடந்து வந்தேன். சினிமாவில் சேர்த்துவிட்ட போதும், 'அது உங்கள் கட்டளை' என்றே சேர்ந்தேன். இனியும் என் மிகுதி நாட்களை உங்கள் இஷ்டப்படி கழிக்கவே விரும்புகிறேன்'' என்ருள்.

எனக்கும் லலிதாவுக்கும் விவாகமாகி சில மாதங்களாகின்றன. இந்த உண்மை தெரிந்தால் வீண்விளம்பரம் ஆகும் என்று சந்தடியின்றி திருநீர்மலைக்குச் சென்று விவாகம் செய்து கொண்டு விட்டோம்.

இவ்வளவு விஷயங்கள் நடந்திருந்த போது நான் ரசிகர்களின் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்லயிருக்கிறது? வெகு நேரம் யோசனை செய்த பிறகு, ஆசிரியரிடம் சென்று எல்லா விஷயங்களையும் சொல்லி விட்டேன்.

"அட, பாவி மனுஷா! இதற்கேனய்யா இவ்வளவு ரகசியம்? சினிமா நடிகையைக் கல்யாணம் செய்து கொள்வதில் என்ன தப்பு இருக்கிறது?'' என்று கேட்டார் அவர்.

"நீங்கள் ஒருவர் அப்படிச் சொல்லலாம். ஆனல் இன்றைய சூழ் நிலையில் மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள்?... மேலும் நான் பிரேம குமாரியை விவாகம் செய்து கொள்ளவில்லையே? லலிதாவைத் தானே கல்யாணம்செய்து கொண்டிருக்கிறேன்'' என்று கூறினேன்.

"அப்பொழுது பிரேம குமாரியைப் பற்றி என்ன எழுதுவது?'' என்று கேட்டார் ஆசிரியர்.

"அவள் செத்துப் போய் விட்டாள்!'' என்று அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னேன்.

"அப்படியே போட்டு விடட்டுமா?'' என்று கேட்டுப் புன்னகை புரிந்தார் அந்தப் பொல்லாத மனிதர்.

"ஆகா, தாராளமாய்!'' என்று கூறிவிட்டு வெளியே வந்தேன்.

கடைசிச் செய்திகள்

ஷண்முகா டாக்கீஸ்

சேலம் தனவந்தர் ஸ்ரீ. எஸ். பரமசிவம் செட்டியார் செவ்வாய்ப் பேட்டை சித்திரச் சாவடி மெயின் ரோடில் புதிதாகக் கட்டி யிருக்கும் ஷண்முகா டாக்கீஸின் திறப்பு விழா இம் மாதம் 10-ந் தேதி யன்று நடைபெற்றதாம்.

"இமயத்தில் நாம்"

டி. கே. எஸ். சகோதரர்கள் ஸ்ரீ. ரா. வெங்கடாசலம் எழுதிய "இமயத்தில் நாம்" என்ற சரித்திர நாடகத்தை இம் மாதம் 24-ந் தேதி கோவை ஷண்முகா அரங்கில் அரங்கேற்றினார்கள். இவ்விழாவிற்கு ஸ்ரீ. கி. ஆ. பெ. விஸ்வநாதம் தலைமை வகித்தார்.

வித்வானுக்கு அபராதம்

நாதஸ்வர வித்வான் டி. என். ராஜரத்தினம்பிள்ளை திருமலையில் சென்ற பிப்ரவரி மாதம் 15-ந் தேதி மதுவிலக்கு விதிகளை மீறி நடந்து கொண்டதற்காக (சித்தூர் அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டால் இம் மாதம் 17-ந் தேதி யன்று) ரூ. 500 அபராதம் விதிக்கப் பட்டிருக்கிறார்.

"குண்டூசி"யின்

சென்னை நகர ஏஜண்டு:

என். எஸ். மணியம் அண்ட் ஸன்ஸ்,

88 சோலையப்பன் தெரு,

சென்னை-21.

நடனசகோதரிகள் கமலா-சரஸ்வதி.

புதிய நடன கோஷ்டி

நாட்டிய நிபுணர் கிருஷ்ணராவ் ஒரு நடன கோஷ்டியைச் சேர்த்திருக்கிறார். இக் கோஷ்டியினர் இம்மாதம் 17-ந் தேதி யன்று சென்னை கோகலே ஹாலில் ஒரு நடன விருந்தளித்தனர். அன்றைய ஆட்டத்தில் கிருஷ்ணராவ் விஸ்வப, கஜலக்ஷ்மி இவர்கள் ஆடிய பஸ்மாஸுர மோஹினி, ஸரஸ்வதியும் கமலாவும் ஆடிய ராதாகிருஷ்ண நடனம், ஸரஸ்வதி ஆடிய கமலாக்ஷி வர்ணம், பத்மாக்ஷி ஆடிய அப்ஸர நடனம் தங்கப்பா ஆடிய மயில் நடனம் ஆகியவை குறிப்பிடத் தக்க அம்சங்களாகும். இந்தக் கோஷ்டி இது போல் அடிக்கடி நமக்கு நடன விருந்துகளை அளிக்குமாக.

வருந்துகிறோம்

என். எஸ். கிருஷ்ணனுக்கும், டி. ஏ. மதுரத்துக்கும் செல்வப் புதல்வியாய் தோன்றிய கலைச் செல்வி இம் மாதம் 18-ந் தேதி யன்று காலமான செய்தி யறிந்து வருந்துகிறோம்.

ஜனா - ஒரு நல்ல பக்திப் படம்

சிறந்த நடிப்பும் இனிய கானமும் நிறைந்தது

“பக்தி உள்ள இடத்தில் சங்கீதம் உண்டு; சங்கீதம் உள்ள இடத்தில் பக்தி உண்டு.” இதற்கு ஒரு உதாரணம் வேண்டுமானால் ‘பக்த ஜனா’ படத்தைக் குறிப்பிடலாம். இப்படத்தில் பக்தியும் சங்கீதமும் அவ்வளவு நெருக்கமாகப் பின்னப்பட்டிருக்கிறது.

ஒரு பக்திமானின் புத்திரியான ஜனாபாய் பால்யத்திலிருந்தே பாண்டுரங்கன் மீது பக்தி கொள்கிறாள். அவளுடைய சிற்றன்னையோ அவளுக்குப் பயித்தியம் பிடித்திருப்பதாக பல வழிகளில் உபத்திரவம் செய்கிறாள். கடைசியில் அவளை வீட்டை விட்டே விரட்டிவிடுகிறாள்.

ஜனா பண்டரீபுரத்தை அடைகிறாள். அங்கு நாமதேவர் அவளுக்கு அபயம் அளிக்கிறார். இது கோயில் சர்வாதிகாரிக்குப் பிடிக்கவில்லை. எப்படியாவது ஜனாவை ஊரை விட்டுத் துறத்திவிட முயற்சிக்கிறார்.

இப்படியிருக்க, கோயிலில் விக்ரஹங்கள் காணாமற் போகின்றன. அவை பிறகு ஜனாவின் அறையில் கண்டுபிடிக்கப்படுகின்றன. “திருடி” என்ற பட்டத்துடன் பிரஷ்டம் செய்யப்படுகிறாள். முடிவில் பாண்டுரங்கன் பிரத்யக்ஷமாகி ஜனா பெரிய பக்தை என்பதை விளக்குகிறார்.

இந்தக் கதையை, ஸீனரியோவாகத் தயாரித்தவர், சுவாரஸ்யம் குன்றாத வகையில், மிக அழகாக அமைத்துக் கொடுத்திருக்கிறார். அதோடு திறமையான டைரெக்ஷனும், கவனம் மிகுந்த எடிட்டிங்கும் சேர்ந்திருப்பதால் படத்தில் விறுவிறுப்பு கெடாமலும், அலுப்பு ஏற்படாமலும் இருக்கிறது.

ஜனாவாகத் தோன்றும் சாந்தகுமாரி குயிலினும் இனிமையாய் பாடியிருக்கிறார். அவருடைய பாட்டுகள் படத்தில் ஏராளமாய் இருப்பதால் திகட்டக்கூடச் செய்கிறது. அவர் தம் பாகத்தை அனுபவித்து நடித்திருக்கிறார் என்று சொல்லுவதைவிட ஜனாவாகவே விளங்குகிறார் என்றே சொல்லிவிடலாம். ஆரம்ப கட்டங்களில் மட்டும் கொஞ்சம் வயது முதிர்ந்த தோற்றம் பொருத்தமாயில்லை என்று குறிப்பிட வேண்டியிருக்கிறது.

பக்திமான் வேஷங்களில் நாகய்யா இணையற்றவர் என்று முன்பே பெயர் வாங்கியிருக்கிறார். இப்படத்திலும் அவர் அப்பெயரைக் காப்பாற்றிக் கொள்ளுகிறார். அவர் நாமதேவரின் வேஷத்தைத் தத்ரூபமாய் நடித்திருக்கிறார்.

ஹொன்னப்பா இப்படத்தில் அநாயாசமாகப் பாடி, நடித்திருக்கிறார். நான்கு பாட்டுகளை மணியாய் பாடியிருக்கிறார். மற்றெல்லாப் படங்களையும்விட இப்படத்தில் அவரது சாரீரம் கணீரென்று பதிவாகி யிருக்கிறது. அதேபோல்தான் நடிப்பும் நன்கு அமைந்திருக்கிறது.

கோயில் அதிகாரியாகத் தோன்றும் பி. ஆர். பந்துலுவின் நடிப்பும் குறிப்பிடத் தக்கது. அவருடைய கீழ் அதிகாரியாக நடிக்கும் கே. சாரங்கபாணியும், அவரது மனைவியாகத் தோன்றும் கே. ஆர்.செல்லமும், கணபதி பட்டும் தங்கள் நடிப்பின்மூலம் நல்ல ஹாஸ்ய விருந்தை அளிக்கின்றனர்.

நாமதேவரின் மனைவியாக நடிக்கும் டி. என். மீனாக்ஷி, அவரது குழந்தைகள், ஜனாவின் தகப்பனாராக நடிக்கும் துரைசாமி ஆகியோர் தங்கள் பாகங்களைப் புரிந்து கொண்டு பொருத்தமாய் நடித்திருக்கின்றனர்.

லலிதா-பத்மினி நடனம் இப்படத்தில் —நடனம் இருக்கவேண்டுமென்பதற்காகவே—அநாவசியமாய் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவர்கள் ஆடும் ராதா கிருஷ்ண நடனம் பரவாயில்லை.

படத்தில் பல பஜனைப் பாட்டுகள் உள்ளன. இவை படத்தின்பக்தி அம்சத்தைச் சோபிக்கச் செய்கின்றன. பாட்டுகளெல்லாம் நல்ல மெட்டுகளில் அமைக்கப்பட்டு, நன்கு பதிவாகி யிருக்கின்றன. சங்கீத டைரெக்ஷன் (ரீமா & நாராயணன்) மிகப் பாராட்டப்பட வேண்டியதாகும். படத்தில் வசனங்கள் பொருத்தமாய் உள்ளன.

ஆடை ஆபரணாதிகளிலும், காக்ஷி அமைப்புகளிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஒலிப்பதிவும் (எச். கிளார்க், ரங்கஸ்வாமி), ஒளிப்பதிவும் (எஸ். என். நாய்க்) உயர்ந்த முறையில் உள்ளன

பிரகதி ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்ட இப்படத்தில் ஆபாசக் காக்ஷிகள் எதுவுமே இல்லாதது பாராட்டத்தக்கது. மொத்தத்தில், பக்த ஜனா டைரெக்டர் பி. புல்லய்யாவுக்கு ஒரு வெற்றியாகும்.

—பி. ஆர். எஸ்.

பிரம்ம லோகம்

பில்ஹணு

"பில்ஹணு"வின் படப்பிடிப்பு முடிந்து எடிட்டிங் நடந்து வருகிறது. கூடிய விரைவில் திரைக்கு வந்து விடும். கே. ஆர். ராமசாமி, ஏ. ஆர். சகுந்தலா, ஜெயஸ்ரீ, பாலசரஸ்வதி, புளிமூட்டை, ஆகியோர் நடிக்கும் இப்படத்தை பி. என். ராவ் டைரெக்ட் செய்கிறார்.

காந்தி கீதை

கண்ணு பிலிம்ஸார் தயாரித்திருக்கும் இந்த துண்டுப் படம் அவர்களுடைய "திருமழிசை ஆழ்வா"ருடன் திரையிடப்படுமெனத் தெரிகிறது. "திருமழிசை ஆழ்வாரை" விரைவில் திரையிட முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

கீதா காந்தி

டைரெக்டர் கே. சுப்ரமண்யம் நெப்டியூன் ஸ்டுடியோவின் கூட்டுறவில் தயாரிக்கும் இப்படத்தின் ஷூட்டிங் அந்த ஸ்டுடியோவில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சமீபத்தில் டி. கே. கோவிந்தன் சம்பந்தப்பட்ட காக்ஷி யொன்று படமாக்கப்பட்டதாம்.

கோகுலதாஸி

சீக்கிரமே திரைக்கு வரப்போகும் படங்களில் "கோகுலதாஸி"யும் ஒன்றாகும். எம். வி. ராஜம்மா, ஹொன்னப்ப பாகவதர்; டி. ஆர். ராமச்சந்திரன், சௌதாமினி ஆகியோர் நடிக்கும் இந்தப் படத்தின் 'எடிட்டிங்'கில் இப்பொழுது டைரெக்டர் சுப்ரமண்யம் முனைந்திருக்கிறார்.

மோஹினி

ஜூபிடரின் அடுத்த வெளியீடு "மோஹினி" தான். மாதுரிதேவி பிரதம பாகத்தில் நடிக்கும் இந்தப் படம் லங்கா சத்யம் டைரெக்ஷனில் தயாராகி முடிவடைந்து விட்டதாம். பீம்சிங் என்ற ஒரு பாத்திரத்தில் ஹாஸ்ய நடிகர் ஸாயிராம் பிரமாதமாக நடித்திருக்கிறாராம்.

கிருஷ்ண விஜயம்

ஜூபிடரின் "கிருஷ்ண விஜய"த்தில் ராதையும், பாலகிருஷ்ணனும் தோன்றும் காக்ஷி சமீபத்தில் படமாக்கப் பட்டதாம். ராதையாக திருச்சூர் பிரேமாவதி நடிக்கும் இந்தப் படத்தை சுந்தர் ராவ் நட்கர்னி டைரெக்ட் செய்கிறார்.

அந்தமான் கைதி

டி. கே. எஸ். பிரதர்ஸ்-ஜூபிடர் கூட்டுத் தயாரிப்பான இந்தப்படத்தின் பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. படத்தை வி. எஸ். நாராயணன் டைரெக்ட்செய்வாரெனத் தெரிகிறது.

ஆதித்தன் கனவு

டி. ஆர். மஹாலிங்கம், திருச்சூர் பிரேமாவதி, ரஜனி முதலியோர் நடிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறதாம்.

போஜன்

இப்படம் திரைக்குவரத் தயாராகி விட்டதாம். எல். எஸ். ராமச்சந்திரன் டைரெக்ஷனில் டி. ஆர், சுந்தரத்தின் மேற்பார்வையில் தயாராகும் இப்படத்தில் பி. எஸ். கோவிந்தனும், வரலக்ஷ்மியும் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர்.

ஸ்ரீ ஆண்டாள்

சூர்யா பிலிம்ஸ் வெளியீடான இப்படத்தில் ஜி. ஆர். ஜீவரத்தினத்தின் பாட்டுகளும், சௌதாமினியின் நாட்டியமும் அபாரமாக அமைந்திருக்கின்றனவாம். டைரெக்டர் வேல்சாமிக் கவி இப்படத்தை சிறந்த முறையில் தயாரித்து முடித்திருக்கிறாராம்.

பிழைக்கும் வழி

டி. எஸ். துரைராஜ்இதுவரை நடித்துள்ள மற்ற படங்களை யெல்லாம் விட "பிழைக்கும் வழி"யில் ரொம்பவும் நன்றாக நடித்திருக்கிறாராம். டி. ஏ. ஜெயலக்ஷ்மியும் "நாம் இருவர்" படத்தில் கிடைத்த புகழை இதில் நிலை நாட்டிக் கொள்வாராம்.

பக்த கும்பரா

சுரபி பிக்சர்ஸாரின் "பக்த கும்பரா" என்ற படத்தின் பாக்கிப் பகுதிகளை பொம்மன் ஈரானி டைரெக்ட் செய்ய மாட்டார் என்று உலவும் செய்திகள் உண்மையல்லவென்று அறிகிறோம். இப்படத்தின் ஷூட்டிங் முடிந்து விட்டது. எடிட்டிங்கையும், நகாஸ் வேலைகளையும் பொம்மனே செய்து வருவதாகத் தெரிகிறது. ஹொன்னப்பா பிரதம பாகத்தில் நடிக்கும் இப்படம் கன்னட தேசத்தில் பிரமாதமான வெற்றியைப் பெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

குண்டூசி டைரி

134245
தேதி

மே 1948

1. ஸ்டுடியோ 'ஸ்டிரைக்' முடிவடைந்தது.
ஜெமினி "சந்திரலேகா" சென்னை பிரபாத்திலும் திரையிடப் பட்டது.

2. ஸிடாடல் "ஞானசௌந்தரி"யின் தணிக்கைக் காக்ஷி நடந்தது.
'ஆனந்த விகடன்' பொழுது போக்குச் சங்கத்தார் "சரஸா" நாடகத்தை சென்னை ரஸிக ரஞ்சனி சபாவில் நடித்தனர்.

5. "சம்ஸார நௌகா" தணிக்கைக் காக்ஷி நடைபெற்றது.
சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் ஒரு தீ விபத்து நேரிட்டது.

6. ஜுபிடர் "அபிமன்யு" வெளியூர்களில் முதன் முதலாய் திரையிடப் பட்டது.

8. ஜகதீஷ் "ராமதாஸ்" வர்த்தகக் காக்ஷி மினர்வாவில் நடைபெற்றது.

9. தென்னிந்திய பிலிம் சேம்பரின் ஒன்பதாவது வருஷப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

11. சர்வதேச பொருளாதார, சமூக, கலா ஸ்தாபனத்தைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் ஷா தென்னிந்திய பிலிம் சேம்பர் அங்கத்தினர்களைச் சந்தித்துப் பேசினார்.

12. அலெக்ஸாண்டர் ஷாவுக்கு டைரெக்டர் சுப்ரமண்யம் தேநீர் விருந்தளித்தார்.

13. அலெக்ஸாண்டர் ஷா நம் மாகாண மந்திரிகளைச் சந்தித்தார்.

14. "சம்ஸார நௌகா" கடலூர் முத்தையா டாக்கீஸில் முதன் முதலாக வெளியிடப் பட்டது.
தென்னிந்திய சினிமாத் தொழிலாளர் சங்கத்தின் முதல் வருஷாந்திரக் கூட்டம் நடைபெற்றது.

15. நடராஜ கலா மண்டலியின் ஆரம்ப விழாவும், "நாட்டியக்காரி" நாடகமும் நடைபெற்றன.

16. ஸிடாடல் "ஞான சௌந்தரி"யின் பத்திரிகைக் காக்ஷி பாரகனில் நடைபெற்றது.
டி. எஸ். ராஜலக்ஷ்மியின் பரத நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது.

21. ஸிடாடல் "ஞானசௌந்தரி" சென்னை பாரகனிலும், வெளியூர்களிலும் திரையிடப்பட்டது.
ஏ. கே. செட்டியாரின் வீட்டில் ஒரு தீ விபத்து நேரிட்டது.

23. "சம்ஸார நௌகா" வர்த்தகக் காக்ஷி பாரகனில் நடைபெற்றது.

25. "பக்த ஜனா" தணிக்கைக் காக்ஷி நடைபெற்றது.

26. "சம்ஸார நௌகா" பத்திரிகைக் காக்ஷி ஸாகர் டாக்கீஸில் நடைபெற்றது.
ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயனுக்கு பதில் ஸ்ரீமதி மஞ்சு பாஷினி தணிக்கை போர்டு அங்கத்தினரானார்.

27. சியாமளா பிக்சர்ஸ் "இன்ப வல்லி"யின் ஷூட்டிங் ஆரம்பவிழா சேலம் ரத்னா ஸ்டுடியோவில் நடைபெற்றது.

29. ஸெகரட்டரியேட்டில் நடைபெற்ற பிலிம் தணிக்கை போர்டு கூட்டத்தில் மந்திரி கனம் டி. எஸ். அவினாசிலிங்கம் பேசினார்.

Printed by P. Arunachalam at the Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi), at 246, Thambu Chetty Steet, Madras 1.

கிருஷ்ண பக்தி
டைரக்ஷன்: R. S. மணி
பி. யு. சின்னப்பா, டி. ஆர். ராஜகுமாரி
முதலிய பல
பிரபல நக்ஷத்திரங்கள் நடித்த படம்
★
விரைவில் பூர்த்தியாகி வருகிறது
கிருஷ்ணா பிக்சர்ஸ்
சென்னை .17.
நவீன்

GUNDOOSI
Regd. No. M. 492
HAIRODINE
வசீகர வதனம்
வனப்பு
மிக்க கூந்தல்
ஹேரோடின்
ஜீவ சக்தி
வாய்ந்த கூந்தல்
தைலம்
CARNATIC CHEMICAL WORKS MADRAS
சென்னை ஏஜண்டுகள்: கோல்டுவின் & கோ., 50 பந்தர் தெரு சென்னை
ஸ்டாகிஸ்ட்டுகள்: பட்ஸ்டிராபர், எஸ்பிளனேட், சென்னை
ஸ்கூல் வியூ ஸ்டோர்ஸ்: 96, தம்புசெட்டி தெரு, சென்னை.